விலை
ரூபா 20
பக்கங்கள்
28

# உதயன்

சுடர் 31 கதிர் 135 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 27, சனிக்கிழமை 09.04.2016

இன்று ஜாதிக சம்பத சுப்பர் பரிசு
ரூ.20,862,832.00
புதன் மற்றும் சனிக்கிழமை சீட்டிழுக்கப்படும் - ஜாதிக சம்பத
அதிகமதிகமாக கொள்வனவு செய்து
அதிர்ஷ்டசாலியாகுங்கள்
NLB
NATIONAL LOTTERIES BOARD

# தீர்வு குறித்து இறுதி முடிவு நாடாளுமன்றமே எடுக்கும்

## வடக்கு அரசின் வரைவு தொடர்பில் அரசமைப்புக் குழுத் தலைவர் கருத்து

கொழும்பு, ஏப்ரல் 9
அரசியல் தீர்வு தொடர்பில் எத்தகைய கருத்தையும் வடக்கு மாகாண சபை வெளியிட முடியும். ஆனால் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றமே இறுதி முடிவை எடுக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அரசமைப்புக் குழுவின் தலைவருமான ஜயம்பதி விக்கிரமரட்ண.

வடக்கு மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட வரைவு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாகாண சபையில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரைவில் அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகள், புதிய அரசமைப்பில் எதிர்பார்க்கும் விடயங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.



இது தொடர்பில் ஜயம்பதி விக்கிரமரட்ணவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் ஜனநாயக சூழல் மலர்ந்துள்ளது. இதனால் கருத்துச் சுதந்திரமும் இருக்கிறது. அந்த வகையில், வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது கருத்தை வெளியிட முடியும். வடக்கு மாகாண சபைக்கும் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும். ஏனைய மாகாணங்களுக்கும் இப்படித்தான் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டம் பற்றி ஆராய வேண்டும். அதை முழுமையாகப் படித்த பின்னரே உறுதியான கருத்தை வெளியிட முடியும். எது எப்படியிருந்தபோதிலும், நாடாளுமன்றத்தினூடாகவே இறுதி முடிவு எடுக்கப்படும் - என்றார். (த-வ-5)

முச்சந்தி முரளி



அப்ப பிறகென்னத்துக்கு கருத்துக் கேக்கிறியள்...

## பற்றுச்சீட்டின்றி நிதி சேகரித்த 4 சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

### விசாரணையின் பின் கட்டாய இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 9
புத்தாண்டு நிதி சேகரிப்பின்போது பற்றுச்சீட்டு வழங்காத சமுர்த்தி முகாமையாளர் உள்ளிட்ட 4 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி வங்கி ஒன்றின் முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூன்று பேர் புத்தாண்டு நிதி சேகரிப்பின்போது, பொது மக்களுக்கு பற்றுச்சீட்டுவழங்காமல் நிதிசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் பக். 26

## வடக்கு அரசின் யோசனைக்கு உலமாக் கட்சி கடும் கண்டனம்

### கொடிய விசத்துடன் சீனி மிட்டாய் கலக்கப்பட்டது எனவும் வர்ணிப்பு

கொழும்பு, ஏப். 9
வடக்கு - கிழக்கை இணைத்து அதற்குள் முஸ்லிம்களுக்குத் தன்னாட்சி பிராந்திய சபை வழங்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சபையால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவானது கொடிய விசத்துடன் சீனி மிட்டாய் கலக்கப்பட்டது போன்ற வக்கிரத் தனமான செயலாகும்.

இதனை எதிர்த்து கிழக்கு மாகாண சபை தீர்மாணம் நிறைவேற்ற வேண்டும் என்று உலமாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் உலமாக் கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் மௌலவி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். பக். 23

## பிராந்தியப் பாதுகாப்பில் அரசு மிகுந்த அர்ப்பணிப்பு

### ஜேர்மனியத் தூதுக் குழுவிடம் எடுத்துரைத்தார் மைத்திரி

கொழும்பு, ஏப். 9
தேசிய மற்றும் பிராந்தியப் பாதுகாப்புத் தொடர்பில், இலங்கை மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டுடனான உறவு இன்னொரு நாட்டின் மீது எந்தவித மானமோசமான தாக்கத்தையும் கொண்டிருக்கக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையிலேயே, அரசின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மன் நாடாளுமன்றத் தூதுக் குழுவொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் மைத்திரிபால சிறிசேன பக். 25

## ரயிலிலிருந்து விழுந்து குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.9
வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று மாலை 6 மணியளவில் வந்த ரயிலிலிருந்து விழுந்து குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை காங்கேசன்துறை நோக்கிச் சென்ற உத்தர தேவி ரயிலில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் பக். 23

## மகிந்த போன்று குடும்ப ஆட்சி நடத்திக் கேவலப்படமாட்டேன்

### அதிகாரத்தை நாட்டின் நன்மைக்கே பயன்படுத்துவேன் என்கிறார் மைத்திரி

கொழும்பு, ஏப்.9
கடந்த ஆட்சியில் இருந்தவர் (மகிந்த ராஜபக்ச) போல், குடும்ப ஆட்சி நடத்தி நான் கேவலப்படமாட்டேன். மாற்றத்தை விரும்பி மக்கள் எனக்கு வழங்கிய அதிகாரத்தை நாட்டின் நன்மைக்காகவே பயன்படுத்துவேன். இதில் நான் உறுதியாகவே உள்ளேன்.



இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜனநாயக ரீதியிலான சுதந்திர நாடொன்றில் மக்களால் தலைமைத்துவத்துக்கும் கட்சிக்கும் வழங்கப்படும் அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும். இதில் தனக்குள்ள அந்தஸ்து யாது என்பது பற்றி சகல பக். 06

## ராணுவத்துக்கெனக் காணிகள் பறிப்பதை எதிர்த்துப் போராட்டம்

### யாழ்ப்பாணத்தில் நில அளவைத் திணைக்களம் முற்றுகை

யாழ்ப்பாணம், ஏப்.9
வடக்கில் மீண்டும் தலைதூக்கும் படையினரின் தேவைக்காக நிலங்களை அபகரிக்கும் செயலைக் கண்டித்து, மக்களுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இணைந்து நேற்றைய தினம் யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்களம் முன்பாக முற்றுகையிட்டு பக். 26



## பாதுகாப்பற்ற கிணற்றினுள்ளே விழுந்த பாலகன் பரிதாபச் சாவு

### பெற்றோருக்கு எதிராக வழக்கு?

யாழ்ப்பாணம், ஏப். 9
விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் பாதுகாப்புக் கட்டு எதுவுமின்றியிருந்த கிணற்றில் தவறி விழுந்து நீரில்மூழ்கி உயிரிழந்தான்.

இந்தப் பரிதாபச் சம்பவம் வட்டுக்கோட்டை-அராலி தெற்கு துறை முகத்தடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த சசிதரன் சுதர்சன் என்ற மூன்றரை வயதுச் சிறுவனே உயிரிழந்தான்.

பெற்றோரின் அக்கறையீனமே இதற்குக் காரணம் என்ற அடிப்படையில் வழக்குத் தொடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவனை அவனது பக். 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை உறுப்பினர் நியமனம் ஈ.பி.டி.பிக்கு உரியதே

## அதனை மீண்டும் தமக்கு வழங்குமாறு டக்ளஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 9

தமது கட்சிக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் நியமனத்தை வழங்குமாறு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரிடம், ஈ.பி.டி.பி கோரிக்கை விடுத்துள்ளது. எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில், ஈ.பி.டி.பி போட்டியிடுவது தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக மகிந்த அமரவீர அண்மையில் பொறுப்பேற்றிருந்தார். சுதந்திர முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளுடன் அவர் பேச்சுக்களை நடத்தி வருகின்றார். அதனடிப்படையில் ஈ.பி.டி.பியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பேச்சு இடம்பெற்றது.

இந்தப் பேச்சுக்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர மற்றும் டிலான் பெரேரா ஆகியோரும், ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோரும் பங்கெடுத்திருந்தனர்.

இதன்போது, தமது கட்சிக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் நியமனத்தை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, ஈ.பி.டி.பி. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது. இதில் வெற்றி பெற்றிருந்த இ.அங்கஜன், கடந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவரது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வெற்றிடத்துக்கு விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்தாக இருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படாமல், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். இதுவே இந்தச் சந்திப்பின்போது ஈ.பி.டி.பியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஈ.பி.டி.பி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து செயற்பட்டமையினால் ஏற்பட்ட சாதக – பாதகங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதா என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆனாலும் எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

(த-5)

## புது வருடப் பிறப்புக்கு விசேட பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

தமிழ் சிங்கள புது வருடப்பிறப்புக் காலப் பகுதியில் பொதுமக்களின் நலன்கருதி விசேடமாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் இயக்கப்படவுள்ளதாக யாழ். சாலை முகாமையாளர் எஸ்.குலபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு மக்கள் அதிகளவில் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். இவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டும், போக்குவரத்து நெரிசல்களைக் குறைக்கும் முகமாகவும் இந்த வருடம் நாடு முழுவதும் 4 ஆயிரத்து 500 இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளன. யாழில் இருந்து தூர சேவையில் ஈடுபடுவதற்கு 22 பஸ்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன. தூரசேவையில் ஈடுபடும் பஸ்களில் ஆசனப்பதிவுகள் முடிவடைந்ததும் தொடர்ச்சியாக அடுத்த பஸ்ஸையும் இயக்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. எனினும் உள்ளூர்ப் பகுதியில் அதிகளவான மேலதிக பஸ்கள் இயக்கப்படவில்லை. மாறாகத் தற்போது சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் தொடர்ச்சியாகச் சேவையில் ஈடுபடவுள்ளன. புதுவருடக் கொண்டாட்டம் நிறைவடையும் வரை இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் மக்களின் நலனுக்காகத் தொடர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன–என்றார்.

இதேவேளை, வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர், விசேட பஸ்களை இயக்குவதற்கான பாதை அனுமதிகள் தமக்குக் கிடைக்கவில்லை. தற்போது சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையே புதுவருட கால மக்களைச் சுமந்து செல்வதற்குப் போதுமானதாக உள்ளது. ஏற்கனவே குறைந்த நேர இடைவெளியில் பல பஸ்கள் இயக்கப்படுவதால் ஏற்படும் சிக்கல்களைக் கருத்திற் கொண்டும் புதிதாக விசேட பஸ்களை இயக்கவில்லை என்றார். (கு-ஐ-ரி5)

## காலைக் கடன் கழிக்கச் சென்றவர் பாம்பினால் கடியுண்டு உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப்.9

காலைக்கடன்கழிப்பதற்காகவெளியில் சென்ற ஓய்வுபெற்ற தபால் ஊழியரான ஒருவர் பாம்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முல்லைத்தீவு, அளம்பில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அளம்பில் பகுதியைச் சேர்ந்த இலியாஸ் பஸ்தியாம்பிள்ளை (வயது-70) என்ற ஓய்வு பெற்ற தபால் ஊழியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை, காலைக் கடன் கழிப்பதற்காக வெளியே சென்றிருந்தவேளை பற்றையில் இருந்த பாம்பு தபால் ஊழியரைத் தீண்டியுள்ளது. இது தொடர்பாக ஊழியர் உடனடியாக வீட்டாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து அவரை அருகேயுள்ள செம்மலை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் உடனடியாக நோயாளர் காவு வண்டியில் மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

இதனை அடுத்து உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் நேற்றுப் பிற்பகல் கையளிக்கப்பட்டுள்ளது.

(கு-ஐ-21-102)

# வெளியூர் வியாபாரிகளை தடுப்பதற்கு நடவடிக்கை

## சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்தில் உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்படாதவாறு

யாழ்ப்பாணம், ஏப்.9

இந்த வருடமும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வெளியூர் வியாபாரிகள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ள நிலையில், இவர்களால் மாவட்டத்தில் உள்ள வியாபாரிகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் வர்த்தகர் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

வெளியூர் நடைபாதை வியாபாரிகளின் வருகையால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு வருமானம் கிடைக்கின்றபோதிலும், பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகள் சந்தைகளை உள்ளூர் வியாபாரிகளுக்குக் குத்தகைக்கு வழங்கியுள்ளன.

எனினும் வணிகர் கழகங்களின் கூற்றுக்குச் செவிசாய்க்காமல் வெளியூர் வியாபாரிகள் நடந்து கொள்கின்றனர் எனச் சந்தைகளைக் குத்தகைக்கு எடுத்தோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பல ஆயிரம் ரூபாவுக்குக் குத்தகை எடுக்கப்பட்ட இந்த வியாபாரக் கடைகளில் தினமும் பெருமளவு வருமானம் கிடைப்பதில்லை. தைப்பொங்கல், சித்திரை வருடம் மற்றும் தீபாவளி, கிறிஸ்மஸ் போன்ற பண்டிகைக் காலப் பகுதிகளில் மட்டுமே வருமானம் கிடைக்கின்றது.

அந்தக் காலப்பகுதிகளில் வெளியூர் அங்காடி வியாபாரிகள் வருகை தருகின்றனர். அவர்கள், வியாபாரம் செய்யும் நாள்களுக்கு உரிய கட்டணத்தை மட்டும் செலுத்துகின்றனர் என உள்ளூர் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களில் பலரிடம் வெளியூர் நடைபாதை வியாபாரிகளின் வருகையைத் தடை செய்வது தொடர்பாகக் கேட்டபோது,

எங்களைப் பொறுத்தவரையில் வருடத்தில் ஒருதடவை தான் புது உடைகளை எடுக்க முடியும். கூலி வேலைகள் கூடக் கிடைக்காத நிலையில் எத்தனையோ குடும்பங்கள் நாளாந்தச் சீவியத்திற்கே கஷ்டப்படுகின்றன. ஏனெனில் கடைகளில் விற்கப்படும் ஓர் உடுப்பு விலையின் பெறுமதியில் நடைபாதை வியாபாரிகளிடம் ஒரு குடும்பத்துக்கே உடுப்பு எடுக்கக் கூடியதாக உள்ளது.

எமது வியாபாரிகளும் விலைக் கட்டுப்பாட்டை உரிய அளவில் மேற்கொண்டால் உடைகளை அவர்களிடம் கொள்முதல் செய்யமுடியும்–என்றனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.ஜெயசேகரம்,

தென்னிலங்கை வியாபாரிகள், இந்தியச் சந்தையாளர்களை வடக்கு மாகாணத்தில் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபையும், உள்ளூராட்சி அமைச்சும் இணைந்தே செயற்படுத்தல் வேண்டும். உண்மையில் இவர்களின் செயற்பாடுகளால் வடக்கு மாகாண வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

வருடா வருடம் இவர்களின் சந்தைகள் அதிகரித்துச் செல்வது எம்முடைய வியாபாரிகளை நாமே புறக்கணிப்பது போன்றதாகும்.

அண்மைக் காலங்களில் யாழ். நகர்ப் பகுதியில் இவர்களின் செயற்பாடுகள் குறைந்துள்ளன. நகருக்கு வெளிப் பகுதியில் தான் தற்போது அதிகளவு அங்காடிகளைக் காணமுடிகின்றது. இது ஆரோக்கியமானது அல்ல. எனவே தமது பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்படும் இதுபோன்ற அங்காடிகள் தொடர்பாக உரிய பிரதேச சபை அதிகாரிகள் கவனத்துடன் செயற்படுவதுடன், வடக்கு மாகாண சபையினர், உள்ளூராட்சி அமைச்சுக்கள் என்பன உள்ளூராட்சிச் சபைகளூடாகத் தென்னிலங்கை வியாபாரிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் –என்றார்.

தென்னிலங்கை வியாபாரிகள் தொடர்பில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் கூறுகையில்,

இதுவரை எம்மிடம் எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கவில்லை, வர்த்தகர் சங்கத்தினரோ, வியாபாரிகளோ கடித மூலமாக அறியத்தரவில்லை.

எனினும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தென்னிலங்கை அங்காடி வியாபாரிகள் வருகை தரும் பட்சத்தில் வழமையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

இவர்களுக்கான இடம் ஒதுக்கப்படும். எனினும் மாவட்டத்தின் பிற பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள அங்காடி நிலையங்கள் தொடர்பாகக் குறித்த பிரதேச சபைகள் கவனம் செலுத்துவது முக்கியம். அனுமதிகளைப் பெறாமல் தென்னிலங்கை வியாபாரிகள் அங்காடிகளை அமைப்பதை ஏற்க முடியாது – என்றார்.

(கு-ஐ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒயில் கலப்பு வழக்கு 19க்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிணற்று நீரில் கழிவு ஒயில் கலந்த தான வழக்கு மல்லாகம் நீதி மன்றில் நேற்று இடம் பெற்றது.

நீதிமன்ற விடுமுறை காலப் பகுதி என்பதால், குறித்த வழக்கு நீதிவானின் சமாதான அறைக்குள் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்குக்காக மாகாண அமைச்சர் ஐங் கரநேசன் மற்றும் வழக்குடன் தொடர்புபடும் அதிகாரிகள் இதன்போது முன்னிலையாகியிருந்தனர். சுமார் அரைமணிநேரம் நீதிவானின் சமாதான அறையில் இந்த வழக் குப் பற்றி ஆராயப்பட்டது. பின்னர் குறித்த வழக்கை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

(த-வ-4)




31ம் நாள் நினைவு தின நிகழ்வு அழைப்பு
(அந்தியேட்டி அழைப்பு)

தோற்றம்
08.04.1939

இறைவனடி
09.03.2016

திருமதி கமலாதேவி தர்மலிங்கம் - B.Sc (Hons), Dip. in. Ed
Chundikuli Girls College

09.03.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த அமரர் கமலாதேவி தர்மலிங்கம் அவர்களின் 31ம் நாள் நினைவு தின **ஆத்ம சாந்தி பிராத்தனை** நாளை (10.04.2016) நடைபெற உள்ளது.

பிறந்த இடம் வேலணையில் - அன்னாரின் இல்லத்தில்
காலம் : 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 11.00 - 02.00
இடம் : திரு - பதி, பிரதான வீதி, (மணியகாரன் வீட்டிற்க்கு அருகாமையில்,)
வேலணை கிழக்கு, வேலணை

இந்த அழைப்பை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அன்னாரின் ஆத்மசாந்தி பிராத்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ்பல்கலைக்கழகம்,
மற்றும் குடும்பத்தினர். 077 322 3224



## விற்பனைக்கு

டொல்பின் வான் 57XXXX
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 978 9223



இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 08.04.2016 | 1965 | சிவப்பு |

வெற்றி இலக்கங்கள்
08 27 52 56

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,386,200/-

2016-04-10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 அல்லது துரித அழைப்பு 1919



அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.76,782,420/-

001
2016-04-08

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
X 01 02 07 65

கோடிபதி

தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 011 4 824 824



## நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்

புதுவருடத்தை முன்னிட்டு நியூ அபிராமி ரெக்ஸ்ரைல் வழங்கும்
மிகப் பெரிய மலிவு விற்பனை
ஆம்

5000/= or 6000/= விற்கப்பட்ட சாறிகள் 1000/= ரூபாவிற்கு.
4500/= விற்கப்பட்ட சின்னசைஸ் (20-38) நெற் பஞ்சாபிகள் 1000/= ரூபாவிற்கு.
பெண்களுக்கான கொட்டன் பஞ்சாபிகள் 6000/= விற்கும் 5000/= விற்கப்பட்டது 3000/= ரூபாவிற்கும் மற்றும் கொட்டன் சாறிகள் சகலவிதமான ஆடை தெரிவுகளையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்ஸ்
ஆஸ்பத்திரி பின் பக்கம்,
225C மின்சார நிலைய வீதி, யாழ்.

மலிவு விற்பனை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.



## தேவை

மேற்பார்வையாளர்
பெண்கள் மட்டும்.
கல்வித்தகைமை B.Com பட்டதாரி
தொடர்பு: 075 978 9223
075 978 9226



## Win Repair

A/C களும்,
சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும்
உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648942



## British College of Higher Studies

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550 0770365728
Hotlines: 0777585913,0777222422.



யாழ் மண்ணில் முதன்முறையாக
மெல்லிசை வேந்தன் ஸ்ரீநிவாஸ்

சக்தி சூப்பர் ஸ்டார்ஸ் கலைஞர்களுடன் கலந்துகொள்ளும்
பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி

Shakthi சக்தி TV
தமிழ் பேசும் மக்களின் சக்தி

சக்தியின் இன்னிசை மாலை
அதிரடி இசை நிகழ்ச்சி
104.1 103.9 FM

Shakthi சக்தி FM
தமிழ் பேசும் மக்களின் சக்தி

ஏப்ரல் 9
மாலை 6.30 முதல்
மானிப்பாய்
செல்லமுத்து மைதானம்

அனுமதி இலவசம்



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!!
www.shakthitv.lk / www.shakthifm.com

அனுசரணை SEYLAN BANK PLC Sri Lanka Insurance


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2016 சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு...

இந்தியன் செலக்ஷனின்

# இந்தியன் பஜார்

வழங்கும்

## மாபெரும் விசேட விலைக்கழிவுகள்





உங்களுக்குத் தேவையான திருமண பட்டுப் புடைவைகள் விதம் விதமான அழகிய சாறி வகைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



### சல்வார் துணிகள்

சில்க் 2 டொப் சல்வார் துணி
~~1500/-~~ 1000/-
சில்க் 3 டொப் சல்வார் துணி
~~2000/-~~ 1500/-
குண்டன் 2 டொப் சல்வார் துணி
~~1500/-~~ 1200/-
கொட்டன் 3 டொப் சல்வார் துணி
(Special) ~~3000/-~~ 2500/-

இடம் : யாழ்.வீரசிங்க மண்டபம்.
காலம் : 30.03.2016 முதல் 15.04.2016 வரை

---

## "மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"



RO with Ultraviolet
~~Rs. 38,000/-~~
Rs.35,000/-
முந்துங்கள்
இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே

- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- **UV** உடனான **HI-PURE RO** நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

**EVER PURE HI-TEC (PVT) LTD**
**341,K.K.S ROAD ,JAFFNA.**
**TEL:- 0215677567,0773626230**

---

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் மோத கற்கைநெறி.

(Trainer Training (Teacher Training Diploma)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)**
**9.am (18.04.2016) திங்கள் (Week day batch)**

4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

---

## சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு மிகத் தரமான உடைகள்

# மிகப்பெரிய மலிவு விற்பனை



- கொட்டன் துணிகள் பல வண்ணங்களில்
- றொப் வகைகள்
- சல்வார் துணிகள்
- பல விலைகளில் பல டிசைன்களில் சில்க், கொட்டன் சாறிகள்
- சிறுவர்களுக்கான சோளிகள், குருதாக்கள்
- வேட்டிகள் இன்னும் பற்பல.

தெரிவுகளுக்கு முந்துங்கள்

பணத்தினை மீதப் படுத்துங்கள்

தரமானவற்றை மலிவாகப் பெறுங்கள்

அதிர்ஸ்டத்தினை தவற விடாதீர்கள்

ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்தும் எமது சேவை.

# அம்பாள் ரேட் (பிறைவேற் லிமிடெட்)

புடைவை விற்பனையில் மாபெரும் புரட்சி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, முதல் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிகுமரன் ரெக்ஸ்

**தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்**

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.



**விசேடமாக Office Wear Sarees 690/= இலிருந்து**

- பட்டுச் சாறி
- பன்சி சாறி
- கொட்டன் சாறி
- சல்வார்
- சல்வார் துணி
- TOP வகைகள்
- ரவுசர், சேட்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

## காசி யாத்திரை

**ஆரம்பம் 10.06.2016, யாத்திரீகர்கள்.20, நாள்கள் 10**

**தரிசிக்கும் இடங்கள்:**

டெல்லி அட்ஷயதாம் மற்றும் சில இடங்கள் ஆக்ரா, தாஜ்மகால், மதுரா, கிருஷ்ண ஜென்மபூமி, அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம், நேருவீடு, சயன ஆஞ்சினேயர், சீத்தாமடி, சீதை தாயாருடன் பூமியுள் புதையுண்ட இடம் பிர்லா மந்திர், காசிவிஸ்வநாதர், காசிவிசாலாட்சி காலபைரவர், அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த சுடலை உட்பட காசியில் பல இடங்களில். அத்துடன் இராமஸேஸ்வரம், இராமர்பாதம், பஞ்சமுக ஆஞ்சினேயர், திருப்புலானி, உத்திரகோசமங்கை உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு மூன்றுவேளை, காலை மாலை,கோப்பி, ரீ, 2 லீற்றர் குடிநீர், பயணம் முழுவதும் AC வாகன வசதி மற்றும் விமானம், 2பேருக்கு குளியலறை இணைந்த அறைகள் மேலும் மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதனால் நமது குருக்கள்மார்களும் தயக்கமின்றி சேர்ந்துகொள்ளலாம்.

பயணம்: கொழும்பு, டெல்லி, காசி, டெல்லி, சென்னை, மதுரை, சென்னை, கொழும்பு விமானம் சுற்றிப்பார்க்க AC பஸ், AC வான்.

விருப்பமுடையவர்கள் மேலும் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

**மேலதிக விபரங்களுக்கு**
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**
**மகன் - ராஜன்**
**இல.59, 3/6 செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**077 768 0102, 077 736 2154**

(#29947)(10.17.18)

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

**P. ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:**
**384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)**
**தொலைபேசி: 021 221 7944**
**கொழும்பு முகவரி:**
**19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி**
**தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208**

(சி. 22235)
(12.18)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு

| | |
|---|---|
| வங்கியியல் கற்கைநெறிகள் IABF & DABF | Medium :- Tamil & English<br>Minimum qualification :-<br>G.C.E. O/L 6 Passes including 5 Credits |
| பட்டயக்கணக்காளர் ஆவதற்கு Chartered Accountancy Executive Level , Business level | Medium :-Tamil & English<br>Minimum qualification:-<br>G.C.E. A/L 3 Passes |
| ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு CERTIFICATE COURSE IN ENGLISH | Minimum qualification :-<br>G.C.E. O/L 3 Passes<br>Total Hours :- 130 Hours |

**A/L** வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன **2016 & 2017 & 2018**

Further Details : -

**Jaffna College**
Undergraduate Dept.

464, Hospital Road,
Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149

(C/23944)(10.17.18)

## புத்தாண்டு கால குதூகலத்தில் சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

**250 மில்லியனுக்கு மேல் பெறுமதியான தள்ளுபடிகள் மற்றும் பரிசுகள்**

Panasonic 32" LED



3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS



மீதி வட்டியில்லாத 15 மாத தவணைக் கொடுப்பனவு முறையில்

3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

இலவச DVD

DEL Laptop 3543 i3



FREE Printer

ரூ. 85,999/-
மாதம் ரூ. 5,200/- 15 இலவசம்

6 வது Generation இல் புதிய மடிக்கணினியை 14,999/- செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

Panasonic 32" LED _ 32sv7



ஆரம்ப கட்டணம் 9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

**இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே**

தொடர்புகளுக்கு:

softlogic MAX
maximum experience

பிரதான கிளை

இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (KFC கட்டடம்)

0777 397734 / 021 567 8989 / 077 982 4213

# ABI யின்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

**தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும் ஆடைகள் ஒரே இடத்தில்..**



இன்பத்தின் தருணங்கள் எங்கெங்கு உண்டோ அபியின் ஆடை வகைகள் அங்கங்கு உண்டு.

உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப **20% முதல் 50%** வரையான விசேட விலைக்கழிவுகள்

சில ஆடைகளுக்கு ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்

**இச் சலுகை 14.04.2016 வரை மட்டுமே**

"எதை எடுப்பது எதை விடுவது என்ற சந்தோசத்தில் நீங்கள் திணறப்போவது நிச்சயம்"

அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 3% விசேட விலைக்கழிவு
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

இந்தப் புத்தாண்டுக்கு முன்னதாகவே வந்து உங்கள் உள்ளத்தை கொள்ளை கொண்ட ஆடைகளை சிறப்புத் தள்ளுபடி விலையில் அள்ளிச் செல்லுங்கள்.

12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 3738

ABI Fashion World

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி.
**சின்னையா தங்கம்மா**
( செல்வமலர் )
திதி : பங்குனி.பூர்வபக்கத் திருதியை

மண் மகிழ 05.03.1945 — கண் நெகிழ 13.04.2013

செல்வமலரென்றே சீரோங்கப் போற்றி நின்றோம் !
சிந்தையெல்லாம் கவர்ந்து நின்றே சென்றாயம்மா
நல்லவராய் எமையேற்று நலமோங்கக் காத்தவளே !
நானிலத்தில் உனையன்றித் துணையாரம்மா ?
அல்லும் பகலுமுனை அன்புடனே போற்றி நிற்போம்
அகல்விளக்கு ஆர்வமுடன் ஏற்றி நிற்போம் !
ஒல்லும்வழியுரைக்க ஓடி நீ வந்திட்டால்
உத்தமியே உனக்கதுவும் பெருமையன்றோ ?

தம்பலடி,பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.தொ.பே : 0777423532

கணவர்,மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)
திதி:பங்குனி அபரபக்க திருதியை

அன்னையின் மடியில்
16.10.1925

அரசடிக்காடு கதிர்காம சுவாமியின்
பாதக்கமலங்களில் சரண்
09.04.2012

ஆசையுடன் கல்வி தந்து அகிலத்தில்
ஆலமரமாய் உயரவைத்தவரே - எங்கள் ஐயா
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறாத் துயரமோ இன்னும் மறையவில்லை
மீண்டும் பிறந்தால் நீங்கள் என்றும் நாங்கள் உங்கள் மடியில்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


261,பலாலிவீதி,
யாழ்ப்பாணம்.

"துவாரகா"
கதிர்காம சுவாமி கோயிலடி, காரைநகர்.

குடும்பத்தினர்.

(11,18)

## ஈர விழிகளுடன் நினைவேந்தும் ஓராண்டு



செல்வன்
**வரதராசா குகப்பிரிஜன்**
(யாழ் இந்துக்கல்லூரி மாணவன் -பொறியியல் தொழிநுட்பம் -2016)
திதி: திருதியை (09.04.2016)

கருவாக 04.04.1997 — திருவாக 23.03.2015

எம் அன்புச் செல்வமே!
உனைப் பிரிந்து ஓராண்டு தொலைந்து
போனதையா
ஆனாலும் நீ எம்முடனேயே இருக்கும்
தன்மையை
உணர்கின்றோம்! காலை விழித்தவுடன் தினமும்
உனை முத்தமிட்டே செயல் தொடங்குவோம்.


" நாவலடி"
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

அனுதினமும் உன் நினைவால்
துடித்திருக்கும்....
குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

எமது குடும்ப ஒளிவிளக்கான
அமரர்
**சங்கரப்பிள்ளை வரதராஜா**
(வள்ளல் வரதன்) அவர்களின்
11ஆம் ஆண்டு நினைவுச் சுவடிகள்
( திதி -துதியை)

அன்னை மடிஇல் 02 . 06 . 1953



அன்னை நவிக்க 10 . 04 . 2005

உதிரத்தால் ஒன்றிணைந்து உள்ளத்தால் சேர்ந்திருந்து
இன்பத்தில் பங்கெடுத்து துன்பத்தில் துயர்துடைத்து
அன்பினால் அரவணைத்து ஆலமரமாய் வீற்றிருந்து
பாரினில் எமைத் தவிக்கவிட்டு பரமனடி சேர்ந்தாலும்

பாசமது கட்டியாண்ட எம் குடும்பத்தின் திருவிளக்கே
ஆறென ஓடும் கண்ணீர் ஆற்றிட ஆருமின்றி
அப்பாவே உமைத்தேடி தெரிந்திட வழியுமின்றி
உம் ஆத்மாவின் ராகங்கள் இவ் அவனிதனில் நிலைத்ததப்பா

உமைப் பிரிந்து பதினோராண்டு கழிந்தாலும் எம் விழிகளில்- உம்
நினைவுகளைச் சுமக்கின்றோம் நித்திரையைத் துறக்கின்றோம்
நித்தியமான என் புன்னகையில் எம்மையே இழந்தாலும்
நித்தமும் வாழ்கின்றீர் நிலையான எம் நெஞ்சில்

பல்லாண்டு கழிந்தாலும் உதிராத உம் நினைவு
மறையாது உங்கள் உருவும் நித்தம் - நித்தம்
தவறாது உதிப்பீர்கள் எம் மனதின் தெய்வமாக - நாம்
மறவாது பிரார்த்திப்போம் உமது ஆத்ம சாந்திக்கே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


சந்நிதி இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

(11,18)

உம் வழிதான் நேர்வழியென
அவ்வழியையே தொடரும்
குடும்பத்தினர்.

## 33 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 12 . 05 . 1953



மறைவு 08 . 03 . 2016

**அமரர் சோமு நவரத்தினம் (நவம்)**
(உரிமையாளர் நவம் மோட்டோர்ஸ் புன்னாலைக்கட்டுவன்)

கடந்த 08.03.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சோமு நவரத்தினம் (நவம்) அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.04.2016) சனிக்கிழமை முற் பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(70259)
(12.17.20)

குடும்பத்தினர்.

### மகிந்த

அரசியல்வாதிகளும் அவதானமாக செயற்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

மக்கள் வழங்கும் அதிகாரத்தை தனது குடும்பத்தைப் பலப்படுத்துவதற்கு அல்லது அரசியல் அதிகாரத்தை அதிகரிப்பதற்கு பயன்படுத்தக்கூடாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் நூறாவது ஜனன தின வைபவத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்படி விடயங்களைத் தெரிவித்தார். இதன்போது ஜனாதிபதி தனது உரையில், சிறிமாவோ பண்டாரநாயக்க ஒருபோதும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தவில்லை என்பதுடன், ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகளை முழுமையாக ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அவரிடம் காணப்பட்ட பொறுமை - அர்ப்பணிப்பு - நேர்மை மற்றும் சவால்களின் முன் அஞ்சாது முன்னோக்கிச் செல்லும் விசேட பண்புகள் தற்போது அரசியலில் ஈடுபடும் அனைவருக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளதுடன், இது தற்போது அத்தியாவசியமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் நாட்டுக்காக மேற்கொண்ட வரலாற்றுப் பெறுமதிமிக்க கடமைப் பொறுப்பானது, அப்போது இருந்த தேவைகளுக்கமையவும், சர்வதேச ரீதியிலும் மிக முக்கியமானதாகக் காணப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளின் போது, நாட்டுக்காகவும் கட்சிக்காகவும் அன்னார் கண்ணீர் சிந்திய சந்தர்ப்பங்களை எமது அரசியல் அனுபவங்களில் காணமுடிந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் செயற்படும்போது, நாட்டுக்கும் மக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

பண்டாரநாயக்க குடும்பம் நாட்டை ஆட்சி செய்த யுகங்களில் குடும்பம் என்ற ரீதியில் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளானபோதும், நாட்டுக்கு பெரியளவில் சேவையாற்றிய முன்மாதிரியான அரசியல்வாதிகளாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்கள் - என்றார். (த-வ-5)

### பாதுகாப்பற்ற

தந்தையார் படம் பார்ப்பதற்கென அயல் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு தந்தையார் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது, சிறுவன் வெளியே விளையாடிக் கொண்டிருந்துள்ளான் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போதே குறித்த சிறுவன் கிணற்றினுள் விழுந்துள்ளான். பின்னர் சிறுவனை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும், அவன் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத் தப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிறுவன் உயிரிழந்தமைக்கு பெற்றோரின் அக்கறையீனமே காரணம் என்பது விசாரணையில் தெரியவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பற்ற கிணறு அங்கு உள்ளமை தெரிந்தும் எதற்காகச் சிறுவனை விளையாட விடும் போது, அக்கறையற்று இருந்தார்கள் என்பது கேள்வியாக எழுந்துள்ளது. இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மு.உதயசிறி இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சை பெறாத காசநோய் உயிரைப் பறிக்கும் ஆபத்து

## சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும் என மருத்துவர்கள் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.9

புகைத்தல் மற்றும் மதுபான போதைப் பொருள் பாவனைகள், போசக்கின்மை, நீண்டநாள்களாக உட்கொள்ளும் மருந்து வகைகள் மற்றும் நோய்த் தாக்கங்களால் காசேநாய்ப் பாதிப்பு ஏற்படுகின்றது. அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டவுடன் மருத்துவரை நாடி நோயைக் கட்டுப்படுத்த முடியும். சிகிச்சைபெறக் காலதாமதமானால் அந்தநோய்உயிரைக்கூடப் பறிக்கும் நிலை வரலாம் என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

> கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட உலக காசநோய்த் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட காச நோய் தொடர்பான விழிப்பூட்டல் மாநாடு ஒன்றுகடந்தபுதன்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட உலக காசநோய்த் தினத்தை முன் னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட காச நோய் தொடர்பான விழிப்பூட்டல் மாநாடு ஒன்று கடந்த புதன்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையில் நடை பெற் றது. மாவட்ட காசநோய்க் கட் டுபாட்டு மருத்துவ அதிகாரி ஆர்.மணிவாசகன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பிர தம விருந்தினராக வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார்.

யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், காசநோய்த் தினம் ஆரம்பிக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு முதல், இற்றைவரை மேற் கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் மற்றும் நோயின் தாக்கம், நோய் பரவும் விதங்கள், நோயால் ஏற்பட்ட பாதிப் புக்கள், ஆண்டுதோறும் காச நோயின் தாக்கம் இலங்கையில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அறியப்பட்ட, அதிகரித்து வந்துள்ள நிலை, நோயால் ஏற்பட்ட இறப்புக்கள் என்பவை தொடர்பானவிளக்கங்கள் பிரசித்தி பெற்ற மருத்துவர் களால் முன் வைக்கப்பட்டன. இதன்போது விளக்கப்படங்களை முன்வைத்த மருத்துவ நிபுணர்கள், அது பற்றிய விளக்கக் குறிப்புக்களையும் வழங்கினர்.

காசநோயின் அறிகுறிகளாக இரண்டு வாரங்களுக்கு மேற் பட்ட இருமல், சளியுடன் குருதி வெளியேறல், உடல் நிறை குறைவு, இரவில் அதிக வியர்வை, சாப்பாட்டில் அக்கறையின்மை, அதிக களைப்பு என்பவை காணப்படும் என்று மருத்துவர்கள் விளக்கமளித்ததுடன், புள்ளி விவர ரீதியாக காசநோய்ப் பாதிப்புத் தொடர்பான விவரங்களையும் முன்வைத்தனர்.

அத்துடன் காசநோய்த் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டபோட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய வேம்படிமகளிர்உயர்தரப்பாடசாலை மாணவிகளுக்கும், நோயால் பாதிக்கப்பட்டு தமக்கான சிகிச்சை களை முறையாக நிறைவு செய்தவர்களுக்கும், சேவை யின் முக்கியத்துவம் கருதி விடுமுறையே எடுக்காது பணியாற்றிய ஊழியர்களுக்குமான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். மருத்துவக் கல்லூரி மாணவர்களால் பாடல் நிகழ்வும், சுகாதார அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தரால் காசநோய் தொடர்பான கவிதையும் முன்வைக்கப்பட்டன.

நிகழ்வில், காசநோய் வைத்திய நிபுணர்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (த-ற-ஜ-4,ரி5)

# மருந்து விசிறிய பழங்கள் அழிப்பு

சாவகச்சேரி,ஏப்.9

சாவகச்சேரி பொதுச் சந்தையில் உள்ள பழவகைகள் விற்பனைப் பிரிவில் சாவகச்சேரி நகரசபையின் பொது சுகாதாரப் பரிசோதகர் நேற்று முன்தினம் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தி, மருந்து விசிறப்பட்ட பெருமளவு மாம்பழங்களைப் பறிமுதல்செய்துகொண்டு சென்று அழித்துள்ளனர்.

சந்தையில் மருந்து விசிறப்படும் பழவகைகளால் ஏமாறுவதாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து பொது சுகாதார பரிசோதகர் நேற்று திடீர்ப் பரிசோதனை மேற்கொண்டு மருந்து விசிறப்பட்டதெனக் கருதப்படும் மாம்பழங்கள் மற்றும் பலாப்பழங்களைக் கைப்பற்றி வியாபாரிகளின் சம்மதத்துடன் அழித்துள்ளனர்.

இது தொடர்பாக சந்தையில்பழவகைகளை விற்பனை செய்யும் வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சந்தைக்கு வாகனங்களில் கொண்டு வரப்படும் பழவகைகளைத் தாம் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்து விற்பனை செய்வதாகவும், வாகனங்களில் பழவகைகளைக் கொண்டு வந்து விற்பனைசெய்யும் வேளைகளில் பொது சுகாதார பரிசோதகர்கள் வந்து பரிசோதனை செய்து தரமானவை எனத் தெரிவித்தால் தமக்கு இவ்வாறான இழப்புகள் ஏற்படாது எனவும் கவலை தெரிவித்தனர். (த-ஜ-9)

# குடிதண்ணீர்க் குழாய்களில் பாவனைக்கு உதவாத நீர்

## மக்கள் குற்றச்சாட்டு; தற்போது நிலைமை சீர் என சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி,ஏப்.9

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள சில குடி தண்ணீர்க் குழாய்களில் பாவனைக்கு உதவாத தண்ணீர் வெளிவருகின்றமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனினும் இது குறித்துக் கேட்ட போது அது பாவனைக்கு உகந்த தண்ணீரே. அதிலிருந்த குறைபாடு சீர் செய்யப்பட்டுள்ளது என்று நகரசபைச் செயலாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபையால் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் நகரிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளத்துக்கு 7 வீதிகளுக்கும், பொதுச்சந்தை வளாகத்துக்கும் தினமும் 24 மணி நேரமும் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக் குழாய் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீரைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை சில நிமிடம் கரிய நிறத்தில் குடி தண்ணீர் வெளி வந்தமையால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது.

இவ்விடயம் தொடர்பாக நகரசபைச் செயலாளர் சா.சண்முகதாசனிடம் கேட்ட போது- மாதத்தில் இரு தடவைகள் கிணறு இறைக்கப்பட்டு குளோரின் இடப்பட்டு குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகம் இடம் பெற்றுவருகிறது. அண்மையில் நிலவும் வெப்பம் காரணமாக கிணற்றில் நீர்மட்டம் குறைந்ததால் நீர் உறிஞ்சி வெளியேற்றும் குழாயினுள் காற்று உட்புகுந்துள்ளது. நேற்று முன்தினம் அதனைச் சீர் செய்து நீர் விநியோகம் மேற்கொண்ட போது காற்றுப் புகுந்ததால் குழாய்களில் படிந்திருந்த பாசியே கறுப்பு நிறத்தில் தண்ணீருடன் வெளியேறியுள்ளது. இதன் காரணமாகவே குடிதண்ணீருடன் கழிவுநீர் வந்துள்ளது என்று கூறப்பட்டது. இருப்பினும் மக்களுக்கு விநியோகிக்கும் குடி தண்ணீரில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அதன்போது குழாயில் பிடித்திருந்த பாசி கரைந்து குழாய் வழியே வெளியேறியுள்ளதே தவிர நீரில் பாதிப்பு இல்லையென்று தண்ணீரைப் பரிசோதனை செய்த அதிகாரிகள் தெரிவித்தனர். - என்றார். (த-ற-ஜ-4,9)

# கட்டாக்காலி நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

சாவகச்சேரி,ஏப்.9

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களுக்கு நேற்று முன்தினம் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் திணைக்களத் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுப் பொது சுகாதாரப் பரிசோதகர் வருகை தந்து நாய்களைப் பிடிப்பதற்குரிய வலைகளைப் பயன்படுத்தி பொதுச் சந்தை மற்றும் பஸ் நிலையம், நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் காணப்பட்ட கட்டாக்காலி நாய்களைப் பிடித்து தடுப்பூசி ஏற்றியதுடன் தொற்று நோய்க்கு உள்ளாகி அபாய நிலையில் காணப்பட்ட நாய்களுக்கு கழுத்தில் சிவப்புப்பட்டியும் அணிவித்தனர்.

தற்போது நிலவும் வெப்பம் காரணமாகக் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களுக்குத் தொற்று நோய்கள் ஏற்பட்டு வீதியில் செல்வோர் மீதும் மற்றைய நாய்கள் மீதும் கடித்தால் பாதிப்பு ஏற்படாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது இடங்களில் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (த-ஜ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விருந்தோம்பல் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.9

இலங்கைக் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையால் விருந்தோம்பல் கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறு பவர், அறை ஊழியர், வெதுப்பாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி நெறிகள் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளதோடு, முழுநேரக் கற்கை நெறிகளான இவை, தேசிய தொழில் தகைமைச் சான்றிதழுக்கான (என்.வி. க் கியூ) பயிற்சிகளாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது

கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் நேரிலோ, அல்லது எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இலக்கம் 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலமோ விண்ணப்பங்களை அனுப்பி வைத்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். (த-ற-ஜ-4)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.9


இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மேலாண்மைக் குழுவின் தீர்மானத்துக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் புதிய கற்கை நிலையம் ஒன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சமூக விஞ்ஞானத்துறையினரால் சமூகவியல் சான்றிதழ் கற்கைநெறி, சமூகவிஞ்ஞானத்தில் கலைமாணி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, தமிழ் மாணவர்களுக்கான சிங்கள மொழிப் பாடநெறி, சிங்கள மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநெறி ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கைநெறிகளைக் கற்கவிரும்பும் மாணவர்கள் 0775625352 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொண்டு கற்கை நெறிகள் தொடர்பான விவரத்தைப் பெற்றுக் கொள்ளலாமென அவர்மலும் தெரிவித்துள்ளார். (த-ஜ-ரி)

# மன்னார் ஆடை ஆலையின் ஊழியர் பணிப் புறக்கணிப்பு

## புத்தாண்டு விடுமுறை கோரி



மன்னார்,ஏப்.9

தலைமன்னார் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் புத்தாண்டு விடுமுறை வழங்குவதாகத் தெரிவித்த ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம், பணியாளர்களிடம் இரவு பகலாக வேலை வாங்கியதன் பின்னர் விடுமுறையை நிராகரித்துள்ளது எனத் தெரிவித்தும், பணியாளர்களுக்கான விடுமுறைகள் உரிய முறையில் வழங்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியும் குறித்த ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட் டனர்.

"நீங்கள் எல்லாம் மன்னார்க் கழுதைகள்" எனக் கூறிப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளால் தாம் நடத்தப்படுவதாகவும், இதனால் நாளாந்தம் தாம் மன ரீதியாகப் பாதிக்கப்படுவதாகவும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர்.

தலை மன்னார் ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர் களுக்கு தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை விடுமுறை வழங்குவதாகத் தெரிவித்து, தொடர்ச்சியாக இரவு பகலாக வேலை வாங்கிய நிலையில் தற்போது விடுமுறை வழங்க முடியாது என ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் அங்கு கடமையாற்றும் அதிகமான பெண்கள் குறித்த விடுமுறையைக் கட்டாயம் வழங்க வேண்டும் எனக் கோரி இருந்தனர். ஆனால் ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் பணியாளர்களின் கோரிக்கைகளை நிராகரித்து வந்துள்ளனர்.

நேற்றுக்காலை குறித்த ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்ற பெண்கள் கடமையை மேற்கொள்ளாமல் ஆடைத் தொழிற்சாலைக்குள் ஒன்று கூடித் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்பின் போது குறித்த ஆடைத்தொழிற்சாலையின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஊழியர்களின் கோரிக்கையை ஏற்காது கடமையில் ஈடுபட வற்புறுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

இந்த ஆடைத்தொழிற்சாலையில் பெண் மேற்பார்வையாளர் ஒருவரும், ஆண் மேற்பார்வையாளர் ஒருவரும், சில பணியாளர்களைத் தாக்க முற்பட்டதோடு, வேலை செய்ய முடிந்தால் நில்லுங்கள் இல்லாது விட்டால் அனைவரும் வெளியில் செல்லுங்கள்,எனக் கடும் தொனியில் தெரிவித்தனர் எனவும் ஊழியர்கள் கூறினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மேலும் கூறுகையில்,

ஆடைத் தொழிற் சாலையில் பெண்களுக்கு எதிராகப் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன. இவ் விடயத்தில் பெண்கள் அமைப்பு மற்றும் சமூக அமைப்புக்கள் மௌனம் காத்து வருகின்றன. ஆண் மேற்பார்வையாளர்கள் தமிழிலும், சிங்களத்திலும் எங்களைக் கெட்ட வார்த்தைகளால் பேசுகின்றனர்.

நாங்கள் தைக்கும் ஆடைகளில் பிழைகள் ஏற்பட்டால் எங்களது முகத்தில் தூக்கி எறிந்து கெட்ட வார்த்தைகளினால் பேசுகின்றனர். இரவு பகலாகக் கடுமையாக வேலை வாங்குகின்றனர். சில நாள்களில் இரவு நேரங்களில் பலவந்தப்படுத்தி எம்மைக் கடமையில் ஈடுபடுத்துகின்றனர். மேலதிக நேரக் கடமையில் ஈடுபட்டாலும், உரிய மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை. இதனால் நாங்கள் தொடர்ச்சியாக மன ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளோம் என்று கூறினர்.



ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்களுடைய பணிப் புறக்கணிப்பை அடுத்து மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை விக்டர் சோசை, மன்னார் ஆயரின் செயலாளர் அருட்தந்தை ஏ.முரளிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரதிநிதி ஜஸ்ரின், மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர் அந்தோனி சகாயம் உள்ளிட்ட குழுவினர் ஆடைத்தொழிற்சாலைக்கு வருகை தந்தனர்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட பெண்களுடன் அவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர். இதனைத் தொடர்ந்து பணியாளர்களின் கோரிக்கை தொடர்பாக ஆடைத்தொழிற்சாலை நிர் வாகத்துடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

இதனையடுத்து குறித்த பெண்கள் தமது புறக்கணிப்பைக் கைவிட்டு மீண்டும் பணியில் ஈடுபட்டனர்.

பணியாளர்களான பெண்களால் முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு முன்வைக்கப்படும் என ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் உறுதியளித்த நிலையிலேயே குறித்த பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது எனக் கூறப்பட்டது.

(த-ஜ-56-21)

## வவுனியா நெல் கொள்வனவில் விவசாயிகள் தொடர்ந்து சிரமம்

### உடன் தீர்வு காணுமாறு கோரிக்கை

வவுனியா,ஏப்.9

வவுனியா மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படுவதில் பல இடையூறுகள் இடம்பெறுவதால் தாம் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நாட்டில் உள்ள விவசாயிகளிடம் இருந்து தலா இரண்டாயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும் என அரசினால் அறிவிக்கப்பட்டது. இதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்தில் உள்ள 4ஆயிரத்து500பேர்வரையான விவசாயிகளிடமிருந்தும் 9 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு இடம்பெற வேண்டும்.

இருப்பினும் வவுனியா மாவட்டத்தில் மூவாயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவுக்கே அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் நெல் கொள்வனவுக்கான சந்தர்ப்பத்தில் இரகசியமான முறைகளில் இடைத் தரகர்கள் தரகுப் பணம் கோருகின்றனர்.

அத்துடன் நெல்லைக் கொள்வனவு செய்த பின்பும் அதற்குரிய பணத்தை வழங்குவதற்கு மேலும் கால அவகாசம் கோரப்படுகின்றது.

இவை அனைத்துக்கும் மேலாக நெல் சந்தைப்படுத்தல் சபையினர் நெல் கொள்வனவில் ஈடுபடுவதற்கு முன்னர் பல தனியார் வர்த்தகர்கள் அநியாய விலைக்கு வாங்கிய நெல்லை மீண்டும் சில விவசாயிகளின் உதவியுடன் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்தி வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் நெல் கொள்வனவில் இடம் பெறும் சிரமங்களைப் போக்க ஆவன செய்ய வேண்டும். இது தொடர்பில் விரைவில் மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு செல்லவுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.(த-ஜ-10)

## பனங்கைப்பணிப்பயிற்சி ஆரம்பம்





கிளிநொச்சி, ஏப் 9

பனை அபிவிருத்திச் சபையினால், விசுவமடுக்குளம் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் குடும்பங்களைச் சார்ந்த 25 பெண்களுக்கு கடந்த 4 ஆம் திகதி பனம்கைப்பணிப் பயிற்சிநெறி சங்கக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

விசுவமடுக்குள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் [illegible] [illegible] கௌரவ விருந்தினர்களாக, விரிவாக்க முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன், முல்லைமாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க,சிறுசுவடுகள் தலைவி திருமதி.த.பவானி மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் முல்லைமாவட்ட இணைப்பாளர் பி.றஜீபன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இந்தப்பயிலுநர்களுக்கு பயிற்சிக் காலமான மூன்று மாதங்களுக்கும், மூலப்பொருள் மற்றும் உபசரணைக் கொடுப்பனவை உள்ளடக்கிய பயிற்சிக் காலக் கொடுப்பனவாக, மாதாந் தம் 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுமெனத்தெரிவிக்கப்பட்டது.(த-17)

## யானை தாக்கி விவசாயி சாவு

வயலுக்குச்சென்ற விவசாயி ஒருவர்,யானையின் தாக்குதலுக்கு இலக்காகிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வவுனியா நெடுங்கேணி சேனைப்பிலவு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மனோகரசீலன் (வயது-42) என்னும் விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த விவசாயி நெடுங்கேணியில் உள்ள வயலுக்குச்சென்றபோது எதிர் பாராத விதமாகக் காட்டுப் பகுதிக்குள் இருந்து தனியே வந்த யானை விவசாயியைத் தாக்கியுள்ளது. இதனால் விவசாயி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனை அடுத்து வயலுக்குச் சென்றவர்களால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற நெடுங்கேணிப் பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(த-ஜ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு-குறிகாட்டுவான் பயணத்துக்குப் புதிய படகு

## நெல்சிப் திட்டத்தில் ரூ.150 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஏப்.9
நெல்சிப் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு-குறிகாட்டுவான் இடையில் பயணிகள் போக்குவரத்துக்காக 150 மில்லியன் ரூபா நிதியில் புதிய படகு கட்டுவதற்கான ஒப்பந்தம் நேற்றுக் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் டொக்யாட் நிறுவனப் பணிப்பாளர் ஆகியோருக்கு இடையே கொழும்பில் இடம் பெற்ற குறித்த ஒப்பந்தம் தொடர்பில் பிரதிப் பிரதம செயலாளர் தகவல் தருகையில்,

> இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 80 பயணிகள் பயணிக்கத்தக்க படகைக் கட்டி 6 மாத காலத்தில் குறிகட்டுவான் பிரதேசத்துக்குக் கொண்டு வந்து வழங்க வேண்டும்.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் பயணிகள் போக்குவரத்துப் படகுக்கு நெல்சிப் திட்டத்தின் கீழ் கோரிக்கை விடப்பட்டது.

குறித்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூபா 150 மில்லியன் நிதியில் புதிய படகு ஒன்றை வழங்க நெல்சிப் திட்டம் மூலம் அனுமதிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குறித்த படகு கொள்வனவுக்காக கொழும்பு டொக்யாட் நிறுவனத்தை நாடினோம். அதன் பிரகாரம் படகைக் கட்டுவதற்கான ஒப்பந்தம் நேற்றுக் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 80 பயணிகள் பயணிக்கத்தக்க படகைக் கட்டி 6 மாத காலத்தில் குறிகட்டுவான் பிரதேசத்துக்குக் கொண்டு வந்து வழங்க வேண்டும். அதற்கான பெறுமதியாக 150 மில்லியன் ரூபா வழங்குவது என ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் நீண்ட காலமாகப் போக்குவரத்தில் பெரும் இடையூறை எதிர் கொள்ளும் நெடுந்தீவு மக்களின் இடர்களைப் போக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

(து-ஜ-101)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.9
சுஜீந்தன், நீதுஜன் ஆகியோர் இணைந்து எழுதிய 'அலை அழித்த தமிழ்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் கோண்டாவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக மாணவனும், வாழ்த்துரைகளை சின்மயமிசன் ஜாக்கிர சைதன்யாவும், கிளிநொச்சி காவேரி கலாமன்ற நிறைவேற்று இயக்குநர் வண. யோசுவாவும் நிகழ்த்தவுள்ளனர். (து-ஜ-ரி)

## சைக்கிள், மோ. சைக்கிள் நிறுத்தத் தடை

சாவகச்சேரி,ஏப்.9
சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக ஏ- 9 வீதியில் சைக்கிள்கள் ம்ற்றும் மோட்டார் சைக்கிள் களை நிறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக சாவகச் சேரி நகர சபையினர் ஒலி பெருக்கி மூலம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்புக்கள் நிலவுவதால் அந்த வீதியில் சந்தைக் கட்டடம் முன்பாக வாகனங்களை நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த இடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் சைக்கிள்கள்,மோட்டார் சைக்கிள்களை நிறுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-ஜ-4-9)

## நாளையும் மின் தடை

யாழ்ப்பாணம், ஏப். 9
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பல இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க்லேன், ஸ்ரீலங்கா பாடசாலை வீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், சங்கத்தானை, மீசாலை, வங்களா வீதி, அல்லாரை, வெள்ளாம் பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வரணி, கரம்பைக் குறிச்சி, வாழைத் தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவழை, இயற்றாழை, கலைவாணி, மிருசுவில், வடக்கு, சுட்டிபுரம், குளப்பிட்டி, ஆனைக்கோட்டை சந்தி, யாழ் வீதி மானிப்பாய், ஆறுகால் மடம், கூளாவடி, ஆனைக் கோட்டை வி.சி., நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி, பள்ளத்தடி, சாவற்கட்டுச் சந்தி, வராகி அம்மன் கோவிலடி, காக்கைதீவு, அராலி வடக்கு, கிழக்கு மற்றும், தெற்கு, களுவாத்துறை வைரவர் கோயில் பிரதேசம், அராலி குலணை பிரதேசம், ஜயனார் கோயில் பிரதேசம், கோணாந்தோட்டம், சிவன் பண்ணை வீதியில் ஒரு பகுதி, கே.கே.எஸ். வீதியில் முட்டாசுக் கடை சந்தியிலிருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரை, யாழ்ப்பாணம் 1 ஆம், 2ஆம், 3,ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்களின் ஒரு பகுதி, சப்பல் வீதி, வேம்படி வீதியின் ஒரு பகுதி, யாழ். பிரதான வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், யாழ். பொதுநூலகம், மாவட்ட நீதி மன்றக் கட்டடத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால்சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

கிளிநொச்சிப்பிரதேசத்தில் இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, நெடுங்கேணி, தண்டுவன், நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், றம்பைக்குளம், மருதோடை, மாறா இலுப்பை, குளவிசுட்டான், கற்சிலைமடு, முத்தையன்கட்டு, நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், மாஸ் அக்ரிவ், யுனிச்செலா, பொறியியற்பீடம், விவசாயபீடம், காகிள்ஸ் அகிரிபூட்ஸ், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை 1, இராணுவ பாசறை 11, இராணுவப் பாசறை, 7 ஆவது படையணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் குஞ்சுக்குளம், மாதாகிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (து-ஜ-ரி)

## உள்ளூர் உற்பத்தியாளர்களின் கண்காட்சி மாநகர சபையில்

யாழ்ப்பாணம்,ஏப்.9
யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.முயற்சியாளர் - 2016 எனும் விற்பனைக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் யாழ்.மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சிறுதொழில் முயற்சியாளர்களின்உற்பத்திப்பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் இது நடத்தப்படவுள்ளது.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டுஉள்ளூர்உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு, உள்ளூர் உற்பத்திப் பொருள்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து பயன் பெறுமாறும் யாழ். மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

(து-ஜ-ரி)

## காக்கைதீவுச் சந்தையில் வரி வழங்க வியாபாரிகள் மறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9
காக்கைதீவுச் சந்தையில் பொலிஸாரின் உதவியுடன் வரியைப் பெறச் சென்ற பிரதேசசபை உத்தியோகத்தர்கள்,வியாபாரிகள் ஒத்துழைப்பு வழங்காமையினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இந்த நிலைப்பாடு குறித்துக் கருத்துத்தெரிவித்த செயலாளர், மேற்படி சந்தை சம்பந்தமாகப் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறினார்.

வலி.தென்மேற்குப்பிரதேசத்தில் காக்கைதீவு இறங்கு துறையில் கூறு மண்டபத்துக்கு அருகாமையில், பிரதேச சபையின் அனுமதியின்றி சுகாதார விதி முறைகளுக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டு இயங்கி வந்த கடலுணவு விற்பனை நிலையம் சம்பந்தமாக பிரதேச சபை நடவடிக்கை எடுத்தது.

கடந்த இரு வருடங்களுக்கு முன் பல லட்சம் ரூபா செலவில் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுச் சில மாதங்களுக்குப் பின் இயங்காமல் கைவிடப்பட்ட நிலையிலிருந்த கட்டடத்துக்கு மேற்படி சந்தை இடமாற்றம் செய்யப்பட்டது.

ஆனால் இடமாற்றம் செய்யப்பட்ட சந்தைக் கட்டடத்தைப் பயன்படுத்த முன்வராத வியாபாரிகள் மீண்டும் சுகாதாரமற்ற முறையிலுள்ள சந்தைக் கட்டடத்திலும், கூறுவிலை மண்டபத்திலும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

> இடமாற்றம் செய் யப்பட்ட சந்தைக் கட்டடத்தைப் பயன்படுத்த முன்வராத வியாபாரிகள் மீண்டும் சுகாதாரமற்ற முறையிலுள்ள சந்தைக் கட்டடத்திலும், கூறுவிலை மண்டபத்திலும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்கிடையில் காக்கைதீவு மீன்சந்தையைக் குத்தகைக்கு எடுக்க முன்வந்த இரு பொது அமைப்புக்கள் மத்தியில் கூறு விலையில்ஏற்பட்ட கருத்துமுரண்பாடு காரணமாக, மேற் படி சந்தை 2016ஆம் ஆண்டிலிருந்து கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக வியாபாரிகளிடம் வரி வசூலிக்கப்படாமல் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் பிரதேச சபையால் கட்டடப்பட்ட கட்டடத்துக்கு செயலாளரால் மீன் சந்தை மாற்றப்பட்டதையடுத்து பொலிஸாரின் உதவியுடன் வரி வசூலிக்கச் சென்ற உத்தியோகத்தர்கள் வியாபாரிகள் ஒத்துழைப்பு வழங்காமையால் திரும்பிச் சென்றனர்.

மேற்படி சந்தையின் நிலைப்பாடு குறித்து பிரதேசசபை செயலாளர் கருத்துத் தெரிவிக்கும்போது, பிரதேச சபையின் வருமானத்தைக் கருத்திற் கொண்டு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அடுத்த நடவடிக்கை மிக விரைவாக மேற்கொள்ளப் படுமென்றும் கூறினார்.

அதேநேரம் சந்தையின் நிலைப்பாடு குறித்து வியாபாரிகளிடம் வினவியபோது, பிரதேசசபையால் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தை சிறிய கட்டடத்தில் இயங்குவதாலும், கூறுவிலை மண்டபத்திலிருந்து தூர இடத்தில் அமைந்துள்ளமையாலும் வியாபாரிகளுக்கு சிரமம் ஏற்படுகின்றது. எனவே பொருத்தமான இடத்தில் சகாதார விதிமுறைகளுக்கு அமைய மீன் சந்தை அமைக்கப்படுமேயானால் வரியைச் செலுத்த எவரும் தயங்கமாட்டார்கள் என்று வியாபாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (து-ஜ-115)

## மணல் ஏற்றிய சாரதிக்குவிளக்கமறியல்

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிய சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன் றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் வரணிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வாகனத்தைக் கைப்பற்றி, அதன் சாரதிக்குஎதிராகநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதியை எதிர்வரும்22ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (து-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நல்லிணக்கம் உருவாகுவதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை

## அமெரிக்கத் தூதுவர் கூறுகிறார்



கொழும்பு,ஏப்.9
அரசமைப்புச் சீர்திருத்தம், மற் றும் அமைதியான, செழிப்பான, நல்லிணக்கமான எதிர்காலத்தை உருவாக்க, இலங்கை மக்களின் ஆதரவை அமெரிக்கா கோருகின்றது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் குறிப்பிட்டுள்ளார்.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தின் சிறப்பு ஒருங்கிணைப்பாளர், ரொட் புச்வால்ட் மற்றும், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவிச் செயலர் மன்பிரீத் ஆனந்த் ஆகியோர் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பாக, அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளான ரொட் புச்வால்ட் மற்றும், மன்பிரீத் ஆனந்த் ஆகியோர், நல்லிணக்கம் தொடர்பாக பல்வேறு தரப்பினரினதும் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.
இது அடுத்து வரும் ஆண்டுகளில், இலங்கைக்கான அமெரிக்காவின் உதவிகள் மற்றும் கொள்கையை வடிவமைப்பதற்கு உதவியாக அமையும் என்றும் அதுல் கெசாப் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
இந்தப் பயணம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ரொட் புச்வால்ட், இலங்கையில் இன்றைய நிலைமைகள் தொடர்பாக பல்வேறு தரப்புகளினதும் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்வதற்கான பயனுள்ள பயண மாக இது அமைந்தது.
இலங்கையில் பல இடங்களுக்கும் சென்றதன் மூலம், முன்னேற்றங்களையும், இன்னமும் உள்ள சவால்களையும் அறிந்து கொள்ள முடிந்தது. -என்று குறிப்பிட்டுள்ளார். (த-ஜ-4)

## பொலிஸ்மா அதிபர்களுள் இலங்கக்கோன் முன்மாதிரி

### ஜனாதிபதி மைத்திரி பாராட்டு

கொழும்பு, ஏப். 9
பொலிஸ்மா அதிபர்கள் அனைவருக்கும் முன்மாதிரியாக தனது பதவியின் கௌரவத்தைப் பாதுகாத்துப் பணியாற்றிய ஒரு பொலிஸ்மா அதிபராக என்.கே.இலங்கக்கோன் வரலாற்றில் இடம் பிடித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதியை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுச் சந்தித்து, தாம் ஓய்வு பெறுதல் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவித்த சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
சுமார் ஐந்தாண்டுகள் காலம் பொலிஸ்மா அதிபராக அளப்பரிய சேவையாற்றிய இலங்கக் கோனுக்கு ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்து, அவரது சேவையைப் பாராட்டினார்.
இந்த நாட்டின் 33 ஆவது பொலிஸ்மா அதிபராக சேவையாற்றிய என்.கே. இலங்கக்கோன் எதிர் வரும் 11 ஆம் திகதி உத்தியோக பூர்வமாகப் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சாவகச்சேரியில் மீட்கப்பட்ட வெடிமருந்து மிகப்பழையது

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப். 9
சாவகச்சேரியில் மீட்கப்பட்ட வெடி பொருள்களில் உள்ளடங்கியிருந்த சி-4 பிளாஸ்டிக் வெடிமருந்து, மிகவும் பழைமையானது என்றும், அது வெடிக்கும் திறனை இழந்து விட்டது என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக பேச்சாளர் ருவான் குண சேகர தெரிவித்துள்ளதாவது-
சாவகச்சேரி-மறவன்புலவில் உள்ள வீட்டில் இருந்து மீட்கப்பட்ட வெடி பொருள்களில், மூன்று பொதிகளில் 10 கிலோ சி-4 பிளாஸ்டிக் வெடிமருந்தும் காணப்பட்டது. அது மிகவும் பழைமையானது. வெடிப்பதற்கான வேதியல் ரீதியான திறனை அது இழந்து விட்டது.- என்றார்.
மீட்கப்பட்ட வெடி பொருள்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டமை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பேச்சாளர், தீவிரவாத விசாரணைப் பிரிவினர் மேற்கொள்ளும் விசார ணைகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் எந்த தகவலையும் வெளிப்படுத்த முடியாது என்று தெரிவித்தார். (த-ற-ஜ-4)

## பௌத்த பிக்குகளின் விவகாரத்தில் அமைச்சர்களிடையே வாக்குவாதம்

கொழும்பு, ஏப் 9
அவன்காட் நிறுவனம் தொடர்பில் கருத்து வேறுபாடுடைய அமைச்சர் சரத் பொன்சேகாவும், அமைச்சர் விஜயதாஸ ராஜபக் சவும் அமைச்சரவைக் கூட்டத் தின்போது வாக்குவாதத் தில் ஈடுபட்டனர். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வாராந்த அமைச்சரவைக் கூட்டம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றபோது, சரத்பொன்சேகா தாம் பௌத்த பிக்குகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மன்னிப்புக் கோரியமையை ஆட்சேபித்தார். தாம் கூறிய கருத்து, பௌத்த பிக்கு ஒருவர் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைந்திருந்தது என்றும், இந்தப் பௌத்தபிக்குவின் கருத்து மகிந்த ராஜபக்சவின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்டது என்ற அடிப்படையிலேயே தாம் அது தொடர்பில் பேசினேன் என்றும் சரத்பொன்சேகாகுறிப்பிட்டார்.
இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, தாம் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சார்பிலேயே மன்னிப்புக் கோரினேன் என்று தெரிவித்தார்.
அத்துடன், பௌத்த பிக்கு களின் ஆதரவின்றி அரசை நகர்த்த முடியாது என்று விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டார். இதன்போதுதலையிட்ட ஜனாதிபதி, இருவரின் கருத்துக்களும் முக்கியமானவை என்று கூறி அமைதியை ஏற்படுத்தினார். (த-ற-ஜ-4)

## 2,28,000 பேருக்கு நீரிழிவு

கொழும்பு,ஏப்.9
நாட்டின் சனத்தொகையில் 2 லட்சத்து 28 ஆயிரம் பேர் நீரிழிவு நோயால் துன்புறுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். அவர்களுள் பெருமளவிலானோர் நகர்ப்புறப் பிரதேசங்களிலேயே வாழ்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இலங்கையினுள் தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சுகாதாரப் போஷாக்குகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப்புரைக்கு அமைவாக 45 மில்லியன் ரூபாவைச் செலவிடுவதற்கு அமைச்சு ஆயத்தமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
உலக சுகாதார தினத்தை முன்னிட்டுச் சுகாதாரக் கல்வி அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றியிருந்தபோதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"நீரிழிவைத் தவிர்த்துக் கொள்வோம். சிகிச்சைகளை மேற்கொள்வோம். நோயைத் தோற்கடிப்போம்" என்பதே இந்தமுறை உலக சுகாதார தினத்தின் தொனிப் பொருளாகவுள்ளது.
உலக சனத்தொகையில் வருடாந்தம் 1.5 மில்லியன் பேர் நீரிழிவு நோயினால் சாவடைவதாகத் தெரிவித்துள்ள வைத்திய நிபுணர் பாலித மஹிபால, ஒட்டுமொத்த உலகிலும் நீரிழிவுக் கிளினிக்குகள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் 612 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.
நீரிழிவு கண்டுள்ள நபர்களில் நூற்றுக்கு 80 வீதமானோர் மத்திய மற்றும் கீழ்மட்ட வருமானம் பெறும் நாடுகளில் வாழ்வோரே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## 3 ஆயிரம் அரச பணியாளர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை

கொழும்பு,ஏப்.9
லஞ்சங்கள், ஊழல்கள் மற்றும் முறைகேடான விதங்களில் சொத்துக்களைச் சம்பாதித்துக் கொண்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 3 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக லஞ்ச, ஊழல்கள் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இவர்களில் 250 பேர் வரையான அரச உயரதிகாரிகளும் உள்ளதாக லஞ்ச ஆணைக்குழுவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள அதிகளவான முறைப்பாடுகள் கல்வி, பொலிஸ், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் ஆகிய பிரிவுகள் சம்பந்தப்பட்டவைகளாகவே காணப்படுவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## ஆட்சியுரிமைச் சட்ட வரைவு தமிழ் மக்களுக்குப் பாதிப்பு

### நாமல் ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, ஏப்.9
வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் வடக்கில் வாழும் தமிழ் மக்களின் வீடுகளை ஆக்கிரமிக்கும் ஆதிக்கத்தை அரசின் ஆட்சியுரிமைச் சட்டவரைவு ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவு இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரை யாற்றும்போதே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.
அதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது:-
30 வருட பயங்கரவாதப் போரால் இடம்பெயர்ந்து நெருக்கடிகளைச் சந்தித்த தமிழ் மக்கள் இன்று வடக்கில் கைவிடப்பட்ட வீடுகள், காணிகளில் குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றனர்.
வடக்கில் 65 ஆயிரம் வீடுகளை [illegible] [illegible] இந்தியா உறுதியளித்தது. அதனை இன்றாவது நிறைவேற்ற முயற்சிப்பதை வரவேற்கின்றேன்.
இந்த நிலையில் நீதியமைச்சர் கொண்டு வந்துள்ள ஆட்சியுரிமைச் சட்ட மூலத்தால், போருக்கு அஞ்சி வெளி நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் செல்வந்தர்களான தமிழர் கள், மீண்டும் இங்கு வந்து, பல வருட காலம் புலம் பெயர்ந்தோரின் காணிகளில் வாழும் குடும்பங்களை வெளியேற்றும் நிலை உருவாகும். அந்த மக் கள் மீண்டும் நடுவீதிக்குத் தள்ளப்படுவார்கள், இடம் பெயர்ந்தவர்களாவார்கள், இது அநீதியாகும் - என்றார். (த-ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு நன்கொடை

## வழங்குகின்றது சீன அரசு

கொழும்பு, ஏப். 9

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் இலங்கைக்கு, 77 மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்குவதற்குச் சீன அரசு முன்வந்துள்ளது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை சீனப் பிரதமர் லி கெகியாங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின்போது, கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை விரைவுபடுத்த இணக்கம் காணப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கு 500 மில்லியன்யுவானை(77 மில்லியன் டொலர்) நன்கொடையாக வழங்கவும் சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.



பேச்சுக்களில், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்வதற்குஇரண்டு நாடுகளின் பிரதமர்களும் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை விரைவாக நடைமுறைப் படுத்தவும், இணக்கம் காணப் பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக்கு 500 மில்லியன் யுவான்களை (77 மில்லியன் டொலர்) நன்கொடையாக வழங்கவும் சீனா முன்வந்துள்ளது. இந்தச் சந்திப்பின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏழு உடன்பாடுகளும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

> பேச்சுக்களில், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு இரண்டு நாடுகளின் பிரதமர்களும் விருப்பத்தை வெளியிட்டனர்.

# இலங்கை-சீனா இடையில் 7 உடன்பாடுகளே கைச்சாத்து

கொழும்பு, ஏப். 9

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் பத்து உடன்பாடுகள் கையெழுத்திடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் 7 உடன்பாடுகளே கைச்சாத்திடப் பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கைக் குழுவினர் கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை மாலை சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சீனப்பிரதமருக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து 7 உடன்பாடுகளும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கைதிகளை ஒப்படைப்பது தொடர்பான இரு தரப்பு உடன்பாடு, சீன வர்த்தக அமைச்சுக்கும், இலங்கையின் மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்பாடு, இரு நாடுகளுக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு, நடமாடும் சிறுநீரகப் பரி சோதனைத் திட்ட உடன்பாடு, சீன அபிவிருத்தி வங்கிக்கும், இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி குறித்த உடன்பாடு, இரண்டு நாடுகளின் தேசிய விஞ்ஞான நிறுவகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு ஆகியவையே கைச்சாத்திடப்பட்டுள்ளன. (த-5)

# போர்ட் சிற்றி முன்னெடுப்பில் சீனாவும் இலங்கையும் உறுதி

கொழும்பு, ஏப். 9

முடங்கியுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் சீனாவும் இலங்கையும், உறுதியுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனத் தலைநகர் பீஜிங்கில் சீன இலங்கைப் பிரதமர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, சீன வெளி விவகார அமைச்சின் ஆசிய விவகாரங்களுக்கான திணைக்களத்தின் தலைவர் சியாவோ கியான் ஊடகங்களைச் சந்தித்தார்.

அப்போது கருத்து வெளியிட்ட அவர், இந்தத் திட்டப் பணிகளை விரைவாகவும், விரிவாகவும் முன்னெடுப்பதற்கு இரு தலைவர்களும் இணங்கியுள்ளனர். திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக, இலங்கையின் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், சீனா மேலதிக தொழில்நுட்ப விவகாரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இது முக்கியமான ஒரு திட்டம். இந்தத் திட்டத்தை வலுவாக முன்கொண்டு செல்வதில் இரு நாடுகளும் பலமான விருப்பைக் கொண்டுள்ளன. கூடிய விரைவில் இந்தப் பணிகள் தொடங்கப்படும் என்று சீனாவின் தரப்பில் நாங்கள் நம்புகிறோம். நீண்டகாலம் காத்திருக்க வேண்டியதில்லை என்று நம்புகிறோம், என்று தெரிவித்தார்.

எனினும் கடந்த ஒரு வருடகாலமாகத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தமைக்கான இழப்பீட்டு விவகாரம் தொடர்பாக அவர் எதையும் தெரிவிக்கவில்லை.

சீன நிறுவனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக இலங்கை அரசு உத்தரவாதம் அளித்திருப்பதாகவே அவர் குறிப்பிட்டிருந்தார். அம்பாந்தோட்டையில் சிறப்புப் பொருளாதார வலயத்தை அமைப்பது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தத் திட்டத்துக்குச் சீனா முன்னுரிமை கொடுக்கும் என்றும், சுதந்திர வர்த்தக உடன்பாடு பற்றிய பேச்சுக்கள் விரைவுபடுத்தப்படும் என்றும், சியாவோ கியான் குறிப்பிட்டார். (த-5)

# யுவதிகளுடன் சேஷ்டை; இளைஞருக்குத் தர்ம அடி

கொழும்பு, ஏப். 9

வீதியில்சென்ற யுவதிகளின்பிருட்டத்தைப் பிடித்து அமுக்கிய இளைஞனுக்குப் பொதுமக்கள் தர்ம அடி கொடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் பாணந்துறைப் பிரதேசத்தில் வெலிகட என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று, யுவதிகள் பலரின் பிருட்டத்தைப் பிடித்து அமுக்கிச் சென்றுள்ளார். தொடர்ச்சியாக இந்தச் சம்பவம் இடம்பெற்று வந்தது. இதனைக் கேள்விப்பட்ட இளைஞர்கள், மேற்படி இளைஞருக்காக மறைவாகக் காத்திருந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வழமைபோன்று அந்த இளைஞர் வந்ததும், மறைந்திருந்த இளைஞர்கள் அவரைப் பிடித்து முறையாகக் கவனித்தனர். இதன் பின்னர் அவரைப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். (த-5)

# விசேட பஸ் கட்டணங்கள் 50 வீதத்தால் உயர்த்தப்படும்

கொழும்பு, ஏப். 9

சிங்கள, தமிழ்ப் புது வருடத்தை முன்னிட்டு கொழும்புக்கு வெளியில் செல்லும் பஸ் கட்டணங்களை 50 வீதத்தால் உயர்த்துவதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதியளித்துள்ளதாக, ஆணைக்குழுவின் தலைவர் பீ.ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

இந்த விசேட பஸ் சேவை நேற்று முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படவுள்ளது. சாதாரண பயணிகள் பஸ் கட்டணத்துக்குப் பதிலாக ஒன்றரை மடங்கு கட்டணம் இந்த விசேட பஸ் சேவையின்போது அறவிடப்பட வுள்ளது.

இந்த விசேட சேவைக்காக 3 ஆயிரம் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. கொழும்பிலிருந்து வெளியில் செல்லும் பஸ்கள் வெறுமையாக மீண்டும் திரும்பி வரும் நட்டத்தை ஈடு செய்யும் வகையில் இந்த பஸ் கட்டண அதிகரிப்பு தீர்மானிக்கப்பட்டதாக ஆணைக் குழுவின் தலைவர் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார். (த-5)

# போதைப்பொருள் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஏப். 9

110 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட 13 சந்தேக நபர்களும் எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை முற்படுத்திய பின்னரே இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

10 ஈரானியர்கள், ஒரு பாகிஸ்தானியர் உள்ளிட்ட சந்தேக நபர்கள் கடந்த முதலாம் திகதி காலிப் பிரதேசத்தில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் வைத்துக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# மகிந்த, கோத்தாவின் ராணுவப் பாதுகாப்பு முற்றாக நீக்கப்படும்

## பாதுகாப்புச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 9

முக்கிய பிரமுகர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படுவது சட்ட விரோதம் என்றும், மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கான இராணுவப் பாதுகாப்பு முற்றாக நீக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கான இராணுவப் பாதுகாப்பு கட்டம் கட்டமாக விலக்கப்பட்டு, முற்றிலுமாக நீக்கப்படும். அதற்குப் பதிலாக, பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்படுவர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்குக்கூட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தனது பாதுகாப்புக்காக இராணுவத்தினரை வைத்துக் கொண்டார். இது சட்ட விரோதமான செயற்பாடு. இப்போது மகிந்த ராஜபக்ச, 103 பொலிஸார், 103 இராணுவத்தினர் என்று மொத்தம் 206 படையினரைத் தனது பாதுகாப்பு அணியில் கொண்டிருக்கிறார்.

அவரது பாதுகாப்பு அணியில் இருந்து 50 இராணுவத்தினரை விலக்கிக் கொள்வதற்காக, 50 பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனாலும், அந்த 50 இராணுவத்தினரும் இன்னமும் அவரது பாதுகாப்பு அணியிலேயே இருக்கின்றனர். இப்போது அவரது பாதுகாப்பு அணியில் 256 படையினர் உள்ளனர்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு பாதுகாப்பு அளித்து வரும், 50 படையினர் விரைவில் விலக்கிக் கொள்ளப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக 50 சிறப்பு அதிரடிப்படையினர் நியமிக்கப் படுவர், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அறுபது ஆண்டுச் சரித்திரம் நீண்டு தொடர வேண்டுமா...?

தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இப்போதைய வடக்கு, கிழக்கு மாகாணங்களை, ஒரு மாநிலமாகவும்--

சிங்களம் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஏனைய ஏழு மாகாணங்களை மற்றொரு மாநிலமாகவும்--வகுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு வகுத்துத் தொகுத்து அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகளை, வெளிப்படுத்தியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட,-- வரையப்பட்ட-- அரசியல் தீர்வுக்கான திட்ட வரைவை முன்மொழிந்து பேசுகையிலேயே (நேற்று முன்தினம்) அவர் மேற்கண்ட கருத்துக்களை மையப்பொருளாக வைத்து இயம்பினார்.

இலங்கை வாழ் தமிழ்ச் சமூகத்தினரால், மிகப் பல நூற்றாண்டுகளாகத் தனித்துவமாகப் பேணப்பட்டு வந்த, தனித்தன்மையின் அடிப்படையில், எந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும், ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்களை சார்ந்திருக்காது வாழ்வதற்கு, ஒற்றை ஆட்சிக்குப் பதிலாக கூட்டாட்சி அரசு நிறுவப்பட வேண்டும்; அது மிகமிக அவசியம்,-- என்றும் முதலமைச்சர் இடித்து உரைத்திருக்கிறார்.

முதலமைச்சர் முன்மொழிந்துள்ள தமிழ் மக்களினது உரிமைகள்-பிரதானமான-தட்டிக்கழிக்க முடியாத உரிமைகள்-வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தும் இங்கே ஆழ்ந்து அகன்று தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

★ ஆட்சி அதிகாரம், ஒரு சமூகத்தினிடம் குவிக்கப்படும் போக்கின் அபாயம், தவிர்க்கப்பட வேண்டும். அதிகாரங்கள் சகல சமூகங்களுக்கு இடையேயும் சமமாகப் பகிரப்பட வேண்டும். அதனை முழு நாட்டினதும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் உறுதி செய்தல் அவசியம்.

★ மாநில எல்லைகளுக்கு உட்பட்ட, அரச நிலங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

★ பொலிஸ் அதிகாரங்கள், முழுமையாக மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டாக வேண்டும்.

★ சிறுபான்மை இன மக்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள், சோல்பரி யாப்பின் 29 ஆவது உறுப்புரைக்கு ஏற்ப அமைய வேண்டும்.

★ நாட்டின் அரசமைப்பு, அனைத்துலக மட்டத்தில் நிலவும் நியமங்களின் அடிப்படையிலும் மற்றும் மனித உரிமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பான சாசனங்களில் கூறப்பட்டவை மற்றும் நியமங்களுக்கு அமைவாகவும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பவை முன்மொழிவுகளின் முக்கிய அம்சங்களாகும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், இனப்பிரச்சினை விவகாரம் மாற்று வடிவம் கொண்டபோது--

ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தவர்கள், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து, அவர்களின் தலைவர்களுடன் பேசுவதும், பின்னர் முறிந்து போவதுமே தொடர் கதையாக நீண்டு விரிந்தமை சரித்திரம்!


அவ்வப்போது இனப்பிரச்சினை தொடர்பில் பேசுவது ஒரு சம்பிரதாயமாக மாறியது.

அரசியல் தீர்வுப் பொதிகளை (பெயருக்கு) முன்வைப்பதும், பின்னர் கிடப்பில் போடுவதுமாகக் காலம் கரைந்தது.

அறுபது வருடங்களுக்கு மேலாக நீண்ட அந்த விவகாரத்துக்கு, பதவிக்கு வந்த எந்தச் சிங்கள அரசாலும் தீர்வு காண இயலவில்லை. இனவாதத்தீயில் நாட்டைப் பொசுக்கியது தான் கண்ட பலன்.

அதுவே, நீண்டு தொடரவேண்டும் என்று நல்லாட்சி அரசு விரும்புகிறதோ என்று வினவுவதை விட வேறு என்ன செய்யலாம்?

அரசியல் தீர்வு, என்பது வாயில் சப்பி உமிழும் சுவிங்கம் அல்லவே...!



# தமிழ்-முஸ்லிம் தலைமைகள் இணைய வேண்டும்

எம்.ஐ.முபாறக்

இலங்கையின் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சி இன்று நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அனைத்து மக்களின் கருத்துக்களையும் உள்ளடக்கிய மக்கள் நேய அரசமைப்பாக இந்த அரசமைப்பு அமைய வேண்டும் என்பதற்காக அரசு மக்கள் கருத்துக்களை அறியும் பணியை ஒருபுறம் முடுக்கிவிட்டுள்ளது. மறுபுறம், நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளது.

இந்த அரசியல் நிர்ணய சபை கூடியதைத் தொடர்ந்து அரசமைப்பு உருவாக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதே வேளை, அந்த அரசமைப்பில் பிரதான இடத்தைப் பிடிக்கப் போகின்ற தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் மக்கள் நம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்தநிலையில், மறுபுறத்தில் புதிய அரசமைப்பின் ஊடாக தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வைக் காண்பதற்கு இந்த அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு பேரினவாதிகள் வேறு அர்த்தம் கொடுத்து அந்த முயற்சியைக் குழப்புவதற்கு முயற்சி செய்கின்றனர். புதிய அரசமைப்பின் ஊடாக இந்த அரசு தமிழர்களுக்கு தமிழீழத்தை வழங்கப் போகின்றது என்று பௌத்த மக்கள் மத்தியில் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

### கைவிடப்பட்ட தமிழீழக் கோரிக்கை

ஆனால், தமிழீழக் கோரிக்கையை தமிழர்கள் எப்போதோ கைவிட்டு விட்டார்கள் என்ற உண்மையை இந்தப் பேரினவாதிகள் பௌத்த மக்களிடம் மறைத்தே வருகின்றனர். அம்பாறை - பாலமுனையில் கடந்த மாதம் இடம் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தமிழர் எவ்வாறான தீர்வை வேண்டி நிற்கின்றார் கள் என்பதைத் தெளிவு படுத்தினார்.

> தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது என்பதையும் தமிழர் தரப்பு பௌத்த மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு, பிளவுபடாத நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வையே கோரி நிற்கின்றனர் என்ற செய்தியைச் சம்பந்தன் அந்த மாநாட்டில் மீண்டும் ஒரு தடவை நினைவூட்டியிருக்கின்றார். அரசியல் தீர்வு முயற்சியைக் குழப்புவதற்குப் பெரும்பாடு படும் பேரினவாதிகளுக்கு சம்பந்தனின் இந்த உரை நல்லதொரு குட்டாகவே அமைந்துள்ளது.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான செயற்பாடுகள் தீவிரமடைந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழர்கள் வேண்டி நிற்கும் தீர்வு; அதிகாரப் பகிர்வுதான் என்பதையும், தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது என்பதையும், தமிழர் தரப்பு பௌத்த மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

போர் முடிந்ததன் பின்னர் தமிழரின் போராட்டம் முழுக்க ஜனநாயகப் போராட்டமாக மாறியுள்ளது என்ற செய்தியை அனைத்துப் பௌத்த மக்களுக்கும் தெரியப்படுத்துவதோடு, தமிழர்கள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை நோக்கி நகருகின்றார்கள் என்று பௌத்த மக்களுள் சிலர் எண்ணி இருக்கும் தப்பெண்ணம் நீக்கப்பட வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பில் பெரும்பான்மை இன மக்களிடம் காணப்படும், தப்பெண்ணத்தை நீக்கி, அரசியல் தீர்வு முயற்சியை வெற்றி பெற வைக்கும் பணி சிறுபான்மை இனங்களின் பெரும் பொறுப்பாக, அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து நிற்பதன் மூலம்தான் இது சாத்தியப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுருவி

# உதிரிகள் புரிந்த கேவலமான வேலைகள்

ஒரு சிறு கைத்துப்பாக்கியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஈழத்தமிழருக்கான விடுதலைப் போராட்டம், பல போராளிகளினது உயிர்த்தியாகங்களோடும் பொதுமக்களது உயிரிழப்புக்களோடும், அவர்களது சொத்தழிவுகளோடும், பசி பட்டினி, நோய், பொருளாதாரத் தடை என்பவற்றோடும் பின்னிப்பிணைந்தது. இந்தப் போராட்டத்தை வழிநடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், பௌத்தசிங்களப் பேரினவாத அரசியல் சக்திகளுக்கு இறுதிவரை சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தது. அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது செயற் திறன், இயக்கத்தின் கட்டுக்கோப்பு, போரியல் நுணுக்கம், போராடும் ஆற்றல், சமூகத்தின் பாற்கொண்ட கரிசனை, பாரபட்சமற்ற நியாயத் தீர்ப்பு என்பவை பாராட்டுதற்குரியவை. தமிழ் மக்கள் மத்தியிலும் அவர்களுடைய மனங்களிலும் இமயமாய் எழுந்து நின்று புலிகள் இயக்கம் சாதனை படைத்தமை வரலாற்றுப் பதிவாகும்.

இவ்வாறு வரலாற்றுப் பதிவாகிவிட்ட ஒரு போராட்ட அமைப்பு, இறுதியில் அதன் முகம் சிதைந்து, முகவரியற்றுப் போனதென்பதை இன்றுவரை தமிழ்மக்களில் பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை ஜீரணிக்க இயலாத நிலையிலும் அவர்கள் காணப்படுகின்றனர் என்பது மிகையானதொரு கூற்று அல்ல.

அதற்குக் காரணம், சிங்கள தேசத்தின் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைகளில் இருந்து வெளிப்படும் அரசியலாளர்களின் செயற்பாடுகளுக்கு, அவ்வப் போது அரசியல் மற்றும் இராணுவ ரீதியாகப் பதிலடி கொடுத்துத் தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் இயக்கம் பாதுகாத்து வந்தமையே ஆகும்.



> தமிழ் மக்கள் மத்தியிலும் அவர்களுடைய மனங்களிலும் இமயமாய் எழுந்து நின்று புலிகள் இயக்கம் சாதனை படைத்தமை வரலாற்றுப் பதிவாகும்.

### காட்டிக் கொடுப்புக்கள்

இருப்பினும், அவ்வப்போது காட்டிக் கொடுப்புக்கள், கயமைத்தனங்கள், உறவாடிக்கெடுத்தல், துரோகமிழைத்தல் போன்ற எதிரிக்குச் சார்பான செயற்பாடுகள் இயக்கத்துக்கு எதிராக எழுந்து நின்றபோதும், அந்த இயக்கமானது, தனது நுண்ணிய புலனாய்வு அறிவு மூலம் மற்றும் ஊடுருவல் தன்மை மூலம் சகலவற்றையும் முறியடித்து, பொதுமக்களுக்காக, அவர்களுடைய பாதுகாப்புக்காக, அவர்களின் வாழ்வாதாரத்துக்காக தம்மையே அர்ப்பணித்து வந்தது என்பது ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

போராட்ட அமைப்புக்குள் போராட நுழைந்தவர்கள் எல்லோரும் போராளிகள் அல்லர்! துப்பாக்கிகளைத் தோளிலே கொழுவியவர்கள் எல்லோரும் களம் பல கண்ட வீரர்களும் அல்லர். ஒரு போராட்டத்தின் பால் கொண்ட விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பு என்பவை, குறிப்பிட்ட ஒரு சிலரிடமே மேலோங்கியிருந்தன. மிகுதிப்பேர் ஏனையவர்களின் பங்களிப்பைத் தாமும் பகிர்ந்து கொண்டு, சகபோராளியின் வீரச்சாவில் குளிர் காய்ந்து கொண்டு உலா வந்த நிலையில், கள முனையில் எதிரியுடன் சமர் புரிவதற்கு போராளிகளுக்கான ஆள்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.

இவ்வாறு ஒரு பகுதி களமுனையிலும், இன்னொரு பகுதி வெளிக்கள நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில், இந்த வெளிக்கள நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பலரது செயற்பாடுகள் அவர்களின், மக்கள் மீதான அணு குமுறைகள்... இயக்கத்தின் கட்டுக்கோப்பை மீறிய நிலையில், பொது மக்களில் பலரும் முகம் சுழிக்கத் தொடங்கினார்கள். இப்படிப்பட்டவர்களையே மக்கள் பின்னாளில் உதிரிகள் எனவும் அழைக்கத்தொடங்கினர்.

இந்த உதிரிகள், போராளி என்ற முகம் தரித்துக் கொண்டு போராட்டத்துக்கான பங்களிப்பிலிருந்து பின் நகர்ந்தபடி, தங்களது சுயதேவைகளைப் பூர்த்திசெய்யவும் தமது குடும்ப பொருளாதாரக் குறைபாடுகளைப் பூரணப்படுத்தவும் புலிகள் இயக்கத்தைப் பயன்படுத்தத் தொடங்கின. இவற்றில் உயர் மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரை உள்ளுக்குள் சுயநலச் செயற்பாடுகள் ஊன்றியிருந்த நிலையில், உண்மையில் தலைவனையும் நேசித்து, தமிழ் மக்களையும் பாதுகாத்துக் களமுனையில் போராடி உயிர் துறந்தவர்கள் அநேகமானவர்கள் என்பதையும் இங்கே மறுப் பதற்கில்லை.

ரணில்–பிரபாகரன் போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போது பல உதிரிகள் எதிரித் தரப்பினரால் பகடைகளாக்கப்பட்டு, பணத்துக்கு அடிமைகளாக்கப்பட்டு, சோரம் போய்நின்ற போது, விடுதலை அமைப்புக்குள் ஒரு தளம்பல் நிலை ஏற்பட்டதென்னவோ உண்மைதான். இருப்பினும், நிலைமையைச் சீர்செய்து மீண்டும் போராட்டத்துக்கான பாதையை வழி வகுத்தார் தலைவர் பிரபாகரன்.

களமுனைகளில் போராடுவதற்கான ஆள்கள் பற்றாக்குறை நிலவிய கால கட்டத்தில், வீட்டுக் கொருவர் நாட்டுக்காக விரைந்து வாரீர்... என்ற பரப்புரைச் செயற்பாடுகளும் பலவீனமடைந்துவிட, இயக்கத்துக்கு ஆள் சேர்க்கும் படலம் ஆரம்பமாகியது. ஆரம் பத்தில் இயக்கத் தில் இருந்து விலகியவர்கள் மீளவும் இணைக்கப்பட்டார்கள்.

வேறு சிலர் தங்கள் குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு, தாம் சேர முடியாது என அடம்பிடித்தார்கள். இந்த நிலையில், வீதிகளிலும் வீடுகளிலும் இயக்கத்துக்கு ஆள் சேர்ப்பதற்கு இந்த உதிரிகளானவர்கள் முன்நின்று செயற்பட்டார்கள்.

### பிள்ளை பிடிப்பு வேலைகள்

இந்த நிலையில், தமிழ் மக்கள் தமது உயிர்கள், உடைமைகளின் இழப்போடு ஏதிலிகளாக இடம்பெயர்ந்த நிலையில், பல அவலங்களோடு போராடிக் கொண்டிருந்தபொழுது, களமுனைக்கான ஆள்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உதிரிகள் பலவும் பிள்ளைப் பிடிப்பு வேலையை ஆரம்பித்தன.

இதன் நிமித்தம் பாதிக்கப்பட்டவர்கள். இயக்கத்தையும் அந்த இயக்கத் தலைவன் பிரபாகரனையும் வாய்க்கு வந்தபடி வசை மொழிகளால் திட்ட ஆரம்பித்தார்கள். உண்மையில் என்ன நடக்கிறது? எவருடைய ஏற்பாட்டில் நடக்கிறது? தலைமைப் பீடத்துக்குள் என்ன நிகழ்கிறது? முக்கியமானவர்கள் எல்லாம் எங்கே போய்விட்டார்கள்? தலைவர் எங்கே? என்ற பலவகையான வினாக்களுக்குப் பொதுமக்கள் மட்டுமன்றி, இரண்டாந்தர சிரேஷ்ட பொறுப்பாளர்களும் பதில் எதுவும் புரிபடாத நிலையில் மனம் குழம்பி நின்றார்கள்.

வன்னிப் போர்க்களத்துள் இந்த உதிரிகள் செய்த கேவலமான வேலைகளால், மக்களால் நேசிக்கப்பட்ட, எதிரிகளால் அஞ்சப்பட்ட, உலகமே வியந்து பார்க்கப்பட்ட ஒரு போராட்ட அமைப்பு இறுதி முடிவில் களங்கப்பட்டு, காணாமற்போன ஒருதோற்றத்துக்குள் கொண்டுவரப்பட்டது.

## சீரழிந்த பின்னர் உணர்ந்து எதுவித பயனும் இல்லை

நாகரிகத்தின் விளிம்பை நோக்கி ஓடிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் இந்த நாகரிக வாழ்க்கையில் எங்களது வாழ்க்கைத் தத்துவங்களை இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை எவருமே கண்டுகொள்வதாக இல்லை. கடந்த 3ஆம் திகதி உதயனில் பிரசுரமாகிய 'இந்தநிலை எப்போது மாறும்' என்ற செய்தியின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டேன். இன்று மக்கள் நாகரிக மோகத்தில் சென்று வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருப்பதையே காணக் கூடியதாக உள்ளது. ஆனால் இதன் விளைவு அவர்களும் அவர்களைச்சார்ந்தவர்களையும் சீரழித்துக் கொண்டிருக்கின்றது என்பதைச் சீரழிந்த பின்னர் உணர்ந்து கொள்வதில் எதுவித பயனும் இல்லை. ஆண்டவன் உலகத்தில் வளங்களைப் படைத்து, அவற்றைச் சீராக்கி, பயன்பெற்று வாழ்வதற்காக மனிதர்களையும் அவரவர் விதிப்படி ஆறறிவுடன் படைத்துள்ளான். ஆறாவது அறிவைப் பயன்படுத்தி ஆண்டவனால் படைக்கப்பட்ட வளங்களை வளமாக உபயோகித்து நல்வாழ்வு வாழ்பவனே மனிதன் ஆவான்.

செய்யும் தொழிலே தெய்வம் என்ற முதுமொழிக்கு அமைவாக, அவரவர் தத்தமது தகமைக்கு ஏற்ற தொழில்களைச் செய்து வாழும் மனப்பக்குவம் ஒருவரிடம் இருக்குமாயின், இன்று இந்த நிலை ஏற்பட்டு இருக்காது. பிச்சை எடுத்தவர்கள் திருந்தித் தொழிலில் ஈடுபட்டு, தத்தமது உற்பத்திகளை விற்பனை செய்து வாழ்வாதாரத்தைத் தேடிக்கொள்ளும் செயற்றிறன் வரவேற்கப்பட வேண்டும். ஆனால் பிச்சை போட்டவர்களுக்கு அந்த உற்பத்திகளை முன்வந்து வாங்குவதற்கு மனப்பக்குவம் ஏற்படாத நிலையை என்ன என்று கூறுவது? கடையில் விலை கூடின சிறந்த வாசனை மிகுந்த ஊதுபத்திப் பெட்டிகளை வாங்கி கொளுத் தினால் தான் கடவுள் ஏற்றுக் கொள்வார் என்ற நினைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுது தான் வேலையற்றவர்களுக்கு வேலை கிடைக்கும். இதனால் சமூகம் வாழும். நாடும் செழிப்படையும் என்ற உணர்வு பூர்வமான சிந்தனை ஏற்படும் பொழுது தான் இந்த நிலைமாறும்

இந்த ஊதுபத்தி உற்பத்திகளை உணர்வு பூர்வமாக வாங்குபவர்களில் நானும் ஒருவன். ஏனெனில், அந்தப் பெண்கள் தங்கள் கடந்த கால வாழ்வில் இருந்து விடுபட்டு பிறப்பின் அர்த்தம் புரிந்து வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச் செல்லச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த உற்பத்திப் பொருள்களுக்கான கேள்வி கூடும் பட்சத்தில் அது ஒரு பெரிய தரமுள்ள தொழிற்சாலையாக உருப்பெற்று நாட்டின் தேசிய வருமானத்தில் முக்கிய பங்கைக் கூட வகிக்க முடியும்.

ஊதுபத்திகளைக் கொளுத்தாத வீடும் இல்லை, கோயில்களும் இல்லை. எனவே இவர்களின் ஊதுபத்திகளை வாங்கும் மனப்பக்குவம் [illegible]

நலன் விரும்பி

## சைவ மகா சபையின் முயற்சி வெற்றி பெறட்டும்

வாய்விடாச் சாதிகளின் மீது மிகுந்த இரக்கம் கொண்டு, அநியாயமாக ஆலயங்களில் பலியிடப்படும் ஆடுகள், கோழிகள் சார்பாக நீதிமன்றம் சென்று மிருக பலிக்குத் தடையுத்தரவைப் பெற்றுக் கொண்ட சைவ மகா சபையின் முயற்சி பாராட்டுதற்கும், வணங்குவதற்கும் உரியது.

மிருகபலிக்கெதிராக உணவு தவிர்ப்பில் இருந்து வருடா வருடம் விழிப்புணர்வையும் மக்களிடையே தோற்றுவித்து அறிக்கைகளோடு மட்டும் நின்று விடாது அரச உயர் பீடங்களோடும், நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் பிரேரணை கொண்டு வருவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளோடும் அகில இலங்கை சைவமகாசபை தன்னை அர்ப்பணித்து வருவதனால் சைவசமய மக்களிடையே விசுவாசமான ஆதரவைப் பெற்று உள்ளது. வழக்கொன்றினாலே மிருக பலியைத் தடுக்க முடியும் என்பதை ஏனைய பெரியவர்கள் உணர்ந்தும் அதில் தலையிடாமல் ஒதுங்கிய நிலையில் சைவ மகா சபை அதன் தலைவர் ஊடாக சட்டத்தரணி மணிவண்ணனின் அனுசரணையோடு தடையீட்டு எழுத்தாணை மனுவொன்றைத் தாக்கல் செய்து வெற்றி கொண்டமை பாராட்டப்பட வேண்டியதொன்று.

சமயம் என்பது பதவிநிலை கருதாத சாத்வீகமான சாதனை மிக்க தென்பதை சைவமகாசபை தனது செயற்பாட்டின் மூலம் நிரூபித்துள்ளது. வெல்க அதன் பணிகள், அதனோடு இணைக பல அணிகள்.

கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook :
Twitter : U




# 4 ஐ.எஸ். சந்தேக நபர்கள் டென்மார்க்கில் கைது

## வெடிபொருள்களும் மீட்பு

கோபன்ஹேகன், ஏப்.9

டென்மார்க் பொலிஸார் ஆயுதங்கள், வெடி பொருள்கள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்ப வத்தில் இவற்றை வைத்திருந்ததாகச் சந்தே கிக்கப்படும் 4 சந்தேக நபர்கள், ஐ.எஸ். அமைப் புடன் தொடர்புவைத்திருந்த குற்றச்சாட்டிலும், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோபன்ஹேகன் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மட்ஸ் ஜென்சென் தெரிவித்தனர்.

அவர்களின் தாக்குதல் முயற்சி குறித்து தெளி வான தகவல்கள் எதுவும் பெறப்பட வில்லை. பெல்ஜியம், பாரிஸ் நகரங்களில் இடம்பெற்ற தாக்குதலுக்குப் பின்னர் ஐரோப்பிய பொலி ஸாரின் அதிரடி நடவடிக்கையால் இந்த அதிர டிக் கைது நடைபெற்றுள்ளது. குண்டுவெடிப் புகள், கைதுகளால் தற்போது ஐரோப்பாவில் பதற்றம் நிலவுகிறது.

(த-ரி4)

# சிமெந்துத் தெ

# 300 பேரைக் 

## சிரியாவில் நேற்று மு

டமஸ்கஸ், ஏப்.9

சிரியாவில் சிமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்த 300 தொழிலாளர்கள், கட்டட ஒப்பந்ததாரர் கள் ஐ.எஸ். அமைப்புடன் கூட்டிணைந்த போராளிக் குழுவினால் கடத்தப்பட்டுள்ளதாக நேற்று முன் தினம் மாநில அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்- படியா எனும் சிமெந்துத் தொழிற்சாலை ஊழி யர்களே இவ்வாறு கடத்தப்பட்டவர்களாவர்.

டமஸ்கசுக்கு அண்மையில் தொழிலாளர் கடத்தி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன் தினத்தில் இருந்து தொழிலாளர் களுடன் நிறுவனத்தினர் தொடர்பு கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தலை நேரடியாகப் பார்த்தவர், கிட்டத்தட்ட நூறுக்கு மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

ஆனால் உள்ளூர் அதிகாரி தெரிவிக்கையில், 150 இலிருந்து 250 தொழிற்சாலைத் தொழிலாளர்கள்

காணாமற்போயுள்ளனர் என 
சிரியாவில் உள்ள லண்டன் 
விக்கையில், சிமெந்துத் தொழி
பெற்ற தாக்குதலின்போது 140
தாகவும், 170 பேர் கடத்தப்பட்
தெரிவித்தனர்.

சிரியாவின் தலைநகர், ஜன
ஆட்சிக்குட்பட்டதாகும். குறித்த 
சாலை அரசுக்குக் கீழே இயங்
பிடத்தக்கது.

சிரியாவின் ஐ.நா. பிரதிநிதி ஸ்ர
தெரிவிக்கையில், போராளிகள்
யில் இடம்பெற்ற வந்த உள்ந
நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்பை
தற்போது அமைதி நிலவுவதா
பட்டது. எதிர் வரும் வாரம் இடம்
கலந்து கொள்ளவதற்கு சிரிய அ
மும் வந்தடையவில்லை எனத் 



ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் நேற்று முன்தினம் கார்கோ ரொக்கெட்டை ஏவியுள்ளது. 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்துக்குப் பின்னர் மீண்டும் விண்ணுக்குச் செலுத்தப்படும் ரொக்கெட் இதுவாகும். இது 6 விண்வெளி வீரர்களுக்குத் தேவையான பொருள்களைச் சுமந்து செல்கிறது. சுமார் 3 ஆயிரத்து 100 கிலோ பொருள்களை ஏற்றிச் செல்கிறது. (த-ரி4)

# முஸ்லிம் லீக், புதிய தமிழகம் போட்டித் தொகுதி அறிவிப்பு

தமிழக சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் சில கட்சிகளுக்கான தொகுதி ஒதுக்கீட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி இந்தியன் யூனியன் முஸ்லிம் கட்சி வாணியம்பாடி, கடையநல்லூர், பூம்புகார், விழுப்புரம் மற்றும் மணப்பாறை ஆகிய ஐந்து இடங்களில் போட்டியிடும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

தி.மு.க தலைமையிலான கூட்டணியில் கடைசியாக இணை ந்த புதிய தமிழகம் கட்சிக்கு ஒட்டப்பிடாரம், வாசுதேவநல்லூர், திருவல்லிப்புத்தூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகிய தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதே கூட்டணியில் இணைந்துள்ள மனிதநேய மக்கள் கட்சி எங்கெங்கு போட்டியிடும் என்பது இதுவரை தெரியவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 41 தொகுதிகள் எவை என்பது குறித்த அறிவிப்பு கடந்த வியாழக்கிழமை வெளியா னது.

(த)

# பாடகியை மே

# பதம் பார்த்தது ர

## இந்தோனேசியாவில் சம்பவ

ஜகார்த்தா, ஏப்.9

இந்தோனேசியாவில் பாம்புக ளுடன் மேடையில் பாட்டு பாடிய பாடகி ஒரு வரை, எதிர் பாராதவிதமாக ராஜநாகம் தீண்டியதால் அவர் மேடை யிலேயே உயிரிழந்த சம்ப வம் அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது. மேற்கு ஜாவாவில் உள்ள கரவாங் என்ற நகரில் இர்மா ப்ளூ என்ற 29 வய தான பொப் பாடகி, சில தினங் களுக்கு முன்னர் கலை நிக ழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுள் ளார். இவர் இசைக் கச்சேரி யில் 3 வருடங்களாகச் சிறிய பாம்புகள் முதல் மலைப் பாம்புகள் வரை தனது உட லில் சுற்றிக் கொண்டு பாடல் களைப் பாடு வதில் பிரபலமா னவர்.



ஆனால் குறிப்பிட்ட நாளில் மலைப்பாம்புக்குப் பதிலாக ராஜ நாகத்தைப் பயன்படுத்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனை ஏற்றுக்கொண்ட அந்த பாடகியும் ராஜநாகத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு கூறியுள்ளார்.

பொதுவாக, உயிரைப் பாதுகாத்துக் கொள்ள மலைப்பாம்பின் வாயை முழுவதுமாகக் கட்டி விடுவார்கள். விஷப் பாம்புகளாக இருந்தால் அவற்றின் பற்களை நீக்கி விடுவார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சியில் வரவழைக்கப்பட்ட ராஜநாகத்துக்குப் பல் நீக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. மேலும் இந்த விடயம் பாடகிக்குத் தெரிவிக்கப்படவும் இல்லை. இந் தச் சூழலில் ராஜநாகத்துடன் மேடை ஏறிய அந்த பாடகி முதல் பாடலைப் பாடி முடிக்கிறார். பின்னர் இரண்டாவது பாடலை பாடும்போது அந்த ராஜநாகத்தை ஒரு துணிக்குள் அடைத்துவிட்டு வருகிறார்.

ஆனால், பாம்பு வெளியே இருப்பதை அறியாத

அவர் பா
ரோமாக
தொடை
வலியை
தொடர்ந்
கவனித்
னர். சில
திடீரென
ஆயிரக்
அவர் தி
தார். மரு
சோதனை
ழந்து வி
ளனர். இ
யினர் வ
வருகின்
ளுக்கு த
லையொ
பிடத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலையில்
# கடத்தியது ஐ.எஸ்.
## ழுன்தினம் சம்பவம்


தெரிவித்தார்.
அவதானிகள் தெரி
ழிற்சாலையில் இடம்
0 பேர் ஓடித் தப்பிய
ருக்கலாம் எனவும்

ாதிபதி அசாத்தின்
சிமெந்துத் தொழிற்
ங்கி வந்தமை குறிப்

ரபான் டி மெஸ்ஙுறா
ள், கட்சிகளுக்கிடை
நாட்டுப் போர், போர்
டயில் நிறுத்தப்பட்டு
ாகவும் தெரிவிக்கப்
பெறவுள்ள பேச்சில்,
அரச தரப்பினர் இன்ன
தெரிவித்தார். (து-ரி4)



# டையிலே
# ராஜநாகம்
ம்



ாம்பின் வாலை மிதித்து விடுகிறார். ஆக்
த் திரும்பி அந்த ராஜநாகம் பாடகியின்
யில் கடித்து விட்டது. பாம்பு கடித்த
சிறிதும் உணராத அந்தப் பெண்,
தும் பாடலைப் பாடியுள்ளார். இதனைக்
த மற்றவர்கள் பாம்பை அப்புறப்படுத்தி
விநாடிகளுக்குப் பின்னர் தான் அவருக்கு
வாந்தியும் மயக்கமும் ஏற்பட்டுள்ளன.
கணக்கான பார்வையாளர்கள் மத்தியில்
ரென மேடையிலேயே சுருண்டு விழுந்
த்துவமனைக்குக் கொண்டு சென்று பரி
ன செய்தபோது அவர் ஏற்கனவே உயிரி
ிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்
ந்தச் சம்பவம் தொடர்பாக காவல்துறை
ழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி
றனர். உயிரிழந்த பெண் 3 குழந்தைக
ாய் ஆவர், இவரது கணவர் தொழிற்சா
ன்றில் பணி புரிகிறார் என்பதும் குறிப்
கது. (து-ரி4)

# ஹெலிகொப்டர் நிறுவனத்தின் முன்னாள் தலைவருக்குச் சிறை

ரோம், ஏப். 9
இத்தாலியின் பாதுகாப்பு-தொழில் நுட்ப நிறுவனமான பின்மெக் கானிக்காவின் முன்னாள்தலைவர் ஜூஜெப்பே ஓர்ஸி-க்கு, தவறாக கணக்குக் காட்டியமை மற்றும் ஊழல் ஆகிய குற்றங்களுக்காக, நாலரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு 12 ஹெலிகொப்டர்களை விற்பதற்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் நடந்த விசாரணைகளின் முடிவில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பின்மெக்கானிக்காவின் துணை நிறுவனமான அகஸ்டா வெஸ்ட்லாண்ட்டின் தலைவர் புருனோ ஸ்பாங்னோலீனிக்கும் நான்காண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஓர்ஸி மீதான தீர்ப்புக்கு எதிராக மேன்

> இந்தியாவுக்கு 12 ஹெலிகொப்டர்களை விற்பதற்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் நடந்த விசாரணைகளின் முடிவில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முறையீடு செய்யவுள்ளதாக அவரது வழக்கறிஞர் கூறியுள்ளார்.

75 கோடி டொலர் மதிப்பிலான இந்த ஹெலிகொப்டர் விற்பனை ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக குறித்த நிறுவனம் லஞ்சம் வழங்கியுள்ளதாக வெளியான குற்றச்சாட்டுக்களுக்கு நடுவே, இந்தியா அந்த ஒப்பந்தத்தை 2014 ஆம் ஆண்டு ஜனவரியில் ரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது.(இ)



# 70 வருடங்களுக்குப் பின் இணைந்த காதலர்கள்

வொஷிங்டன், ஏப்.9
இங்கிலாந்தில் 70 ஆண்டுகளுக்கு பின்னர் காதலர்கள் இணைந்துள்ளனர். றோய் விக்கர் எனும் 90 வயதான முதியவர், 89 வயதான நோரா ஜக்சனுக்கு தனது 90 ஆவது வயதில் காதலைத் தெரிவித்ததுடன், அவர்கள் திருமண பந்தத்திலும் இணையவுள்ளனர்.

1940 ஆம் ஆண்டு பாடசாலைக் காலத்தில் இருவரும் சந்தித்துக் காதல் கொண்டனர். 1946 ஆம் ஆண்டு இவர்களுக்குத் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. றோய் இராணுவத்தில் இருந்தமையால் இரண்டாம் உலகப் போருக்குப் போரிடச் சென்றிருந்தார். இதன் பின்னர் இருவருக்கும் இடையில் தகவல் தொடர்பாடல் துண்டிக்கப் பட்டது.

சமீபத்தில்வானொலியில்நடைபெற்றஉறவுகளைத்தேடும் நிகழ்வில் கலந்து கொண்டு றோய் விக்கர் தனது காதலியின் பெயரைத் தெரிவித்துத் தேடியுள்ளார். இறுதியில் அவ ரைக் கண்டு பிடித்து தனது காதலைத் தெரிவித்தார். இருவரும் தமது காதலைப் பகிர்ந்து கொண்டனர்.

நோரா திருமணம் முடித்து கணவரை இழந்த விதவை ஆவார். றோய் தன்னை மீண்டும் கண்டுபிடிப்பார் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இன்னமும் அவர்களது நிச்சயதார்த்த மோதிரத்தை நோரா பத்திரமாக வைத்துள்ளார். அவரை மீண்டும் கைப்பிடிப்பது மிகவும் மகிழ்வைத் தருகிறது என நோரா தெரிவித்துள்ளார். (து-ரி4)

# சீனாய் பிரதேசத்தில் ஐ.எஸ். தாக்குதல்கள்

டமஸ்கஸ், ஏப்.9
சீனாய் பிராந்தியத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 5 எகிப்திய போராளிகள், ஓர் இராணுவ அதிகாரி, ஒரு பெண் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வேறுபட்ட இரட்டைக் குண்டு வெடிப்புத் தாக்குதலில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டன என பாதுகாப்புப் படையினரும், மருத்துவத் தரப்பினரும் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ் அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது.

வீதிகளில் பல வெடிபொருள்கள் புதைக்கப்பட்டிருந்தன. அவற்றை ரிமோட்கொன்ரோல் மூலம் வெடிக்க வைத்து இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக், சிரியா, லிபியா ஆகிய நாடுகள் எகிப்தை எல்லையாகக் கொண்டுள்ளன. இந்த மூன்று நாடுகளின் சில பகுதிகளும் ஐ.எஸ். அமைப்புக்கு உட்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (து-ரி4)

# தந்தையின் பங்கில் இலாபம் அடைந்தமை உண்மைதான்
## ஒத்துக் கொண்டார் டேவிட் கமரூன்

லண்டன், ஏப்.9
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், தனது தந்தையின் சட்டவிரோத வெளிநாட்டுப் பண முதலீட்டில்தாம்பயன் அடைந்தமை உண்மைதான் எனத் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச புலனாய்வுச் செய்தியாளர்கள் கூட்டமைப்பின் 100 செய்தியாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக உலக நாடுகளின் பிரபல அரசியல் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், தொழில் அதிபர்கள் முறைகேடான வழியில் பனாமா நாட்டு வங்கிகளிலும், தொழில் நிறுவனங்களிலும் பதுக்கிய சொத்து மற்றும் பணம் பற்றி இரகசியமாக தகவல்களைத் திரட்டி வந்தனர்.

அண்மையில் வெளியிடப்பட்ட இந்தத் தகவல் பட்டியலில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் பெயரும் இடம்பெற்றிருந்தது.

இதனை அடுத்து அவர் தொலைக்காட்சி நேர்காணலில் தெரிவித்ததாவது:-

பனாமா நாட்டிலுள்ள ஒரு நிதி நிறுவனத்தில் எங்கள் குடும்பம் 5 ஆயிரம் பங்குகளை வாங்கியிருந்தது. சுமார் 30 ஆயிரம் பவுண்டுகள் கொண்ட என்னுடைய பங்குகளை 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நான் விற்றுவிட்டேன். இவற்றின் மூலம் கிடைக்கப் பெற்ற பங்கு இலாபங்களுக்கு உரிய வரியைச் செலுத்தி விட்டோம். எனக்கான எந்தப் பங்குகளும் தற்போது இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

ஒருவேளை நான் நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்றால் எனக்கு தனிப்பட்ட முறையில் வர்த்



தக நோக்கங்களும், முதலீடுகளின் மூலம் பணப் பயன்களை அடையும் கொள்கையும் இருப்பதாக எதிர்காலத்தில் பிறர் என்னை விமர்சிக்கக் கூடாது என்பதற்காக, நான் இந்த நாட்டின் பிரதமராக பதவி ஏற்பதற்கு முன்னதாகவே இந்த முடிவுக்கு வந்து, வெளிநாட்டில் இருந்த எனது பங்கு முதலீட்டை அப்போதே கைவிட்டு விட்டேன் என டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அரசின்

# அரசியல் தீர்வுத் திட்ட வரைவு

**வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட வரைவை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சபையில் நேற்றுமுன்தினம் முன் மொழிந்தார். இந்த வரைவை, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தையும் இணைத் தலைவர்களாகக் கொண்ட குழு தயாரித்திருந்தது. இந்தத் தீர்வுத் திட்ட வரைவின் உள்ளடக்கத்தின் நேற்றைய தொடர்ச்சி இங்கே.**

*(வடக்கு மாகாண அரசின் அரசியல் தீர்வுத் திட்ட வரைவின் நேற்றைய தொடர்ச்சி....)*

07. மலையகத் தமிழர்களுக்காக அதே போன்ற ஒழுங்குகள் சிங்கள மொழிரீதியான மாநிலத்தினுள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.


08. அதிகாரமானது ஒரு சமூகத்தில் குவிக்கப்படும் அபாயத்தைத் தவிர்த்து, அதிகாரங்கள் சகல சமூகங்களுக்கிடையேயும் சமனாகப் பகிரப்படுவதை முழு நாட்டினதும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

09. எது எவ்வாறு இருப்பினும், வடகிழக்கு மாநிலம் மற்றும் முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்தியம் மற்றும் மலையகத் தமிழ் தன்னாட்சிப் பிராந்தியம் பாதிக்கத்தக்கவாறு மத்திய கூட்டாட்சி சமஷ்டி நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் உரிய மாநிலத்தாலோ அல்லது தன்னாட்சிப் பிராந்தியங்களாலோ அங்கீகரிக் கப்படாத வரை நடைமுறைக்கு வரக்கூடாது.

10. வடகிழக்கு மாநில நாடாளுமன்றம், வடகிழக்கு முஸ்லிம் பிராந்திய சபை அதே போல் மலையகத் தமிழ்ப் பிராந்திய சபை ஆகியவற்றுக்கு தமது சொந்த அலுவல்களை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் முழுமையாக அதிகாரங்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இந்த நாடாளுமன்றத்துக்கும் பிராந்திய சபைகளுக்கும் போதிய சுயாட்சியானது ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். இலங்கையை விடப் பரப்பளவிலும் குடித்தொகையிலும் சிறிய நாடாகிய சுவிற்சர்லாந்தில் நடைமுறையிலுள்ள கன்டோன் நாட்டுப்பிரிவு முறைமையானது, அவசியமான மாற்றங்களுடன் இங்கு சுவீகாரஞ் செய்வதற்காகப் பரிசீலிக்கப்பட முடியும். தமிழ் பேசும் மாநில அரசில், மத்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவர் நிறைவேற்று அதிகாரம் எவற்றையும் கொண்டிருக்கமாட்டார். அவை மாநிலத்தின் அமைச்சரவையினாலேயே முழுமையாக தன்னுடமையாக்கப்படும்.

11. இலங்கையின் அரசகரும மொழிகள் சிங்களமும் தமிழும் ஆவதுடன், ஆங்கிலமானது இணைப்பு மொழியாகவும் இருத்தல் வேண்டும். வடகிழக்கு மாநிலத்திலுள்ள சகல பதிவுகளும் நடவடிக்கைகளும் சிங்கள மற்றும் ஆங்கில மொழிபெயர்ப் புகள் பேணப்பட்டு தமிழ் மொழியில் இருத்தல் வேண் டும். மலையகத் தமிழ்ப் பிராந்திய சபை தவிர்ந்த தீவின் மீதிப்பாகத்தில் பேணப்படும் சகல பதிவுகளும் மேற்கொள் ளப்படும் நடவடிக்கைகளும் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகள் பேணப்பட்டுச் சிங்களத்தில் இருத்தல் வேண்டும். மலையகப் பிராந்தியத்திய சபைகளில் பேணப்படும் சகல பதிவுகளும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் தமிழிலோ சிங்களத்திலோ நடைபெறலாம். அவற்றின் தமிழ் அல்லது சிங்கள மொழிபெயர்ப்பும் ஆங்கில மொழிபெயர்ப்பும் பேணப்பட வேண்டும்.

12. புதிய அரசமைப்பொன்றை உருவாக்குகையில் தொடர்ச்சியாக வந்த மத்திய அரசால் சுற்றயல் நிர்வாகங்களை வலிதற்றதாக்குவதன் பொருட்டு இதுவரைவேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இல்லாதொழிக்கப்படல் வேண்டும்.



**அவ்வாறான நடவடிக்கைகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளன**

i. 1979ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மகாவலி அதிகார சபை போன்ற அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரசபைகளின் தொடர்ச்சியானது மக்களால் தேர்வுசெய்யப்பட்ட உள்நாட்டு மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத, மாகாண எல்லைகளை மீறிய புகலிட நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அனுமதித்துள்ளது.

ii. 1992ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க அதிகாரங்களை மாற்றியமைக்கும் (பிரதேச செயலர்கள்) சட்டமானது அரச அதிபர்களையும் பிரதேச செயலர்களையும் மாகாண நிர்வாகத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்படுத்தி அதன் மூலமாக ஓர் இரட்டை நிர்வாக ஒழுங்கமைப்பினைத் தோற்றுவித்துள்ளது.

iii. மத்திக்கும் அயலுக்குமிடையே ஒருங்கியல்பான நியாயாதிக்கத்தை ஒழுங்குசெய்வதன் மூலமாக மாகாண நிர்வாகத்தை வலிதற்றதாக்கி மத்தியானது அதிகாரம் செலுத்தியது. இதன்பின்னர் ஒருங்கியல்பான நியாயாதிக்கமானது தோற்றுவிக்கப்படக்கூடாது. மாநில மற்றும் சமஷ்டி கூட்டாட்சிக்குரியதாக மாத்திரம் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

13. ஒவ்வொரு மாநில அரசாங்கத்தினதும் தன்னாட்சிப் பிராந்திய அரசாங்கத்தினதும் சுயாட்சியானது கூட்டாட்சி சமஷ்டி அரசால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. சகல பிரஜைகளுக்கிடையிலும் அவர்களுடைய மொழி, மதம், சாதி, கோட்பாடு அல்லது பிரதேசம் எவ்வாறிருப்பினும் சமத்துவக் கொள்கையானது வலியுறுத்தப்படுவதுடன் அரசியல், நிர்வாக, கல்வி, பொருளாதார மற்றும் தொழில் அடங்கலாக ஏனைய சகல துறைகளிலும் சகல சமூகங்களுக்கும் மதிப்பளிப்பு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அரச சேவையிலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுத்தாபனங்களிலும் சகல பிரஜைகளுக்கும் தொழில்வாய்ப்புக்கு சம வாய்ப்புக்கள் உறுதி செய்யப்படல் வேண்டும்.

15. ஒவ்வொரு மாணவரும் தேசிய மொழிகளிலும் இணைப்பு மொழியிலும் தேர்ச்சிபெற்றிருப்பதைக் கட்டாயமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

16. குடியரசின் கொடியானது மக்கட் பிரிவுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் இருப்பதை இல்லாதொழிக்க வேண்டும். தேசிய கீதமானது சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் சிங்களத்திலோ அல்லது தமிழிலோ அல்லது இரு மொழிகளிலுமோ பாடப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைப் புத்தகங்களினூடான நிலைபேறான நிகழ்ச்சிநிரலானது இல்லாதொழிக்கப்படல் வேண்டும். இலங்கையின் வர லாறானது பிரிவுசார் அல்லது வட்டாரம்சார் கோரிக் கைகளுக்குப் பணிந்திராது, சர்வதேசத் தராதரங்களுக்கு அமைவாக சரியாக வரையப்படல் வேண்டும்.

18. மாநில எல்லைகளுக்குட்பட்ட அரச நிலங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கும், நோக்கெல்லைக்குங் கீழாக வருதல் வேண்டும். அந்நிலம் அப்பிரிவிலுள்ள மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளபோதுசமஷ்டிக் கூட்டரசானது மாநில அரசின் அல்லது பிராந்திய அரசின் சம்மதம் அல்லது இசைவு இன்றி அந்நிலத்தின் மீது எந்த அதிகாரங்களையும் பிரயோகிக்க முடியாது.

19. மாநில அரசுக்கு முழுமையான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். சமஷ்டி கூட்டரசுக்குரிய பொலிஸானது மாநிலத்தில் அல்லது பிராந்தியத்தில் ஒழுங்கமைக்கப்படுவதில் எவ்வித ஆட்சேபனையுமில்லை.

20. தீவிரவாதத் தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டம் நீக்கப்பட்டு நாட்டின் பொதுவான குடியியல் சட்டமானது மீண்டும் கொண்டுவரப்படல் வேண்டும்.

21. புதிய அரசமைப்பு ஒழுங்குகள் இனம், மதம், மொழி, கோட்பாடு, சாதி மற்றும் பண்பாட்டைச் சார்ந்திராது, சகல சமூகங்களுக்கிடையிலும் சமூக அக்கறையை உறுதிசெய்து தனிப்பட்ட பிரஜைகள் சட்டவிதிகளுக்கும் உரிமைகளுக்கும் சுயஉரிமைகளுக்கும் மதிப்பளித்தலை மேம்படுத்தி நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நேரான இலட்சியங்களைத் தொடர வழி அமைக்கப்பட வேண்டும்.

22. நவீன கண்காணிப்பு முறைகளின் காரணமாக போர் முடிவுற்றமையைத் தொடர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் இராணுவப் படைகளைக் கண்காணிப்புப் பணிகளுக்காக நிலைநிறுத்த வேண்டிய அவசியப்பாடானது தேவைக்கு மிகையானது. முன்னாள் போராளிகளைப் பொது வாழ்க்கையினுள் மீளக்கொண்டுவருவதன் பொருட்டு படைக்குறைப்பு, படைக்கலைப்பு மற்றும் மீளவொருங்கமைத்தல் (டி.டி.ஆர்) செயன்முறையானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

23. அரசமைப்பொன்றை உருவாக்குவதற்காகப் பணிக்கப்பட்டுள்ள பெரும்பான்மைச் சமூகத்தினரை அதிக எண்ணிக்கையில் கொண்டுள்ள அரசமைப்புச் சபை, அதன் பக்கச்சார்பான பிரதிநிதிகளின் தொகையை மனதில் வைத்து தேசிய பிரச்சினைக்கு நிரந்தரமானதும் நிலைத்திருக்கத்தக்கதுமானதோர் தீர்வை உறுதிசெய்வதன் பொருட்டு, தமிழ் பேசும் மக்களின் தொடர்ச்சியான வரலாற்று ரீதியான வாழிடமாகவுள்ள பிரதேசங்களில் அவர்களின் தனித்துவத்தன்மைக்கு ஏற்றவகையில் அவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்காக *(17 ஆம் பக்கம் பார்க்க...)*

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தலைமைத்துவங் களுக்கும் இடையில் ஓர் ஆரம்ப இணக்கப்பாடானது எய்தப்படல் வேண்டும். இந்த இணக்கப்பாட்டில் தமிழ்த் தலைவர்கள் தமது மக்கள் சார்பாகக் கூறும் விடயங்கள் ஒரு தலைப் பட்சமாக பெரும் பான்மை சிங்களம் பேசும் உறுப்பினர்களால் புறக்கணிக் கப்பட்டால், தமிழ்ப் பேசும் மக்கள் தமது வாழ்விடங்களில் மக்கள் தீர்ப்பைப் பெற்று தமது அரசியல் நிலையை உறுதி செய்வதற்கு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறானதோர் இணக்கப் பாடானது ஐக்கிய நாடுகள் சபை அல்லது ஏனைய நட்பு நாடுகளால் காப்பீடு செய்யப்படல் வேண்டும்.

பரந்த கொள்கை வரைபை முடிவுறுத்தும் இந்நிலையில், கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஏனைய விடயங்களின் குறிப் பிடத்தக்க விவரங்கள் சில இதில் இணைப்புகளில் வழங்கப்பட்டுள்ளன.

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் (1987)**

அ) 1.2 இன் படி இலங்கையானது பல் இன மற்றும் பல மொழிகொண்ட பன்மைச் சமூகமாகும். அதாவது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர்களைக் கொண்டுள்ளது.

ஆ) 1.4 இன் படி அங்கீகரிக்கப்பட்டது யாதெனின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வரலாற்று ரீதியான தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்கள் என்பதும், அவர்கள் ஏனைய இனக்குழுமங்களுடன் ஒன்று சேர்ந்து வாழும் பிரதேசம் எனவும் அங்கீகரிக்கப்பட்டது.

இ 2.1 இலங்கை அரசு அருகருகே உள்ள மாகாணங்களை இணைத்த நிர்வாக அலகாக இருக்க அனுமதிப்பதுடன் அதே நேரம், வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பிரிக்கப் படுவதனையும் அனுமதிக்க உத்தேசித் தமை.

**ஒஸ்லோ பிரகடனம் - டிசெம்பர் 2002**

இரண்டு பகுதியினரும், உள்ளக சுய நிர்ணய உரிமை உள்ளடங்கலாக தமிழ் பேசும் மக்களின், வரலாற்று ரீதியான அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசத்தை ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி மாநில கட்டமைப்பாக அமைவதற்கு உடன்படுகின்றனர்.

**புதிய அரசமைப்பினுள் எதிர்பார்க்கப்படுபவை**

1. இலங்கை ஒரு சுயாதீனமான இறை யாண்மை உடைய ஜனநாயக குடியரசாகும்.
2. இக் குடியரசு சமஷ்டி மாநில அரசுகளின் ஒன்றியம் ஆகும்.
3. ஒவ்வொரு மாநில அரசும் சுவிற்ஸர் லாந்தின் கன்ரன் முறைமை அடிப்படையிலான உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருக்கும்.
4. இக் குடியரசு ஒரு மதசார்பற்ற நாடாகும்.
5. குடியரசில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் அரச கரும மற்றும் தேசிய மொழிகளாகவும் ஆங்கில மொழியானது ஓர் இணைப்பு மொழியாகவும் இருக்க வேண்டும்.
6. குடியரசானது வெஸ்மினிஸ்ரர் முறையிலான அரசாகச் செயற்பட வேண்டும்.
7. குடியரசின் ஜனாதிபதி தேர்தல் கல்லூரிகள் முறைமை மூலம் தேர்ந்தெடுக் கப்படுவார் (இந்திய அரசமைப்பின் உறுப்புரை 54, 55 ஐ பார்க்க)
8. குடியரசின் நாடாளுமன்றமானது மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை (மேல் சபை) என இரண்டு சபைகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
9. மத்திய அமைச்சர்களின் எண்ணிக்கை, மக்கள் பிரதிநிதிகள் சபையின் உறுப் பினர் எண்ணிக்கையில் 20 சதவீதத்தை விட கூடுதலாக அமையக்கூடாது.
10. மேல்சபை உறுப்பினர்கள் நிறை கொடுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் தமிழர் களுக்கும் முஸ்லிம்களுக்கும் வழங்கப் பட்டு தெரிவு செய்யப்படவேண்டும்.
11. மேலாண்மை கொண்ட அரசமைப் பானது (Supreme) மீயுயர் ஆகும் என்பதுடன் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணாக எந்த ஒரு சட்டங்களும் இயற்றப்பட முடியாதவை யாகும்.
12. நீதிமன்ற மீளாய்வு அரசமைப்பு நீதிமன்றத்திற்கு (Constitutional Court) அரசமைப்பினை பொருள் கோடல் செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படுவதுடன் அரசமைப்புடன், இயற்றப்பட்ட சட்டங்கள் அல்லது நிறை வேற்றுத்துறை நடவடிக்கைகள் என்பன வற்றில் ஏதாவது முரண்பாடு காணப்படுமாயின், குறித்த சட்டத்தை வலுவற்றதாகப் பிரகடனப்படுத்தவோ அல்லது நிறை வேற்றுத்துறையின் நடவடிக்கையை வெறிதாக்கவோ அரசமைப்பு நீதிமன்றம் அதிகாரம் கொண்டதாகும். அரசமைப்பு நீதிமன்றமானது நாட்டின் சனத்தொகையின் மொழிவாரியான விகிதாசாரத்திணைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்.
13. சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்பு ஏற்பாடு (சோல்பரி யாப்பின் 29 ஆவது உறுப்புரை போன்ற ஏற்பாடு) தேவையானதாகும், என்பதுடன் குறித்த ஏற்பாடானது நிரந்தரமானதாகவும் சாதாரண பெரும்பான்மையாலோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை யாலோ மாற்ற முடியாத ஏற்பாடாக அமைய வேண்டும்.
14. கலப்புத் தேர்தல் முறை உருவாக்கப் படவேண்டும். நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களுக்குத் தெளிவான தொகுதி முறையும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு வட்டாரமுறையும்வரையறுக்கப்பட வேண்டும்
15. சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள் ளப்பட்ட அடிப்படை மற்றும் மனித உரிமை மற்றும் இதர உரிமைகள் தொர்பான சாசனங்களில் கூறப்பட் டவை தொடர்பான அமுலாக்கத்திற்கான ஏற்பாடுகள் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்படல் வேண்டும்.
16. சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர் பான 19ஆம் திருத்தச்சட்டத்தில் குறிப் பிடப்பட்ட உறுப்புரைகள் அவ்வாறே புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.
17. அரசமைப்பானது சட்டத்தின் ஆட்சி யையும் வலுவேறாக்கத்தையும் உறுதி செய்வதாய் அமைதல் வேண்டும்.

**பின்னிணைப்பு**
**அதிகாரப் பகிர்வு**

**மாநிலங்கள்**

01) இங்கு சமஷ்டி மற்றும் மாநில முறை யான அரசு அமையும் அதேவேளை அம் மாநிலங்களில் ஒன்றாக முஸ்லிம் களுக்கு சுயாதீன பிரதேசத்தை உள் ளடக்கிய வடக்கு கிழக்கு மாநிலமும், மலையக தமிழ்பேசும் மக்களின் சுயாதீன பிரதேசத்தை உள்ளடக்கியதாக மற்றைய மாநிலம் அமையும்.
02) மாநிலங்கள் நாடாளுமன்ற ஜன நாயக முறையின் கீழ் செயற்படும்.

**மாநில அரசு**

01. ஒவ்வொரு மாநில அரசிலும், மாநில நாடாளுமன்றம் மற்றும் மாநில அமைச் சர் சபை இருத்தல் வேண்டும்.
02. மாநில நாடாளுமன்றுக்கு 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பிட்டுள்ள துறைசார்ந்த சட்டத்தினை உருவாக்கு வதற்கான முற்று முழுதான உரிமை வழங்கப்படவேண்டும்.
03. அரசமைப்புச்சபை மற்றும் மாநிலத் தின் முதலமைச்சரின் ஆலோசனை களுக்கு அமைவாக [illegible] அரச பிரதிநிதியை நியமிப்பார்.
04. மாநில நாடாளுமன்றின் பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும்.
05. மாநில அரசினதும், மாநில அமைச் சர் சபையினதும் தலைவராக மாநில முதல மைச்சர் இருப்பார். மாநில அமைச்சர் சபை மாநில நாடாளுமன்றத்துக்கு கூட் டாகப் பொறுப்புடையதாதலும், வகை சொல்ல வேண்டியதாதலும் வேண்டும்.
06. மாநில அமைச்சர்களின் எண் ணிக்கை மாநில நாடாளுமன்ற ஆசனங் களின் 20 சதவீதத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது.
07. முதலமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் மாநில நாடாளுமன்றை அழைக்கவோ, ஒத்திவைக்கவோ கலைக் கவோ சமஷ்டி அரசின் பிரதிநிதி அதி காரம் கொண்டிருப்பார்.
08. அரசமைப்பின் மூலம், சம்பந்தப்பட்ட மாநிலத்திலுள்ள எண்ணிக்கையில் குறைவான எந்தப் பிரிவின மக்களின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் உரிமை களை மேம்படுத்துவதற்கான உத்தரவா தம் என்பவை, மாநில நாடாளுமன்றம் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
09. மாநில நாடாளுமன்றம் கலைக் கப்பட்டு 3 மாதங்களுக்குள் தேர்தலானது நடைபெறவேண்டும்
10. மாநில நாடாளுமன்றினால் அங் கீகரிக்கப்பட்ட ஏதாவது சட்டவரைவு சமஷ்டி அரசின் பிரதிநிதியின் கருத்தின் அடிப் படையில் 30 நாள்களுக்குள் அரசமைப் புக்கு முரணாக அமையுமிடத்து, அவற்றை மீள்பரிசீலனை செய்ய அவற்றுக்கான காரணத்தைக் குறிப்பிட்டு திருப்பியனுப் பலாம் என்பதுடன், அதே வேளை முரண் பாடு அல்லாதவிடத்து அதற்கான சம்மதம் வழங்கப்படல் வேண்டும்.
11. அவ்வாறு சமஷ்டி அரசின் பிரதிநிதி யால் திருப்பி அனுப்பப்படும் சட்டவரைவு, சமஷ்டி அரசின் பிரதிநிதியின் அறிவித் தல் கிடைக்கப்பட்ட 14 நாள்களுக்குள் மாநில நாடாளுமன்றத்தின் முன்னால் சமர்ப்பிக் கப்பட வேண்டும். மாநில நாடாளுமன் றின் மீள் பரிசீலனையைத் தொடர்ந்து மாநில நாடாளு மன்றின் சிபார்சின் அடிப் படையில் சமஷ்டி அரச பிரதிநிதி குறித்த வரைவுக்கான சம்மதத்தை வழங்கவேண் டும். சமஷ்டி அரச பிரதிநிதி இதன்பொழுது திருப்தி அடையாதபோது, சட்டவரைவு மீதான தனது கருத்தை அரசமைப்புச் சபைக்கு முன்னளிக்கவேண்டும் என்ப துடன், அரசமைப்புச்சபையானது முன்னளிக் கப்பட்டதிலிருந்து அதன் கருத்தை 30 நாள்களுக்குள் தெரிவித்தலும் வேண்டும்.
12. மாநில அரசுக்குப் பிரத்தியேகமாக வழங்கப்பட்டுள்ள மாநில விவகாரங்கள் தொடர்பில் எந்தவொரு சட்டங்களையும் சமஷ்டி அரச பாராளுமன்றத்தினால் நிறைவேற்றமுடியாது.

**நிதி**

i. குடியரசுக்கும், மாநிலத்திற்கும் தனித் தனியாக திரட்டிய நிதி இருத்தல் வேண்டும்.
ii. மாநிலங்களில் எதிர்பாராத செலவுக் கான அவசரகால நிதியம் ஒன்று அமைந் திருக்கும்
iii. மாநிலங்களின் திரட்டிய நிதியின் பிணையின் அடிப்படையில் உள்நாட்டில் கடன்களைபெற்றுக்கொள்ள மாநிலத்துக்கு அதிகாரம் இருக்கும்.
iv. மத்திய நிதி அமைச்சருடைய ஒப்பு தலுடன் மாநில அரசுகள் ஏதாவது சர்வ தேச கடன் தொடர்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
v. ஒவ்வொரு மாநிலங்களுக்கும் குறிப் பிட்ட தொகை நிதியை ஒதுக்கீடு செய் வதற்காக ஒரு தேசிய நிதி ஆணைக்குழு இருக்கும்;.
vi. ஒவ்வொரு மாநிலமும் பணிநிலைத் தேவைகளைத் தீர்மானிப்பதற்கான உரிமைகளைக் கொண்டிருப்பதுடன், மாநிலத்தின் மீண்டுவரும் செலவின ஏற்பாடுகள் மற்றும் மூலதன செலவுகள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமை களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மாநில நிதி**

அ) நடப்பாண்டில் கடைசி மாதத்தில் அடுத்த ஆண்டுக்கான வருமானம் மற்றும் உத்தேசித்த செலவு ஆகியவற்றை உள் ளடக்கிய வரவு செலவுத்திட்டம் ஒன்றை மாநில நாடாளுமன்றில் முதலமைச்சர் சமர்ப்பிப்பார். குறித்த வரவு–செலவுத் திட்டமானது மாநில நாடாளுமன்றின் விவாதங்களின் பின்னர் மாநில சட்டசபையால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆ) முதலமைச்சரின் கைப்பட வழங் கப்படும் ஆணையைத் தவிர மாநில நிதியிலிருந்து எந்தவித பணமும் பெற்றுக் கொள்ளமுடியாது.

**மாநில பொதுச் சேவைகள் ஆணைக்குழு**
(State Public Service Commission)

1. வேறெந்தச் சட்டத்தினுடைய சரத்திற்கும் உட்படாத நியமனம், பதவி உயர்வு, இடமாற் றம், பதவி நீக்கம் மற்றும் அதிகாரிகளின் ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் கூடிய அதி காரம் மாநிலத்தின் நாடாளுமன்றுக்கு உரித்தாக்கப்படுகின்றது.
2. மாநில நாடாளுமன்றமானது அதன் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், பதவி நீக்கம் மற்றும் அதிகாரிகள் மீதான ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் கூடிய அதி காரங்களை மாநில நாடாளுமன்றால் நியமிக்கப்படும், தலைவர் உட்பட்ட ஐந்து பேரை கொண்ட மாநில பொதுச் சேவை ஆணைக்குழுவுக்குக் காலத்துக்குக் காலம் கையளிக்கலாம்.

**மாநில பொலிஸ் சேவைகள்**
(State Police Service)

1. பிறிதானதாக மத்திய காவல்துறை மற் றும் மாநில காவல்துறைகள் இருக்கும். மாநில காவல்துறைக்கு தலைமை தாங் கும் மாநில பொலிஸ்மா அதிபர் தலை வராய் இருப்பார். அவர் தமது கடமைகளை யும் பொறுப்புக்களையும் சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சரான முதலமைச்சரின் பணிப்புகளுக்கு அமைய நிறைவேற் றுவார்.
2. அவ்வாறான மாநில பொலிஸ்மா அதிபர், பொலிஸ்மா அதிபர் மற்றும் மாநில காவல்துறை ஆணையகத்திற்கும் பொருத்தமான நிர்வாகத் தகவல்களை வழங்குவார்.

**அட்டவணை -1**


சமஷ்டி அரசு பிரத்தியேகமாக சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்ட துறைகள்.
1. தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் - தேசிய பாதுகாப்பு விடயங்கள், பின்வருவன உள்ளடங்கலாக கடற்படை, இராணுவம், விமானப்படை மற்றும் மத்திய காவல் துறை, புலனாய்வு மற்றும் விசாரணைகள் என்பவற்றை உள்ளடங்கும்.
2. தேசிய நிதி விவகாரம் - செலாவணி, அந்நியச்செலாவணி, நிதிக்கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள், மத்திய வங்கி, மத்திய வங்கி காப்பீட்டின் ஒழுங்கு முறைகள், கடப்பாடுகள் மற்றும் நிதி நிறுவனம், பங்குப் பரிவர்த்தனை, மத்திய வரவு செலவுத்திட்டம், பொது மானியங்கள் மற் றும் மத்திய கடன்கள், வெளிநாட்டு உதவி மற்றும் மத்திய வெளிநாட்டு முதலீடு மற் றும் தேசியக் கொள்கை உருவாக்குதல், தொடர்பிலான வெளிநாட்டு உதவி மற் றும் வெளிநாட்டு முதலீடு, சமஷ்டி அரசின் முக்கிய பண்புகள், சமஷ்டி அரசின் வருவாய்.
3. வெளிவிவகாரத் துறை, மாநிலங்களா னது தத்தமது பிரதிநிதியை இலங் கையின் உயர்ஸ்தானிகராலயங்களுக்கு நியமனம் செய்வதற்கு உரிமை கொண்ட தாக இருக்கும்.
4. பொருளாதார விவகாரங்கள் - ஆட் புல கடல் எல்லைக்கு அப்பாற் பட்ட எல்லாவிதமான நடவடிக்கைகள்,

(19 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புக்குத் தண்டனை

அந்தக் காட்டில் யானைகளே அதிகமாக வசித்து வந்தன. அவற்றுள் ஓர் ஆண் யானை உயரமான தோற்றமும், பெரும் உடல் வலிமையும் கொண்டதாக இருந்தது. யானைக் கூட்டத் துக்கு அதுதான் தலைமை வகித்தது.



யானைகள் மட்டுமன்றி ஏனைய விலங்குகளும் கூட யானைத் தலைவனையே புகழ்பாடிக் கொண்டிருந்தன. இந்தப் புகழ்ப் போதையில் மதிமயங்கிய யானை, மேலும் தனது பெருமையை உயர்த் திக் கொள்ள ஆசைப்பட்டது. தனக்கு ஒரு பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி நண்பனான நரியிடம் சென்று ரகசியமாக அதன் காதைக் 'கடித்து வைத்தது' யானை.

தனது யானை நண்பனின் ஆவலைப் பூர்த்தி செய்யத் திட்டமிட்ட நரி, தான் சந்தித்த விலங்குகளிடமெல்லாம் விடயத்தைச் சொல்லியது.

ஒருநாள் விலங்குகள் எல்லாம் ஒன்று கூடின. யானைக்குப் பட்டம் வழங்கும் தீர்மானத்தை நரி நயமாக முன்மொழிந்தது. ஓநாய் அதை 'ஓகோ' என்று வழிமொழிந்தது. யானைத் தலைவனுக்குப் பட்டமளிக்க முடிவு செய்யப்பட்டது.

பட்டம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் மறுநாளே அந்த யானைக்குத் தலைக்கனம் ஏறியது. தலைகால் புரியவில்லை அதற்கு. தன் இனத்தையே தரக்குறைவாக எண்ணத் தலைப்பட்டது. ஏனைய விலங்குகளை மட்டும் விட்டுவைக்குமா என்ன? எதிரில் காணும் எந்த விலங்காயினும் அதை அடி மட்டமாக மட்டம் தட்டியது. கொம்பன் என்றாலே எல்லாவற்றுக்கும் குலை நடுக்கம் எனும் அளவுக்குக் கொம்பன் யானையின் அட்டகாசம் தாங்க முடியவில்லை.

கொம்பனின் அளவு கடந்த இந்த அட்டகாசங்களை வளைக்குள்ளிருந்த எலிகளின் தலைவனான அந்தப் பெரிய எலி அவதானித்து வந்தது. கொம்பனைப் பார்த்து... "தலைவரே; பொறுப்பில் இருப்போர் கொஞ்சமும் பொறுப்புணர்வு இல்லாமல் நடந்து கொள்வதை எவரும் ஒரு போதும்பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என் பதை நீர் புரிந்துகொண்டு நடப்பதே நல்லது" என்று அறிவுரை கூறியது எலித் தலைவன்.

இதைக்கேட்ட கொம்பனுக்கோ இனம்புரியாத சினம் பொங்கியது! "அற்பப்பதரே... நீ யார் எனக்குப் புத்தி சொல்ல?" என்றது.

"நீதான் புராணமே தெரியாமல் புலம்பிக் கொண்டிருக்கிறாய்; பிள்ளையாரின் வாகனமே நான்தான்...புரிந்து கொள்! "அய்யோ, யானையை எலி இழுத்துச் செல்கிறதே"என்று புலவர் ஒருவரே என் புகழ் பாடியுள்ளார் என்றால் பார்த்துக் கொள்!" எடுத்துக் கூறியது எலி.

கடுங்கோபம் கொண்ட கொம்பன் "இப்போதே ஒரே மிதியில் உன்னைக் கூழாக்கி விடுகிறேன்" என்று ஆங்காரத்துடன் புதருக்குள் விரைந்து நுழைந்தது!

அவ்வளவுதான். அங்கிருந்து உறுதியான கொடிகளும் முட்செடிகளும் பின்னிப்பிணைந்திட அவற்றினூடே சிக்கிக்கொண்டு சித்திரவதைப்பட்டது கொம்பன்!

எவ்வளவோ முக்கி முனகி முண்டிப்பார்த்தும் தன்னை விடுவித்துக்கொள்ளமுடியாமல் கிடந்து தவித்தது! நகர இயலாது நரக வேதனைப்பட்டது அது.

உடலெங்கும் முட்கள் கீறி இரத்தம் வழிய செக்கச்செவேல் என ஒரு குங்குமக் குன்றாக நின்றது கொம்பன்.

இதைக் கண்ட எலித் தலைவனுக்கு இரக்கம் மேலிட்டது. தன் இனத்தவரான மற்ற எலிகளின் உதவியுடன் கொடிகளை அறுத்துக் கொம்பனைக் காப்பாற்றியது.

# பழமொழிகள்

- அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.
- அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன?
- அழுகிற ஆணையும், சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது.
- அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- அழுதாலும் பிள்ளையை அவளே பெற வேண்டும்.
- அளக்கிற நாழி அகவிலை அறியுமா?
- அறச் செட்டு முழு நட்டம் .
- அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
- அறக்கப் பறக்க பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை.
- அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான், கொள்ளவும் மாட்டான்.
- அறமுறுக்கினால், அற்றுப் போகும்.
- அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்கவேண்டும்.
- அறிய அறியக் கெடுவார் உண்டா?
- அறிவுள்ளார் சிநேகம் அதிக உத்தமம்.
- அறிவீனர் ஆயிரம் உரைக் கினும் அவம்.
- அறிவீன இடத்தில் புத்தி கேளாதே.
- அறிவு இல்லார் தமக்கு ஆண்மையுமில்லை.
- அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.
- அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியில் இறங்கித் தான் கூலி வாங்கவேண்டும்.
- அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி.
- அற்ப அறிவு அல்லற்கிடம்.
- அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.
- அன்று எழுதிவன் அழித்து எழுதுவானா?



# வரலாற்றில் இன்றைய தினம்

1214 - மொங்கோலியப் படைகள் போலந்து மற்றும் ஜேர்மனிய இராணுவத்தைத் தோற்கடித்தன.
1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்து அரசராக முடிசூட்டிக் கொண்டார்.
1440 - பவேரியாவின் கிறிஸ்டோபர், டென்மார்க் அரசராக நியமிக்கப்பட்டார்.
1511 - இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு அதன் பட்டயம் வழங்கப்பட்டது.
1609 - ஸ்பெயினும் டச் மக்கள் குடியரசும் 12 ஆண்டுகள் கால போரின் முடிவில் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
1682 - மிஸிஸிப்பி ஆற்றின் தோற்றுவாய் றொபேர்ட் கவலியர் டிலா சலியால் கண்டுபிடிக்கப்பட்டு அது பிரான்ஸுக்கு உரியதென உரிமை கோரப்பட்டு லூஸியானா என அதற்குப் பெயரும் இடப்பட்டது.
1867 - அலஸ்காவைக் கொள்வனவு செய்ய ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்வதற்கு ஒரு மேலதிக வாக்கினால் அமெரிக்க செனட் அங்கீகாரமளித்தது.
1937 - லண்டன் கிறய்டோன் விமானத்தளத்தை கமிகேஷ் விமானம் வந்தடைந்தது. முதன் முதலாக உருவாக்கப்பட்டு ஐரோப்பாவுக்குப் பறப்பை மேற்கொண்ட விமானம் இதுவாகும்.
1940 - இரண்டாம் உலக மகாயுத்தம்; டென்மார்க் மற்றும் நோர்வேயை ஜேர்மனி ஆக்கிரமித்தது.
1945 - ஐக்கிய அமெரிக்காவின் அணுசக்தி ஆணையம் உருவாக்கப்பட்டது.
1957 - எகிப்தின் சுயஸ்கால்வாய் துப்புரவு செய்யப்பட்டு கப்பல் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டது.
1961 - பசுபிக் எலக்ரிக் றெயில்வே தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டது.
1967 - போயிங் 737 தனது கன்னிப் பறப்பை மேற்கொண்டது.
1969 - பிரிட்டனால் அமைக்கப்பட்ட கொன்கோர்ட் 002 தனது கன்னிப் பறப்பை மேற்கொண்டது.
1981 - அமெரிக்க அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். வொசிங்டனுடன், ஜப்பானிய சரக்குக் கப்பலொன்று தற்செயலாக மோதுண்டு மூழ்கியது.
1995 - செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிப்பு
2005 - வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் கமிலா பாக்கர் பவுல்ஸை மணம் புரிந்தார்.

# கறுப்புநிற நாய்க்குட்டி



கறுப்புநிற நாய்க்குட்டி
காவல் செய்யும் நாய்க்குட்டி
கள்ளமில்லா நாய்க்குட்டி
கடமையாற்றும் நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
நன்மை செய்யும் நாய்க்குட்டி
வாலை ஆட்டும் நாய்க்குட்டி
செல்லப் பிராணி நாய்க்குட்டி
உண்மை வாய்ந்த நாய்க்குட்டி
உள்ளம் கவர்ந்த நாய்க்குட்டி



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கற்றுத் தரும் பாடமே சாலச் சிறந்தது

மது

எமது வாழ்க்கையில் அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகின்றது என்று எமக்குத் தெரிவதில்லை. இன்று ஒரு மாதிரி நாளை ஒரு மாதிரி. ஏன் அடுத்த நிமிடமே வேறு ஒரு மாதிரி.

வெளியிருந்து வரும் காரணிகள் தவிர, எமது மூளையே எம்மைச் சில சமயங்களில் ஏமாற்றி விடுவதும் உண்டு. சரியாகச் செய்துவிட வேண்டும் என்று ஒரு விடயத்தைச் செய்யும்போது, எம்மை அறியாமலே பிழை ஏற்பட்டு எமது மதிப்புக்குப் பங்கம் வந்துவிடுகின்றது. பேசுகின்றபோது கூட, ஒன்றை நினைத்து ஒன்றைப் பேசும் நிலமைகூட ஏற்படுவது உண்டு. இங்கு எமது மூளை எம்மை ஏமாற்றிவிடுகின்றது. பிறர் சுட்டிக்காட்டும்போது கூனிக்குறுகி நின்று விடுகின்றோம். இதனைச் சந்திக்காத மனிதர்கள் எவருமில்லை என்று சொல்லிவிடலாம். சில சமயங்களில் சில விடயங்களில் வீட்டு வேலைக்காரி கூட அறிவாளியாய்த் தொழிற்படுவாள். என்னால் முடியும். என்னால்தான் முடியும் என்று எவரும் கர்வம் கொள்ளல் மடமைத்தனம். உனக்குள்ளும் மடமை ஒழிந்திருக்கிறது என்று ஒரு சமயம் உணர்ந்து கொள்வாய். அது எப்படி, எங்கிருந்து, எவ்வகையில் வெளிப்படும் என்று எவருக்கும் புரியாது. நாம் என்று நாம் நினைப்பது கூட எமக்குச் சொந்தமில்லை என்பதே உண்மை. வெளிக்காரணிகளை, எமது என்று கையாளும்போதுகூட, நாம் தவறிவிடுகின்றோமே. சிலவற்றில் தவறு ஏற்படும்போது திருத்த முடியாது பிறர் உதவிகளை நாடுகின்றோம். எல்லாம் தெரிந்த மனிதன் என்று உலகில் எவருமில்லை. தெரிந்ததுகூட தெளிவுறும்போது அவன் உலகில் இருப்பதில்லை. இன்று எமக்கே சொந்தமானது. நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாய் இருக்கப் போகிறது. உதாரணமாகக் குடியிருக்கும் வீடு. சொந்தப்பெயரைக் கூட சில சந்தர்ப்பங்களில் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இல்லை வேறு எவருக்கோ இப்பெயர்



சொந்தமாய் இருக்கின்றது. எமக்கே உரிய இதயம் கூட அறுவைச் சிகிச்சையின்போது மாற்றப்பட்டு விடுகின்றது. உனக்கென்று எதுவுண்டு மானிடனே? இதை உணர்ந்தும் ஆசையில் உழன்று மாய்கின்றாயே!
நான் என்று சொல்வது உடலா? அதற்கு மேலே என்று விக்ரமன் பாணியில் சொல்லும் உயிரா? அதற்கு மேலே இரண்டும் கலந்த உணர்வா? அந்த நானே, என்னைப் புரிந்து கொள்ள முடியாதபோது நான் எனக்குச் சொந்தமாவதில்லையே. காலம் காலமாய் அளவாய், அவதானமாய், கண்ணும் கருத்துமாய் உடல் உறுப்புக்களுக்குப் பங்கம் வராதவகையில் பார்த்துப் பார்த்து எமது உடலுறுப்புக்களுக்கு உணவு பரிமாறுகின்றோம் அல்லவா? எங்கிருந்தோ வரும் நோய் எம்மை ஏமாற்றிவிடுகின்றதே! அவதானமாய்த் தானே இருந்தேன்? எப்படி இந்த நோய் வந்தது என்று திகைத்து நிற்கின்றோம் அல்லவா? காரணம்.... கேள்விக்குறி. பிரபலங்களை நோய் வந்து பின்னுக்குத் தள்ளி விடுகின்றதே. யாரோ போட்ட துப்பாக்கிக் குண்டு நடிகர் எம்.ஜி.ஆரின் குரலுக்குக் கங்கணம் கட்டியதல்லவா? 19 ஆண்டுகள் பிரபல அனுபவம் பெற்ற விமானஓட்டி ட்ரிஸ்டன் லோரைன், பிரிட்டிஷ் விமான நிறுவனத்தால் வெளியகற்றப்பட்டார். காரணம் புகழ் புரிந்த சாதனை. நினைக்காத ஏதோ எமது வாழ்க்கையில் நடந்து, வாழ்க்கையையே திசை திருப்பிவிடுகின்றது.

எம்மை அறியாமல் எமக்குள்ளே ஏற்படுகின்ற கோபம் எவருக்குச் சொந்தமானது? எமக்குத்தானே. அதை நாம் விரும்பி ஏற்றோமா? துணிவென்று பாடம் சொல்லும் நாமே இறப்பை எண்ணித் துவண்டு விடுகின்றோமே. எமக்குள் ஏற்படும் இந்த உணர்வு துணிவென்று நிமிர்ந்து நிற்கும் எம்மை ஏமாற்றி விடுகின்றதே. காலம் கற்றுத் தரும் பாடம் கல்லூரிப் பாடத்தைவிடச் சாலச்சிறந்தது. வாழ்க்கை கற்றுத் தரும் பாடத்தின் போதுதான் முன்னோர் எழுதிவைத்த அனுபவக் குறிப்புக்கள் மனிதனது மனதில் உறைக்கின்றன. இதனால் தான் முதியோர் மூதுரை எமக்குத் தேவை.

# வடக்கு மாகாண அரசின் .....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றைய நாடுகளுடனான வர்த்தக மற்றும் வணிக கடப்பாடுகள், கட்டுப்பாடுகள்.

5. போக்குவரத்து - சிவில் விமானப் போக்குவரத்து, ரயில், பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சர்வதேச வர்த்தக துறைமுகங்கள், கப்பல் மற்றும் ஒழுங்கு முறைகள், கலங்கரை, ஒளிகாட்டிக் கப்பல், எச்சரிப்புக் குறிப்புகள் மற்றும் மிதவைகள்.
6. தபால் மற்றும் தொலைத்தொடர்பு, தேசிய ஊடகங்கள்
7. போதைப்பொருள்கள் தொடர்பான ஒழுக்க விதிகளும் கட்டுப்பாடுகளும், நஞ்சு மற்றும் போதைவஸ்துக்கள்;
8. சக்தி அணு மற்றும் நீர் மின்சார உற்பத்தி எரிபொருள் எண்ணெய் தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் அபிவிருத்தி, எண்ணெய் வயல்கள், பெற்றோலியம் மற்றும்பெற்றோலியவிளைபொருள்கள்.
9. மாநிலங்களுக்கு இடையிலான விவகாரங்கள், தேசிய பொருளாதார திட்டமிடல், திட்டமிடல் மற்றும் வளப்பகிர்வு
10. சட்டம்மற்றும்நீதிமன்றங்களின் நிர்வா கம்
11. ஆழ்கடல், சமுத்திரக் கிடப்பு, மாநிலங்களுக்கிடையேயான ஆறுகள் மற்றும் நீர்ப்பாசனம்மாநிலங்களின் ஒப்புதலுடன்
12. தேசிய மக்கள் தொகை மற்றும் புள்ளி விவரம்.

**தேசிய ஆவணக் காப்பகம்**

**அட்டவணை 2**

மாநில அரசு பிரத்தியேகமாக சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்ட துறைகள்.

1. மாநில பொது நிர்வாகம்
2. மாநில சட்டம் மற்றும் பொது ஒழுங்கு
3. உள்ளூர் ஆட்சி
4. கிராமிய அபிவிருத்தி
5. காணி மற்றும் காணி அபிவிருத்தி
6. மாநில பொதுச்சேவைகள்
7. நிதி- அட்டவணையில் 1 இல் குறிப்பிடப்பட்டவை
8. மாநில திரட்டிய நிதி
9. மாநில பொலிஸ், சட்டம், ஒழுங்கு
10. கூட்டுறவுத்துறை, கூட்டுறவு அபிவிருத்தி
11. சுகாதாரம்
12. கல்வி
13. விவசாயம் மற்றும் கமநலசேவைகள்
14. மாநிலங்களுக்கு உட்பட்ட நீர்ப்பாசனம்
15. விலங்கு வேளாண்மை
16. வீடு மற்றும் கட்டுமானம்
17. ஆட்புல கடற்பரப்பினுள் மீன்பிடி
18. கடலோரப் பாதுகாப்பு
19. காடுகள் வனவிலங்குகள் மற்றும் மாநில சூழல் பாதுகாப்பு
20. கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி
21. சக்தி அட்டவணை, 1 இல் குறிப்பிட்டவை
22. உள்ளூர் துறைமுகங்கள், துறைகள் மற்றும் விமான சேவைகள்
23. போக்குவரத்து
24. மாநிலத்திற்குள்ளான சாலைகளும் கப்பல் போக்குவரத்தும்
25. நகர திட்டமிடலும் அமுலாக்கலும்;
26. வர்த்தகம் மற்றும் வியாபாரம்
27. கலாசார நடவடிக்கைகள் சம்பந்தமான ஒழுக்காற்று விதிகள், கலை கலாசார அபிவிருத்தி மற்றும் கலாசாரக் கல்வி
28. மாநில ஊடகத்துறை
29. நிவாரணங்கள், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம்
30. சுற்றுலாத்துறை
31. சமூகப்பாதுகாப்பு
32. சிறைகள், சிறைக்கூடங்களும், மறுசீரமைப்பு சீர்திருத்தம் மற்றும் நன்னடத்தை நிர்வாகம்
33. விளையாட்டுத்துறை
34. வியாபார கூட்டுத்தாபனங்கள் வங்கித்தொழில்,காப்புறுதி அத்துடன் நிதிசார் கூட்டுத்தாபனங்கள் நீங்கலாக, மாகாணத்திற்கென்றே வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களுடனான கூட்டுத்தாபனங்களைக் கூட்டிணைத்தலும் ஒழுங்குபடுத்துதலும், நீதிமுறையை ஒழுங்குபடுத்துதலும்
35. தொண்டு மற்றும் சமய, அறநிலைய நிறுவனங்கள்
36. மாநிலத்தில் வரலாற்று ரீதியான இடங்களைப் பாதுகாத்தல்
37. உள்ளக மற்றும் சர்வதேச கடன்கள், வெளிநாடுகளின் நேரடி முதலீடு தொடர்பான ஒழுக்க விதிகள் , சர்வதேச கொடை மற்றும் அபிவிருத்தி சார்பான உதவிகள்.
38. மாநில கணக்காய்வு
39. மாநில மக்கள் தொகை, புள்ளி விவரம்.
40. குடியியல் ஆவணங்களின் பதிவு
41. சொத்துக்களை மாற்றுதல் மற்றும் உறுதிகளின் பதிவு
42. மாநில விடயங்களில் உள்ளடக்கப்பட்டவற்றுக்கான வரிகள், தீர்வைகள் மற்றும் கட்டணங்கள்.

03. **கரைநிலம் சார்ந்த நில வளம்**
சகல கரைநிலம் சார்ந்த மாநிலங்களும் சமமான பொதுநீர்வள உரிமை கொண்டவையாக இருப்பதுடன், சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளைப் பின்பற்றுதலும் வேண்டும் - தாழ்நிலை கரைநிலம் சார்ந்த மாநிலத்தைப் பாதிக்கக்கூடிய ஏதாவது செயற்றிட்டத்தை மேல்நிலை கரைநிலம் சார்ந்த மாநிலம் முன்னெடுக்கும் போது தாழ்நிலை கரைநிலம் சார்ந்த மாநிலத்தின் கலந்தாலோசனையுடனும், ஒப்புதலுடனும் மேற்கொள்ள வேண்டும்.

04. **மத்திய மாநில அதிகாரப் பகிர்வு**
இந்த அரசமைப்பினால் எந்த ஒரு சமூகத்துக்கும் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதிக்கும் வகையிலான சட்டவாக்க அல்லது நிறைவேற்றுச் செயற்பாடுகள் சமஷ்டி அல்லது மாநில மட்ட அதிகாரிகளினால் செயற்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. (த)

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | 3 | | | |
| | | | | | | | | |
| | 6 | | | | 2 | | | 9 |
| | | | | | | | 1 | |
| | | | | 1 | | 4 | | 6 |
| 8 | 1 | 3 | 7 | | | 5 | | |
| 4 | 9 | | | 3 | | 6 | | 5 |
| | | 8 | | | 5 | | | |
| | | | | | 6 | 7 | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 3 | 6 | 7 | 8 | 1 | 9 | 4 |
| 6 | 4 | 7 | 1 | 2 | 9 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 1 | 3 | 4 | 5 | 2 | 6 | 7 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 6 | 7 | 4 | 8 |
| 8 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 7 | 4 | 2 | 8 | 3 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 4 | 1 | 8 | 5 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 7 | 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மீண்டும் வடிவேலு



மெட்ராஸ் என்டர் பிரைசஸ் சார்பில் எஸ். நந்தகோபால் தயாரிக்கும் படம், "கத்தி சண்டை". இதில் விஷால் ஹீரோவாக நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு வடிவேலு இதில் காமெடி வேடத்தில் நடிக்கிறார். ஹீரோயின் முடிவாகவில்லை. சுராஜ் இயக்குகிறார்.
அதிரடிக்கும், நகைச்சுவைக்கும் முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் படம் இது. சுராஜ், வடிவேலு இணைந்த "தலைநகரம்", "மருதமலை" படங்களின் நகைச்சுவை இப்போதும் ரசிக்கப்பட்டு வருகிறது. இந்தப் படத்திலும் அதே போன்ற நகைச் சுவைக் காட்சிகள் இருக்கும். படப்பிடிப்பு இந்த மாதம் தொடங்குகிறது என்று படக் குழுவினர் தெரிவித்தனர். இதே நிறுவனம் இப்போது விக்ரம் பிரபு- ஷாம்லி நடிக்கும் "வீரசிவாஜி" படத்தைத் தயாரித்து வருகிறது.

WhatsApp

மருத்துவர், அந்த மனிதரது உடம்பைச் சோதித்துவிட்டு "இன்னும் 8 மணி நேரம் தான் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள். அதற்குள் உங்களுக்குப் பிடித்தமான விட யங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளுங்கள்...." என்று கூறி அனுப்பினார்.
மாலை 5 மணி.... கண்ணீர் மல்க விடயத்தைத் தனது மனைவியிடம் சொன்னான் அந்தக் கணவன். அவள் துடித்துப் பதைத்து அழுதாள்.
கணவன், "எனக்கு உனது கையால் வெங்காயத் தோசையும், கெட்டி சட்னியும் செஞ்சு குடும்மா. இன்னும் 7 மணி நேரம் தான் மீதி இருக்கிறது" என்றான்.
அவளும் செய்து கொடுத்தாள்.
மாலை 7 மணி, "ராத்திரி சாப்பாட்டுக்கு மீன் குழம்பு வச்சுக் குடும்மா. இன்னும் 5 மணி நேரம் தான் இருக்கு...!!" என்றான்.
அவளும் செய்து கொடுத்தாள்.
இரவு மணி 10... "நல்ல பசும்பாலில் கொஞ்சமா சக்கரை போட்டு உனது கையால குடும்மா..... இன்னும் மூன்று மணி நேரம் தான் இருக்கு....! என்றான்.
மனைவி அதனையும் செய்தாள்.
இரவு 12 மணி. தூங்கும் மனைவியை எழுப்பினான் கணவன். அவள்.... "பேசாமல் படுங்க.... காலையில எழுந்தவுடன் எனக்கு ஆயிரம் வேலை இருக்கு. சொந்தக்காரங்களுக்குச்சொல்லி அனுப்பணும், ஐயருக்கு ஏற்பாடு பண்ணனும், சுடுகாட்டுக்கு புக் பண்ணணும்.... உங்களுக்கு காலையிலை எழுந்திருக்கிறவேலை கூட இல்ல...." என்றாள் கோபமாக.
கணவன்.....?????!!!!!!!!

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விலகிச் சென்ற உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**இடபம்:** பேச்சிலும், செயலிலும் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தைப் பிறரிடம் கூற வேண்டாம். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், தாய்வீட்டுப் பெருமையை நிலைநாட்டுவர்.

**மிதுனம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**கடகம்:** அனைவரிடமும் சாந்த குணத்துடன் பேசுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாகும். ஆதாயம் அதிகரிக்கும். காணாமல் தேடிய பொருள், புதிய முயற்சியால் கைக்கு வந்து சேரும்.

**சிங்கம்:** பின்விளைவு உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாறுதல் உருவாகும். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது.

**கன்னி:** பிறருக்காகப் பொறுப்பு ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டியைத் திறம்படச் சமாளிப்பீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**துலாம்:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறும் சூழல் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் கூடுதல் பணவரவு கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ அருளால், புதிய முயற்சி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள் செல்வாக்குடன் திகழ்வர்.

**தனுசு:** நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** மனதில் பதற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கும்பம்:** மனச் சாட்சிக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாயம் சீராகும். மாணவர்கள் பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றுவர்.

**மீனம்:** உறவினர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகும். தொழிலில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவைச் சமாளிக்கத் திணறுவர். வாகனம் ஓட்டும்போது மிதவேகம் பின்பற்றவும்.



♥ கௌசி ♥

காலம் செல்லச்
செல்ல உருவங்கள்
மட்டுமே மாறுகின்றன... !!!
அழகிய நினைவுகள்
இன்னும் இளமையாய்... !!!



# அவரவர் கவலை அவரவருக்கு!!

இது நாசா விஞ்ஞானிக்கே சவால் விடக்கூடிய யோசனை



இனிமே அறிவுகெட்ட நாயே என்று எவரையும் திட்டாதீங்கப்பா




ஓர் ஆண்
பொறுமை இழந்தால்
அவனது நிம்மதிதான்
கெடுகிறது.

ஒரு பெண்
பொறுமை இழந்தால்
ஒரு குடும்பத்தின்
ஒட்டுமொத்த நிம்மதியே
கெட்டுப் போகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறால் உருண்டைக் குழம்பு

## தேவையானவை

இறால் – 2 கப்
தக்காளி – 2
வெங்காயம் – 2
பூண்டு – 10 பல்
புளி – எலுமிச்சை அளவு
மிளகாய் தூள் – 2 தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
மஞ்சள் தூள் – 1 தேக்கரண்டி
தாளிக்க
– எண்ணெய், கடுகு, கறிவேப்பிலை

## செய்யும் முறை

- இறாலை தோல் உரித்துக் கழுவி சிறிது உப்புச் சேர்த்து மிக்சியில் போட்டு அரைத்து உருண்டைகளாகப் பிடிக்கவும்.
- புளியைக் கரைத்து அதில் மிளகாய் தூள், மஞ்சள் தூள், உப்புப் போட்டு வைக்கவும்.
- தக்காளி, வெங்காயத்தைப் பொடியாக நறுக்கவும். பூண்டைத் தோலுரித்து வைக்கவும்.
- அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து எண்ணெய் ஊற்றி, கடுகு, கறிவேப்பிலை போட்டுத் தாளித்து தக்காளி, வெங்காயம், பூண்டைப் போட்டு வதக்கவும்.
- பிறகு கரைத்து வைத்திருக்கும் புளிக் கரைசலைக் கொட்டவும்.
- நன்கு கொதித்து வரும்போது பாத்திரத்தை கீழே இறக்கி இறால் உருண்டைகளைப் போட்டு பிறகு மீண்டும் அடுப்பில் வைக்கவும்.
- தீயில் 15 நிமிடம் வைத்திருந்த பின்னர் குழம்பை இறக்கவும்.

## நாளை

பங்குனி -28
ஞாயிற்றுக்கிழமை
10.04.2016
திதி: திருதியை
மு.ப.10.25வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மு.இ.10.49 வரை
ராகுகாலம்:
04.36-06.06 வரை
சுபநேரம்:
09.06-10.36 வரை
சதுர்த்தி விரதம்
கார்த்திகை விரதம்



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 600 | 800 | 650 | 700 |
| நண்டு | 200 | 400 | 300 | 300 | 200 | 200 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 600 | 650 | – |
| பாரை | 400 | 500 | 500 | 500 | 500 | 600 | 420 |
| சுறா | 500 | 600 | 600 | 600 | 600 | 600 | 650 |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 500 | 450 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 400 | 450 | 400 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 350 | 300 | – | – |
| கும்பிளா | 300 | 350 | 300 | 300 | 400 | 400- | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 600 | – | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 300 | 200 | 350 |
| நகரை | 150 | 300 | – | – | 300 | – | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 100 | 100 | 150 | – |
| ஒட்டி | 250 | 250 | 150 | 150 | 300 | 250 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 200 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 180 | 400 | – | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 60 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 250 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 200 | 300 | 400 | – |








# முத்து பேஸ்கள்

முத்து பேஸ்கள் அறிமுகமாகியுள்ளன. விதம் விதமான வடிவமைப்பில், முத்தாலான கைப் பிடியுடன் உருவாக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 300 ரூபா தொடக்கம் 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 40 | 60 | 60 | 20 | 25 |
| கத்தரி | 50 | 40 | 50 | 50- | 50 | 40 | 30 | 40 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 100 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 40 | 80 | 60 | 50-60 | 40 | 50 | 40 |
| பாகல் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 50-80 | – | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 60 | 60 | 80 | 60 | 120 | 70 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30-40 | 50 | 15 | 30 |
| தக்காளி | 50 | 60 | 40 | 80 | 40-45 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 30-40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 40 | 40 | 15 | 20-30 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 25-30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 100 | 100 | 80 | 100-120 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 50-60 | 40 | 25 | 40 |
| கோவா | 50 | 70 | 50 | 80 | 40-60 | 100 | 60 | 40 |
| வெண்டி | 80 | 40 | 60 | 80 | 70-80 | 60 | 50 | 50 |
| போஞ்சி | 120 | 120 | 140 | 140 | 100-120 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 140 | 120 | 100 | 140 | 100-120 | 120 | 100 | 80 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 30-35 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70-80 | 100 | 70 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 140 | 160-170 | 200 | 180 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 80 | 100 | 140 | 100 | 100-120 | 120 | 50 | 80 |
| இராசவள்ளி | 160 | 140 | 140 | 160 | 120-140 | – | 80 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 350-500 | 300 | 350 | 350 |
| பனங்கிழங்கு | – | 04 | – | – | – | – | – | – |

# பயன் தரும் வீட்டுக் குறிப்புகள்!

- நறுக்கி வைத்த வெங்காயத்தில் சிறிதளவு வெண்ணெய் கலந்து வைத்தால் வெங்காயம் நீண்ட நேரம் புதுப் பொலிவுடன் இருக்கும்.
- தேங்காய் முடியை தண்ணீரில் வைத்தால் அல்லது முடியில் சிறிது உப்பை தடவி வைத்தால் கெடாமல் இருக்கும்.
- நகைகளைப் பஞ்சில் சுத்தி வைத்தால், புதுப் பொலிவுடன் இருக்கும்.
- வீட்டு ஜன்னல்களுக்கு கரும்பச்சை, கருநீலத்தினால் ஆன திரைச் சீலைகளைப் பயன்படுத்தினால் வெயிலின் உஷ்ணம் உள்ளே வராது.
- சமைக்கும் போது எரிபொருள் சிக்கனம் செய்ய வேண்டும். கீரையைத் தவிர எதைச் சமைத்தாலும் பாத்திரத்தை மூடி வையுங்கள்.
- சமையலறையிலுள்ள பாத்திரம் கழுவும் தொட்டியைச் சுத்தப்படுத்த, பழைய செய்தித்தாள்களைக் கொண்டு தேய்த்தால் அழுக்கு நீங்கி சுத்தமாக இருக்கும்.
- கத்தியைச் சூடாக்கி ரொட்டியை வெட்டினால் பிசிறு இல்லாமல் நினைத்த படி வெட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் குளிர்பான வர்த்தக நாமமாகக் கொகா-கோலா தெரிவு



அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற 10வது வருடாந்த ஸ்லிம் – நீல்சன் மக்கள் விருதுகள் நிகழ்வில் தொடர்ச்சியாக ஒன்பதாவது தடவையாக ஸ்லிம் நீல்சன், ஆண்டுக்கான இளைஞர்களின் குளிர்பான வர்த்தகநாமம் என்ற விருதினைப் பெற்றுக்கொண்டதன் ஊடாக கொகா–கோலா வர்த்தக நாமம், மீண்டும் ஒரு தடவை தாமே சந்தை முதல்வன் என்ற அங்கீகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது. இந்த வர்த்தக நாமமானது, இலங்கையர்களுக்கு புத்துணர்வூட்டி வந்துள்ளதுடன், தேசத்தின் இளைஞர்களுடன் விளையாட்டு, இசை, கொண்டாட்ட நிகழ்வுகள், சமூக செயற்றிட்டங்கள் என ஏராளமான வழிமுறைகள் ஊடாகத் தனித்துவமிக்க இணைப்பினைப்பேணி வருகின்றது. சிறந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இந்த விருதினை கொகா–கோலா ஸ்ரீலங்கா பிரைவேற் லிமிடட் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி சோனு க்ரோவர், கொகா–கோலா ஸ்ரீலங்கா பிரைவேற் லிமிடட் தேசிய சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஷாந்த பெர்னாண்டோ மற்றும் குழுவினர் பெற்றுக்கொண்டனர்.

> 2015ஆம் ஆண்டில் கொகா–கோலா கோக் ஒன்றினை பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற சர்வதேச ஊக்குவிப்பை முன்னெடுத்தது. இந்த ஊக்குவிப்பானது இலங்கையில் கொகா–கோலாவுடன் இணைந்து செல்லுங்கள் என்ற பெயரில் நடாத்தப்பட்டது.

இந்த வெற்றி குறித்துக் கருத்துரைத்த கொகா–கோலா ஸ்ரீலங்கா பிரைவேற் லிமிடட் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி சோனு க்ரோவர், இலங்கையின் இளைஞர்கள் எம்மீது நம்பிக்கை வைத்து தொடர்ச்சியாக ஒன்பதாவது தடவையாக ஆண்டுக்கான இளைஞர்களின் குளிர்பான வர்த்தக நாமம் என தெரிவுசெய்தமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். தொடர்ச்சியாக ஒன்பது வருடங்களாக இவர்களின் விசுவாசத்துக்குப் பொறுப்பாளர்கள் என்ற ரீதியில் எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை இத்தனை காலமும் பெற்றுக்கொள்வதற்கு உதவிய வாடிக்கையாளர்களின் கருத்துகளைக் கேட்டறிதலை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் முன்னெடுப்பது எமது கடப்பாடாகும். எமது நுகர்வோருடன் நாம் பேணும் நெருங்கிய தொடர்பானது, நாம் மிகச்சிறந்த உற்பத்திகளை அவர்களுக்கு அளிப்பதற்கும், பாவனையாளர்கள் அதனை ஏற்று தம்முடையதெனக் கருதுவதற்கும் இன்றியமையாததாகின்றது. உள்நாட்டுப் பாவனையாளர்கள் துரித கதியில் முன்னேற்றமடைந்து வருகின்றனர். இதனால் நாம் மாற்றங்கள் நிகழும் கணத்திலேயே அது குறித்து அறிந்து, அதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து மாற்றங்களை முன்னெடுக்கும் வகையில் நெகிழ்வுத்தன்மை, புத்தாக்கம், மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கேற்ப மாற் றங்களை செய்தல் போன்றவற்றை கைக் கொள்கின்றோம். கொகா–கோலா வர்த்தக நாமமானது, மில்லியன் கணக்கான நுகர்வோரின் உரித்தைப் பெற்றுள்ளது என்பதனை நாம் நம்புகின்றோம். கொகா- கோலா மகிழ்ச்சியை கொண்டு வருகின்றது என்ற எளிய வார்த்தைகளே வாடிக்கையாளர்களுடன் நாம் இணைப்பில் இருப்பதனை உறுதிப் படுத்துகின்றது. கொகா–கோலா வர்த்தக நாமமானது, நாம் முன்னெடுக்கும் அனைத்தையும் பிரதிபலிக்கின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விருதினைப் பெற்றுக்கொள்ள ஆதரவளித்த எமது பாவனையாளர்கள் அனைவருக்கும் இந்த வேளையில் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று தெரிவித்தார்.

**வணிகம்**


ஸ்லிம் – நீல்சன் மக்கள் விருதுகள் ஆனது இலங்கை மக்களின் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ள வர்த்தக நாமங்கள் மற்றும் ஆளுமைகளை அங்கீகரித்து அவர்களுக்கு விருதளித்துக் கௌரவிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது எந்தவொரு கொண்டாட்ட நிகழ்வும் கொகா–கோலா இன்றி பூரணத்துவம் பெறுவதில்லை. சித்திரைப்புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் முதற்கொண்டு நத்தார் கொண்டாட்டம் வரை அனைத்துப் பாரம்பரிய, கலாசார நிகழ்வுகளிலும் பல்வேறு வகையில் பங்கேற்று பாவனையாளர்களின் வாழ்வில் ஓர் அங்கமாக கொகா- கோலா இணைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. கொகா-கோலா வர்த்தக நாமத்தின் மையப் பெறுமானங்களாக விளங்கும் மகிழ்ச்சி, புத்துணர்ச்சி, நம்பிக்கை மற்றும் வேடிக்கை விநோதம் ஆகியவற்றை இந்தக்குளிர்பானம் பிரதிபலிக்கின்றது. அதன் 'தவற்ற ஸ்க் றிப்ட்' வர்த்தக சின்னம் முதற்கொண்டு, நத்தார் பண்டிகைக்கால அடையாளமாக விளங்கும் நத்தார் தாத்தா வரை, இலங்கையிலுள்ள கொகா- கோலா நிறுவனம் இலங்கையர்கள் மனதில் கொகா- கோலா வர்த்தக நாமத்தினைப் பதித்துள்ளது என்பதே உண்மையாகும். நிகரற்ற தரம், புத்துணர்வூட்டும் பாங்கு, மகிழ்வூட்டும் சுவை ஆகிய ஊடாக கொ்கா- கோலா ஆனது பல்லாயிரக்கணக்கான இலங்கையர்களை ஒன்றிணைத்து மகிழ்ச்சியான தருணங்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்துள்ளது.

2015ஆம் ஆண்டில் கொகா–கோலா,கோக் ஒன்றினைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற சர்வதேச ஊக்குவிப்பினை முன்னெடுத்தது. இந்த ஊக்குவிப்பானது இலங்கையில் கொகா–கோலாவுடன் இணைந்து செல்லுங்கள் என்ற பெயரில் நடத்தப்பட்டது. இந்த ஊக்குவிப்பானது வெளிப்படுத்தலின் சக்தியைப் பறைசாற்றுவதுடன், சமூக மற்றும் விளையாட்டுப் போக்குடனான வகையில் மகிழ்ச்சிகரமான உணர்வுகளையும், தருணங்களையும் பகிர்ந்துகொள்தலையும் முன்னிறுத்தியது. ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அமைந்த பொதுவான வார்த்தைகள் 500 மி.லீ மற்றும் 2 லீற்றர் கோக் போத்தல்களில் அச்சிடப்பட்டன. நுகர்வோர் தமக்கான தனித்துவமிக்க கொகா–கோலா போத்தல் பதிப்பினைப் பெற்றுக்கொண்டு கொகா–கோலாவுடன் தமது எண்ணங்களை வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கப்பட்டது. இந்த ஊக்குவிப்பானது இலங்கையர்களுக்கு ஏற்றவகையில், இலங்கையில் அடிக்கடி உபயோகிக்கப்படும் வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியது. இதன் ஊடாக இளைஞர்கள் தமது எண்ணங்களை கலாசார மற்றும் வேடிக்கை என பொருத்தமான வழிமுறைகளில் வெளிப்படுத்துவதற்கு வழியேற்பட்டது.

கடந்த ஐந்து தசாப்தங்களாக கொகா–கோலா நிறுவனமானது,அதன் பல்வகைப்பட்ட குளிர்பான வகைகளினை உருவாக்கி அளித்ததன் ஊடாக இலங்கை மக்களின் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்துள்ளது. இன்று இந்த நிறுவனமானது, குளிர்பான சந்தையில் கொகா–கோலா, கொகா–கோலா லைற், ஸ்ப்ரைட், பன்டா [illegible] சோடா, [illegible] சர்வதேச மற்றும் உள்நாட்டு வர்த்தக நாமங்களுடன் வெற்றி நடைபோடுகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### ஐபோன், ஐ பாட்டில் புதிய மாற்றங்கள்

விரைவில் சந்தைக்கு வரவிருக்கின்ற ஐ பாட்டில் நீங்கள் பயன்படுத்தாமல் இருக்கும் அப்பிளிகேசன்களை மறைத்து வைப்பதற்காக புது வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐபாட்டில் புதுவித அப்பிளிகேசன்கள் பொருத்தப்பட்டு வரவிருக்கின்றன, ஆனால் அவை எல்லாவற்றையும் நீங்கள் பயன்படுத்தப் போவதில்லை.

உங்களுக்குத் தேவையான குறிப்பிட்ட அப்பிளிகேசன்களை மட்டுமே பயன்படுத்துவீர்கள், இதனால் ஐபோனின் டிவைசில் பொருத்தப்பட்டு அப்பிளிகேசன்களான கொம்பாஸ், ஸ்ரொக்ஸ், வொய்ஸ் மெமோ போன்றவற்றை ஹைட் செய்து வைக்கும் விதமாக சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், அலைபேசியின் டிவைசில் இருந்து இதனை நீக்க இயலாதிருப்பின், இந்தக் குறியீட்டின் உதவியுடன் ஹைட் செய்து வைக்கலாம்.

### ஐபோன் 7, 7 பிளஸ் குறித்து பரபரப்பான தகவல்கள்

உலகத்தரம் வாய்ந்த அலைபேசிகளை வடிவமைத்து அறிமுகம் செய்யும் அப்பிள் நிறுவனம் அண்மையில் ஐபோன் எஸ்.ஈ இனை அறிமுகம் செய்திருந்தது.

இந்தஅலைபேசியானது,முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஐபோன் 6எஸ் மற்றும் 6எஸ் பிளஸ் என்பவற்றைக்காட்டிலும் தடிப்புக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.



எனினும் அடுத்ததாக அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ள ஐபோன் 7 மற்றும் 7 பிளஸ் என்பவை ஐபோன் 6எஸ் மற்றும் 6எஸ் பிளஸ் ஆகிய அலைபேசிகளை விடவும் குறைந்த தடிப்பு உடையதாக இருக்கும் என புதிய தகவல் வெளி யாகியுள்ளது.

தவிர எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தஅலைபேசியில் அப்பிள் ஏ10 புரொசஸ்ஸர் , பிரதான நினைவகமாக 3ஜிபி அல்லது 4ஜிபி ரம் உள்ளடக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

### வட்ஸ் அப்பின் புதிய வசதி

வட்ஸ் அப் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள புதிய வசதியை அளித்துள்ளது.

உலகளவில் அதிக மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் வட்ஸ் அப் செயலி,தனது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான புதுமைகளை அவ்வப்போது புகுத்தி வந்தது.

வட்ஸ் அப் குரூப் சாற்றில் 100 நபர்கள் மட்டுமே இருக்க முடியும் என்ற எண்ணிக்கையை 256 ஆக உயர்த்தியது. இதுபோல் பல மாற்றங்களைச் செய்து வந்தது. இந்த நிலையில் தற்போது மறையாக்கம் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.



இதன் மூலம் நாம் ஒருவருக்கு அனுப்பும் தகவல், ஒளிப்படம், வீடியோ என எதுவானாலும் மறையாக்கம் செய்யப்பட்டே பகிரப்படும். இதன் மூலம் நாம் மற்றவர்களுக்கு அனுப்பும் தகவல்களை வேறு எவரும் இடைமறித்துக் ஹேக் செய்ய முடியாது.

எனினும் இந்த வசதியைப் பெற வட்ஸ் அப்பை அப்டேட் செய்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- முஸ்லிம்கள் தமிழ் பேசுவோராக இருந்தாலும், அவர்கள் அடிப் படையில் தமிழர்கள் அல்ல. மாறாக ஆதிகாலம் முதல் இலங்கையில் அரபு மொழியில் பேசி வந்த அவர்கள் தமது தமிழ் சூழல் காரண மாகத்தமிழ் பேசுபவர்கள். இன்றும் கூட அவர்களின் பேச்சு வழக்கில் 20 வீதத்துக்கும் அதிகமான அரபுச் சொற்கள் உள்ளன.

அத்துடன் முஸ்லிம்கள் தம்மை தனி இனமாகவே நோக்குகின்றனர். இதுவரை காலமும் தமிழ் மக்களும் முஸ்லிம்களைத் தனி இனமாகவே பார்த்து வந்துள்ளனர். இதன் காரணமாகத்தான் வடக்கு மாகாண முஸ்லிம்கள் வேறுபடுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

அதேபோல், 34 சதவீதமாக வாழும் மட்டக்களப்பு முஸ்லிம்கள் 4 சதவீத காணிகளுக்குள் முடக்கப்பட்டு தமிழ்ப் பகுதிகளில் அவர்கள் சுதந்திரமாகக் காணிகள் வாங்கி வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. போர்க் காலத்தில் ஆயுதமுனையில் முஸ்லிம்களின் பல்லாயிரக்கணக்கான காணிகளும் பறிமுதல் செய்யப்பட்டமை, முஸ்லிம்கள் தனி இனமாகப் பார்க்கப்பட்டதால்தான் என்பதை மறுக்க முடியாது. அதுபோன்று அவர்களைத் தமிழ் அதிகாரிகள் கூட தமிழர்களாகப் பார்க்கவில்லை.

முஸ்லிம்களுடன் வாழ முடியாது எனத் தெரிவித்தே கல்முனை தமிழர்கள் தமக்கென தனியான பிரதேச செயலகத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். இவ்வாறெல்லாம் தமக்கு வேண்டிய நேரங்களில் முஸ்லிம்களை வேறாகப் பார்ப்பதும், பின்னர் முஸ்லிம்களையும் தமிழர்கள் என்று கூற முற்படுவதும் தமிழ் அரசியல் வாதிகளின் தொடரான நிலைப்பாடாகும்.

ஆகவே, வடக்கு மாகாண சபையின் மேற்படி பரிந்துரையை உலமாகட்சி முற்றாக நிராகரிப்பதுடன் கிழக்கு மாகாணம் தனியாக இருப்பதுடன், கிழக்குத் தமிழ் மக்கள் விரும்பினால் அவர்களின் பிரதேசங்களை மட்டும் வடக்குடன் இணைத்துக் கொள்ளலாம் என்பதே உலமா கட்சியின் நிலைப்பாடாகும். அவ்வாறு நடந்தால்கிழக்குமாகாண சபை சிங்கள மக்களையும் கொண்ட பெரும்பான்மை முஸ்லிம் மாகாண மாக இருக்கும் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## ரயிலிலிருந்து

சென்ற குடும்பஸ்தரான முல்லைத்தீவு, அலம்பிலைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை பீற்றர் (வயது -54) குடும்பஸ்தரே ரயிலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார். வவுனியா ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயில் வவுனியா காமினி மகாவித்தியாலயத்திற்கு அருகில் சென்றபோது, ரயிலிலிருந்து விழுந்துள்ளதாகவும், சாவடைந்தவரின் உடலை ரயில் சாரதி வவுனியா ரயில் நிலையத்தில் ஒப்படைத்து விட்டு, யாழ்ப் பாணத்தை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

இறந்தவர் வவுனியாவிலிருக்கும் தனது உறவினருடன் நேற்று மாலை 3மணியளவில் தொலைபேசியில் உரையாடும்போது, வெளிநாட்டிலிருந்து சகோதரன் வந்து யாழ்ப்பாணத்தில் நிற்பதாகவும், அவரைப் பார்க்க யாழ்ப்பாணம் செல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவரின் மனைவி, பிள்ளைகள் முல்லைத்தீவில் இருப்பதாகவும், மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்வதற்காக வவுனியாவுக்கு வந்துள்ளதாகவும், அதன் பின்னரே யாழ்ப்பாணம் செல்வதாகவும் உறவினரிடம் கூறியுள்ளார்.

சாவடைந்தவரை அடையாளம் காட்டிய உறவினரிடமிருந்து, பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். தற்கொலையா? அல்லது வேறு ஏதும் காரணமா என்ற கோணத்தில் விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இறந்தவரின் உடல் வவுனியா பொது வைத்தியசாலையில் இறப்பு விசாரணையை மேற்கொள்வதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(த-வ-21)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

35 நாள் நிரம்பிய தூய இன ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் மல்லாகத்தில் விற்பனைக்குண்டு.

071 282 0737

### விசேட வகுப்புக்கள் (Personal Class)

தரம் - 11 மாணவர்களுக்கான
கணிதம்
உயர்தர மாணவர்களுக்கான
இணைந்த கணிதம்

077 211 2291

### யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் ஈச்ச மோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் நான்குபேர் உள்ள குடும்பத்துக்கு வண்ணார்பண்ணை, ஒட்டுமடம்,ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை பகுதிகளில் தேவை.

077 025 0339

### தேவை

மானிப்பாய் ஆடிச்சந்தியில் இயங்கும் VISA LADIES SPOT (New Collection) புடைவைக் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

077 212 1250, 077 560 8260

### விற்பனைக்கு

பாவித்த நல்லநிலையில் உள்ள வீட்டுத் தளபாடங்கள் யாழ்.கோயில் வீதியில் விற்பனைக்குண்டு.

071 814 8150

### சட்டக் கல்லூரி அனுமதிப்பரீட்சை 2016

அனுமதிக்கான உயர் புள்ளியைப் பெற சிறப்பு வழிகாட்டல் வகுப்பு (அனுமதி மட்டுப்படுத்தபட்டது முந்துங்கள்.)
ஆரம்பம்: 09.04.2016
2.00PM (சனி)
T.P: 077 982 4284

D.C.M சென்றர், யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

### விற்பனைக்கு உண்டு

உழவு இயந்திரப் பெட்டி விற்பனைக்கு NPJK தொடருள்ளது.

(88533)(12.19.20)

077 044 5698, 077 3056 437



தெல்லிப்பழை அருள்மிகு வறுத்தலைவிளான்
மருதடி விநாயகர் ஆலயம்
புனராவர்த்தன
மகாகும்பாபிஷேகம்

மருதடி விநாயகப் பெருமான் அடியார்களே!

எங்கள் மருதடி விநாயகப் பெருமானுக்கு
புனராவர்த்தன பஞ்சகுண்டமகாகும்பாபிஷேகம்
நிகழும் பங்குனி மாதம் 29 ஆம் நாள்
(11.04.2016) திங்கட்கிழமை
காலை 9 மணி 10 நிமிடத்தின் மேல்
10 மணி 12 நிமிடத்துக்குள்ளாகவரும்
இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்
திருவருள் துணைகொண்டு நிகழவுள்ளது
என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்
தருகின்றோம். ஆசார சீலராகவந்து தரிசித்து
எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யும்
வண்ணம் தங்களை அன்புரிமையுடன்
கேட்டுக்கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ.சு. இராசேஸ்வரசர்மா
(ஆலய பிரதம அர்ச்சகர்)
பரிபாலனசபையினர்.

(70252)
(12.17.20)

### முதியோர் சுகவாழ்வு கழக கூட்டம்
### 09.04.2016

எமது முதியோர் சுகவாழ்வுக் கழகம் கடந்தகால கொடிய உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு நஷ்டஈடு, இழப்புக்கள், நிவாரணம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துக்காக கழகத்தினால் நடத்தும் இன்றைய கூட்டத்தில் சமுகமளித்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் - சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபம்
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

காலம் - இன்று (09.04.2016) சனிக்கிழமை
பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை

கழகத்தினால் வெளியிடப்பட்ட முதியோர் சுகவாழ்வுக்கான பத்திரிகை, சஞ்சிகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்.

077 606 8656, 077 355 3002

### Jaffna College Institute of Technology - Vaddukoddai

**Wanted**

**Qualified English & Sinhala lectures.**

Apply before 20.04.2016 to

Director
**Jaffna College Institute of Technology Vaddukoddai**

Tel.no: 021 225 0975
021 321 3139
email: ejcitsltnet.lk

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**WALK - IN INTERVIEW**

Walk in interview for appointments to the following posts will be held on 15.04.2016 at the Board Room of this University on the time indicated against the posts.

**Posts of Temporary Lecturer /Temparary Instructor in Music (Vocal) 09.30.am**

**Posts of Temporary Lecturer /Temparary Instructor in Music (Violin) 10.00am**

**Posts of Temporary Lecturer /Temparary Instructor in Music (Miruthangam) 10.15.am**

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time scheduled above with relevant certificates, NIC and Self prepared application

Registrar,
University of Jaffna.
07.04.2016

### விழவெள்ளி சமூக மேம்பாட்டு அமைய பயிற்சி நிலைய தொடக்கவிழா

காலம் : 10.04.2016 ஞாயிறு பி.ப 2.00 மணி

இடம்: மருதடி டச்சு வீதி,சாவகச்சேரி

தலைமை: திரு.இ. கைலைநாதன்
(ஓய்வுநிலை அதிபர்)

முதன்மை விருந்தினர்கள்:

கௌரவ சி.சிறிதரன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர்)

கௌரவ த. குருகுலராஜா அவர்கள்
(கல்வி அமைச்சர் வடமாகாணம்)

கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்கள்
(விவசாய அமைச்சர் வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

திரு.க. அருந்தவபாலன் அவர்கள்
(தலைவர் இலங்கைத் தமிழரசுக் கட்சி சாவகச்சேரி தொகுதி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(பயிற்சி பெற விரும்புவோர் நிகழ்வில் கலந்து கொண்டு விண்ணப்பிக்கலாம்)

நெறியாளர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



**இளையகுட்டி சின்னத்தம்பி (சுப்பிரமணியம்)**

(இளைப்பாறிய அதிபர்)

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் இளையகுட்டி சின்னத்தம்பி நேற்று (08.04.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமணி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் (கண்மணி) பாசமிகு கணவரும், குகனேசன் (திருகோணமலை) தயாபரன் (UK), பாஸ்கரன் (சாவகச்சேரி), நளாயினி (UK), சிவகுமார், கலாநிதி (தாவடி), இரவீந்திரன் (அமரர்) மலர்விழி (சாவகச்சேரி), புவனேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்திமதி, சியாமளா, கமலாம்பிகை, லக்சுமிகாந்தன், குமுதினி, குகராஜா, தயாநிதி, பஞ்சலிங்கம், மாதலி (பாப்பா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**சங்கத்தானை, சாவகச்சேரி.**
T.P: 077 25 36 249, 077 6548175
077 168 4087

(C/22316) (10,17)

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**திருமதி முத்துரத்தினம் சிவப்பிரகாசம்**

மலர்வு 08 . 04 . 1936



உதிர்வு 06 . 04 . 2016

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துரத்தினம் சிவப்பிரகாசம் 06.04.2016 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செந்திவேற்பிள்ளை - இலச்சுமிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகளும், சிவப்பிரகாசத்தின் பாசமிகு மனைவியும், பவானி (ஆசிரியை), நகுலேஸ்வரன் (P.H.I), பிருந்தா, நிவேதா, சந்திரிகாதேவி, சுகந்தி, வசந்தி, வசந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராஜா (மரண விசாரணை அதிகாரியும், J.P யும்), சூரியமதி, காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் சிவஞானசுந்தரம், சிவகுமார், கணேஸ்வரன், யோகநாதன், சர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பறுவதம், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் விஸ்வலிங்கம், சிவப்பிரகாசம், காலஞ்சென்ற கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபிசங்கர், சிவசங்கர், லியேனியா, பிங்களன், சிந்துஜன், மதுஷன், தரணியன், சாருஜன், சுஜன்.பிரகாஷ், நிருஷன், சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தலைவாசல்"
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

தகவல்:
**குடும்பத்தினர்**

**021 226 4754**

# கண்ணீர் அஞ்சலி



## தம்பையா பசுபதிப்பிள்ளை (பசுபதி)

எமது ஸ்தாபனத்தில் கடந்த 50 ஆண்டுகளாக தன்னலமற்ற சேவையாற்றிய தம்பையா பசுபதிப்பிள்ளை அவர்கள் கடந்த 06.04.2016 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழ வைத்த
ஐயாவே!
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில்
என்றும் வாழ்வீர்கள் ஐயா!

**S.V. முருகேசு**
**உரிமையாளர்-குணரட்ணம்,**
**ஊழியர்களும்.**

**தோற்றம்**
**21.03.1927**

**மறைவு**
**06.04.2016**

**S.V. முருகேசு**
**154,ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**S.V.M. (Pvt) Ltd.**
**122, டாம் வீதி, கொழும்பு-12.**

**S.V. முருகேசு**
**கரடிப்போக்கு சந்தி,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிராந்திய

வைச் சந்தித்தது. இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் முக்கியஅயல்நாடுகளுடனானஉறவுகள் தொடர் பில் தூதுக் குழுவினர் வினவியபோதே ஜனாதிபதி மேற் கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் கூறியுள்ளதாவது:-

இந்தியாவுடனான இலங்கையின் நட்புறவுபலநூற்றாண்டுகள்பழமை வாய்ந்தது. அது இந்தியாவிலிருந்துபெற்றுக்கொண்டபுத்தபெருமானின் செய்தியின் உறுதியான அடித் தளத்திலேயே கட்டியெழுப் பப்பட்டுள்ளது. சீனா உலகெங்கிலும் பெரும் முதலீடுகளைக் கொண்டுள்ள ஒரு முக்கிய வர்த்தக ஜாம்பவான். இலங்கை பல்வேறு துறைகளில் சீனாவுடன் பலமான உறவுகளைக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் பல தசாப்தங்களாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜேர்மனி வழங்கிவரும் உதவிகளுக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொழிநுட்பப் பயிற்சி, நீர் சுத்திகரிப்பு மற்றும் சிறுநீரக நோய் ஒழிப்பு தொடர்பில் அரசு மேற்கொண்டு வரும் ஏனைய நிகழ்ச்சித் திட் டங்களுக்கு வெளி நாட்டு உதவிகள் தேவை - என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஜேர்மன் நாடாளுமன்றக் குழுவினர், நாட்டின் நல்லிணக்கம், ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தியைப் பலப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் கொள்கைகளுக்குமுழுமையான ஆதரவை வழங்குகின்றோம்.

புதிய அரசு அமைக்கப்பட்டதிலிருந்து பல்வேறு முக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பாராட்டுத் தெரிவிக்கின்றோம். இலங்கை துரித வளர்ச்சி கண்டுவரும் ஒரு பிராந்தியத்தின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் மூலோபாய முக்கியத்துவம்மிக்க ஒரு நாடு என்று தெரிவித்துள்ளனர்.

சகல சமூகங்களும் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் வாழ்வதை உறுதி செய்யும்வகையில் முன் மொழியப்பட்டிருக்கும் புதிய அரசமைப்புக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதே தனது நோக்கமாகும், என்று ஜேர்மன் தூதுக்குழுவிடம் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் ஜெயபாலன்



புதுவளவு, கோப்பாய் தெற்கு. கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயபாலன் 2016.04.06 புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானசுப்பிரமணியம் மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானலக்சுமியின் (ஆசிரியர் - ஆவரங்கால் - புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம்) அன்புக் கணவரும், கார்த்திகா, பாவனா ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவகி, சங்கரபாலன், சிவபாலன் (கொழும்பு), கமலாதேவி (லண்டன்), இந்திரபாலன், தயாநிதி (கனடா), நந்தபாலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானராணி (லண்டன்), ஞானசம்பந்தன் (வ.இ.பி.சபை), ஞானச்சந்திரன் (விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்), நிர்மலாதேவி, சிவாஜினி (கொழும்பு), அரியரட்ணம் (லண்டன்), விஜிதா, சங்கர் (கனடா), சிவாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(ஜே/190) (11,18)

தகவல்: குடும்பத்தினர்.

**021 223 0158, 077 878 0814**

### இளையதம்பி வீரகத்தி
(செல்லையா)
(பருத்தித்துறை பல.நோ.கூட்டுறவு சங்க உத்தரவு பெற்ற வியாபாரி)



வேதவன ஒழுங்கை தும்பளை வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மத்தொனி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வீரகத்தி 08.04.2016 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மணிமாறன், மைதிலி (ஆசிரியர்/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை), மணிவண்ணன்(இ.போ.ச நடத்துனர் கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தை யாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04. 2016) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி,
கரவெட்டி.

தகவல்:
வீ.மணிவண்ணன் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

### திருமதி ஜெயந்தி இராஜசிங்கம்



மாலுசந்தி அல்வாய் தெற்கைப்பிறப்பிடமாகவும் நாகலிங்க சுவாமிகள் வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயந்தி இராஜசிங்கம் நேற்று (08.04.2016) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தங்கராசா-தங்கரத்தினம் தம்பதியரின் அருமை மருமகளும், ஜெயபாலன், பாலச்சந்திரன், சுந்தரம், மாலதி, வசந்தி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜசிங்கத்தின் (அஞ்சல் அலுவலகம் சங்கானை) அருமை மனைவியும், கார்த்திகா (மருத்துவபீடம்2ஆம் வருடம்-கொழும்பு பல்கலைக்கழகம்), துர்க்கா (க.பொ.த உயர்தரம் உயிர்முறைமை தொழில்நுட்பம் வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை.
0776450344 (J/213) (10,17)

தகவல்:
த.இராஜசிங்கம்
(கணவர்)

### திருமதி
### வடிவேலு தெய்வானைப்பிள்ளை



சிறுப்பிட்டி மத்தியை பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கு சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு தெய்வானைப்பிள்ளை நேற்று முன்தினம் (07.04.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி வடிவேலுவின் அன்பு மனைவியும் சிவகுணதேவி (நியூசிலாந்து) சிவலீலாதேவி (பிரதி அதிபர் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரட்ணகுமாரின் (நியூசிலாந்து) அன்பு மாமியாரும் நவரத்தினம் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி) சிவபாக்கியம், தங்கநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பெரிதம்பி, கனகசபை, சின்னம்மா, செல்வராசா, செல்லத்துரை மற்றும் செல்வராணி (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் மேற்கு கிந்துசிட்டி இந்து மயானத்தில் நேற்று (08.04.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சண்முகநாதன்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகநாதன் 07.04. 2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகமுத்து தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் கோமளம் தம்பதியரின் மருமகனும் பத்மராணியின் அன்புக் கணவரும் கவிதா காலஞ்சென்ற கார்த்திகா மற்றும் ராகுலன், தேவானந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாவரசன், விஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நித்திலாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற குகதாசன் மற்றும் சபாநேசன் ஆகியோரின் சகோதரனும் லோகநாதன் கருணைநாதன், ராணி, புவனரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 98B தேக்கவத்தை,
வவுனியா,
077 476 3067

தகவல்:
சி.சபாநேசன்
(சகோதரர்)

### நாகமணி துரைராசா
(ஓய்வு பெற்ற ஊழியர் இலங்கை மின்சாரசபை)



தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி துரைராசா 08.04.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி-நாகம்மா தம்பதியரின் புத்திரனும் சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிராசா-செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் கேமலதா (ஆசிரியை யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), கேமதரன், காலஞ்சென்ற ஜீவதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இ.ஜெயபாலன் (நிறை வேற்று உத்தியோகத்தர் வடபிராந்திய காரியாலயம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்) கே.குகரஜனி ஆகியோரின் மாமனாரும் தவேதன், பிறையழகன், துளசி, கஜவேணி ஆகியோரின் பேரனும் சபாரட்ணம், சிவபாலன், ஞானசேகரம், சந்திரசேகரம், குலசேகரம், அருந்தவமலர், சிவநேசன் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் தகனக்கிரி யைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
திருமதி கேமலதா ஜெயபாலன்
(மகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா ஸ்ரார், பொற்பதி வி.கழகங்கள் முன்னேறின திக்கம் இளைஞரின் தொடரில்

கரணவாய், ஏப். 9
திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம், பொற்பதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

**அன்ரனிஸ் - அண்ணா ஸ்ரார்**

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் இந்தத் தொடர், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டம் ஆரம்பமாகி முதல் ஐந்து நிமிடங்களுக்குள் இரு அணியாலும் 3 கோல்கள் பதிவு செய்யப்பட்டன. முதலாவது நிமிடத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சார்பாக பவுணனும் மூன்றாவது நிமிடத்தில் சசிகரனும் கோல்களைப் பதிவுசெய்ய 5 ஆவது நிமிடத்தில் அன்ரனிஸ் அணி சார்பாக பிரசாந் பதில்கோலைப் பதிவு செய்திருந்தார். தொடர்ந்து இரு அணியினரும் கோல்களைப் போடுவதற்குக் கடுமையாகப் போராடியபோதும் கோல் கணக்கில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் முதற்பாதியாட்டம் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதியிலும் அதே நிலை தொடர 2:1 என்ற கோல்கணக்கில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது.



**யுத் - சென்.பீற்றர்ஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வரணி யுத் விளையாட்டுக் கழகமும் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முதல் 15 நிமிடங்களும் மறைந்தன. 15 ஆவது நிமிடத்தில் சுகந்தன் பெற்ற கோலின் மூலம் பொற்பதி அணியின் ஆதிக்கம் ஆரம்பமாகியது. 25 ஆவது நிமிடத்தில் நிசாந்தனும் 46 ஆவது நிமிடத்தில் சாந்தனும் மேலும் கோல்களைப் பதிவுசெய்ய 3:0 கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பொற்பதி. (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதவுள்ளது.

**யுனைற்ரெட் வி.கழகத் தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணியை எதிர்த்து அடம்பன் ஐக்கிய அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதவுள்ளது. (ம-23)

# மாகாண மரதன் பிற்போடப்பட்டுள்ளது

மாங்குளம், ஏப். 9
வடமாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையே இன்று நடைபெறவிருந்த மரதன் ஓட்டப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார். அதிக வெப்பம் காரணமாக பாடசாலைகளுக்கான விளையாட்டு நிகழ்வுகளை இடைநிறுத்துமாறு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டதையடுத்தே இந்தப் போட்டிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் போட்டிகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-422)

# நீக்கிலஸ், விண்மீன் அணிகள் வென்றன நாமகள் வி.கழகத்தின் கால்பந்தாட்டத்தில்

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.நீக்கிலஸ், பலாலி விண்மீன் அணிகள் வெற்றி பெற்றன.

குறித்த தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந் துறை சென்.நீக்கிலஸ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர் ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதிக் கொண்டது. இதில் பலாலி விண்மீன் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய ஆண்டு விழா

அராலி,ஏப்.9
அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 76ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று பிற்பகல் 2 மணிக்கு நிலைய மண்டபத்தில், முன்பள்ளிச் சிறார்களுக்கான போட்டிகள், தரம் 1முதல் 5 வரையான மாணவர்களுக்கான போட்டிகள் (மாலை கட்டுதல்,கோலம் போடுதல்,இசைவும் அசைவும்) இடம்பெறவுள்ளன.

அத்துடன், நாளை காலை 6 மணிக்கு பெரியவர்களுக்கான மரதன் ஓட்டம், மாவட்டம்தழுவியசைக்கிள்ஓட்டம்,நிலைய சிறார்களுக்கான ஓட்டம்,மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம், முதியவர்களுக்கான ஓட்டம், தமிழர் பாரம்பரியப் போட்டிகள் (கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல்) என்பன இடம்பெற்று மாலை 3 மணிக்கு தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. போட்டிகளில் பங்கு பற்றும் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நிலையத்தின் இறுதி நாள் கலை நிகழ்வுகள் புதுவருடப்பிறப்பன்று, நிலையத்தின் பிரதான கலையரங்கில் மாலை 6 மணிக்குஆரம்பமாகிஇடம்பெறவிருக்கின்றன. இந்த நிகழ்வில் பாரம்பரிய கலை நிகழ்வுகள், பட்டிமன்றம், நடனம் மற்றும் நாடகம் என்பனவும் இடம்பெறவிருக்கின்றன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (வ-ரி)

## ராணுவத்துக்கென

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கின் பல பகுதிகளிலும் மீண்டும் தலைதூக்கும் விடயமாக படை யினரின் தேவைக்காகத் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கும் செயல் உருவெடுத்துள்ளது.

குறித்த செயலைக் கண்டித்து மண்கும்பான் மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இணைந்து நேற்று யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்களம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தீவகத்தின் பல பகுதிகளிலும் மக்களின் நிலங்களைப் படையினர் பறிக்கும் நடவடிக்கைகளை எதிர்த்தே நில அளவைத் திணைக்களத்தை முற்றுகை இடுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர். சி.சிறிதரன்,

தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை அபகரித்து வைத்திருக்கும் படையினர், மகிந்த காலத்து ஆட்சிபோன்று மீண்டும் அதனைச் சுவீகரிக்க எடுக்கும் முயற்சியை எமது மக்கள் விரும்பவில்லை. அதற்காக இந்த ஆட்சியை மக்கள் உருவாக்க வில்லை. தமது பூர்வீக நிலங்கள் தமக்கு மீளக் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வாக்களித்த மக்களை ஏமாற்றி அவர்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதை அனுமதிக்க முடியாது - என்றார்.

குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்துரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்,

நல்லாட்சிக்காக அன்னப் பட்சிக்கு வாக்களியுங்கள் அன்னப் பட்சி பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தாலும், பாலை மட்டும் உறிஞ்சும் . அதே போல் நல்லாட்சியில் நல்லதை மட்டுமே வழங்குவேன் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஆனால் தமிழ் மக்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக அன்னப் பட்சி பாலை இழுத்துச் சிங்கள மக்களுக்கும், மிஞ்சுகின்ற நீரையே தமிழ் மக்களுக்கும் வழங்க முயற்சிக்கின்றது. இதனால் மீண்டும் தமிழ் மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலை தொடருமானால் இன்று இந்த நில அளவைத் திணைக்களத்தின் பணிகளை முடக்குவதுபோல், இனி வரும் காலத்தில் மாவட்டச் செயலகங்களின் பணிகளை முடக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

இதேநேரம் இவ்வாறு இடம்பெற்ற முற்றுகைப் போராட்டத்தின்போது அங்கு சமுகமளித்த நில அளவைத் திணைக்களப் பணிப்பாளர், நாம் அரச ஊழியர்கள். பணிக்கப்படுவதை நிறைவேற்ற வேண்டியது எமது கடமை. இந்தவிடயம் தொடர்பிலும் எமது கடமையை மட்டுமே சட்டப்படி செய்கின்றோம்.

இருப்பினும் குறித்த விடயம் தொடர்பிலும் நில உரிமையாளர்களின் விருப்பத்துக்கு மாறாக அளவீடுகள் இடம்பெறமாட்டாது. ஏனெனில் அதுவும் சட்ட ஏற்பாடே. அதே போன்று இரகசியமான முறைகளிலும் இந்தப் பணி இடம்பெறாது என உறுதி அளித்ததுடன், இன்றைய நிலை தொடர்பில் நில அளவைத் திணைக்கள ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இன்று (நேற்று) இந்தப் பணி இடம்பெறாது எனத் தெரிவித்தார்.

இதனை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். இந்தப் போராட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன் , விந்தன் ஆகியோருடன் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் , கஜேந்திரன் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (த-வ-101)

## பற்றுச்சீட்டின்றி

பொதுமக்களிடம் பெற்றுக்கொண்ட பணத்தை அவர்கள் வங்கியில் வைப்பிலிட வில்லை. இரண்டு வாரங்களாகப் பணம் வைப்பிலிடப்படவில்லை.

இது தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய, சமுர்த்தி வங்கியில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது வங்கியின் அயன் சேவரில் பணம் வைப்பிலிடப்படவில்லை என்பதும், பெற்றுக் கொண்ட பணத்துக்குப் பற்றுச் சீட்டு வழங்கப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், தான் பெற்றுக் கொண்ட பணத்தை முகாமையாளரிடம் கையளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஏனைய இரு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஆரம்ப விசாரணையின் போது, தாம் பணத்தைப் பெற்று வைத்திருக்கவில்லை என்று தெரிவித்திருந்தனர். இருப்பினும் தொடர் விசாரணையின் போது, பணம் தம்மிடமே இருப்பதாகத் தெரிவித்து அதனை மீளச் செலுத்தியுள்ளனர்.

ஆகக் குறைந்தது இரண்டு தினங்களுக்கு ஒரு தடவையாவது பணத்தை வங்கியில் வைப்பிலிடவேண்டும்.

இருப்பினும் அதனை மீறிச் செயற்பட்டமையால், மேற்படி நான்கு உத்தியோகத்தர்களும் உடனடியாகச் சமுர்த்தி வங்கியிலிருந்து, பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ளனர். (த-வ-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது பெயர்ன் முனிச்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜேர்மனியின் கால்பந்தாட்டக் கழகமான பெயர்ன் முனிச் வெற்றி பெற்றது.

ஜேர்மனியின் கால்பந்தாட்டக் கழகமான பெயர்ன் முனிச், போர்த்துக்கல் கால்பந்தாட்டக் கழகமான பேய்பீக்கா ஆகிய அணிகளுக்கிடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 1-0 என்ற கோல்கணக்கில் பெயர்ன் முனிச் அணி வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக பெறப்பட்ட கோலை ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் மத்தியகள வீரரான அர்த்துரு விடல் பெற்றிருந்தார். (ம)



## யாழ். வலயத்தின் கரம் தொடர், மேசைப்பந்தாட்டம்

மாங்குளம், ஏப். 9

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான கரம் தொடர் நாளை மறுதினம் திங்கட்கிழமையும், மேசைப்பந்தாட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (ம-422)



# தாய் நாட்டுக்காக விளையாடாதோர் ஐ.பி.எல்லில் நன்றாக ஆடுவர்

### மலிங்கவை மறைமுகமாகக் தாக்கும் பிமல் ரட்நாயக்க

தாய் நாட்டுக்காக விளையாடாதவர்கள் இந்தியாவிற்குச் சென்று நன்றாக விளையாடவுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். இவர் மலிங்கவைக் குறித்தே இந்தக் கருத்தைப் பதிவு செய்துள்ளார் என்று கருதப்படுகிறது.

விளையாட்டுத்துறை தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். தொடர்ந்து உரையாற்றுகையில் - விளையாட்டுத்துறையில் ஒழுக்க விதிகள் உருவாக்கப்பட வேண்டும். விளையாட்டு வீரர்கள் பணத்தை அடிப்படையாகக்கொண்டு விளம்பரங்களில் தோன்றி அதைக் குடிக்கவும் இதைக் குடிக்கவும் எனக் கோரும் நிலைமை மாற்றப்பட வேண்டும். விளையாட்டு வீரர்களின் நிதி விவகாரங்கள் தொடர்பில் கட்டுப்பாடு அவசியமாகின்றது. குறைந்த பட்சம் விளையாட்டுகளின் அணித் தலைவர்கள் உப தலைவர்களுக்கேனும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். இவற்றில் தளர்வு நிலை கடைப்பிடிக்கப்பட்டதால்தான் மிகப்பெரும் தொடர்களில் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாதவர்கள் இந்தியாவின் கழக மட்டப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். என்றார்.

இலங்கை அணியின் ரி-20 தலைவராகச் செயற்பட்டு வந்து வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தொடர்பிலேயே அவர் இவ்வாறு மறைமுகமாகக் கூறியுள்ளார். உலகக் கிண்ணத் தொடரின் போது உபாதை எனக் கூறி பாதியில் விலகிக் கொண்ட லசித் மலிங்க இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியைப் பிரதிநிதித்துவம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## தீவுகளின் கிரிக்கெட் சபையை கடுமையாக விமர்சிக்கும் பிராவோ

உலகிலேயே மிகவும் ஒழுங்கில்லாத கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையொன்று இருக்கிறது என்றால் அது தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையாகத்தான் இருக்க முடியும் என்று விமர்சித்துள்ளார் தீவுகளின் நட்சத்திர சகலதுறை வீரரான பிராவோ.

தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்பாடுகளை அந்த அணியின் வீரர்களே தொடர்ந்தும் விமர்சித்து வருகின்றனர். இந்த வரிசையில் தற்பொழுது பிராவோவும் இணைந்துள்ளார். அவர், "எங்களுடைய கிரிக்கெட் சபைத் தலைவர் கமரூன், பக்குவமில்லாதவர். குறுகிய மனப்பான்மை கொண்டவர். கர்வமுள்ளவர். சொந்த நாட்டு வீரர்கள் மீதே கடும் விமர்சனங்களை வைத்தவர். எங்கள் நாட்டின் கிரிக்கெட் நிர்வாகம் சரியானவர்களிடம் இல்லை. எங்கள் கிரிக்கெட் சபை நிர்வாகிகள், இயக்குநர்களிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்புக் கூட வரவில்லை. அவர்கள் எங்களை பாராட்டவே இல்லை. உலகில் ஒழுங்கற்ற ஒரு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இருக்கிறதென்றால் அது மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையாகத் தான் இருக்க முடியும்"-என்று குறிப்பிட்டுள்ளார். (ம)



## நெருப்பை நெருப்பால் அடக்குபவர் கோக்லி

### - கில்கிறிஸ்ட் பெருமிதம்

நெருப்பை நெருப்பால் அடக்குபவர் கோக்லி என்று புகழாரம் சூட்டியுள்ளார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவரும் இலக்குக்காப்பாளருமான கில்கிறிஸ்ட்.

கோக்லி தொடர்பாக தெரிவிக்கையில் - விராட் கோக்லி அபாரமாகத் திகழ்கிறார். எங்கள் கண்களின் முன்னால் அவர் தலைமைத்துவத்தை டோனியிடம் இருந்து துரிதமாகக் கற்றுக் கொண்டதைப் பார்த்தோம். டெஸ்ட் தொடர்களில் அவர் எங்களுக்கு எதிராக, நெருப்பை நெருப்பைக் கொண்டு அடக்கும் உத்தியைக் கையாண்டார். அவர் இந்திய அணிக்கு உத்வேகமாகத் திகழ்கிறார், அணியை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லவும் உத்வேகமாகத் திகழ்கிறார். ஆனாலும் இது குறித்து முன் யோசனை எதையும் நான் தெரிவிக்கப்போவதில்லை. ரி-20 உலகக்கிண்ணத் தொடர் முடிந்தவுடன் டோனி இன்னும் சில காலம் ஆடப்போவதாகத் தெரிவித்துள்ளார். டோனியும் தலைமைத்துவத்தில் சளைத்தவர் அல்ல. அவர் இந்திய கிரிக்கெட்டுக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். ஆகவே அவர் விருப்பப்படும் தூரம் வரை செல்ல அனுமதிக்கப்படவேண்டும். விராட் கோக்லிக்கு இன்னும் குறைந்த பட்சம் 10 ஆண்டுகளுக்கான கிரிக்கெட் மீதமுள்ளது. எனவே முழு அளவில் தலைவராக இயங்க அவருக்கு இன்னும் ஏகப்பட்ட கால அவகாசம் உள்ளது. இந்திய அணிக்கும் ஆஸ்திரேலியா அணிக்குமான போட்டி மனப்பான்மை நான் ஆடும் காலத்திலிருந்தே தொடர்ந்து இருந்து வருகிறது. ஆனால் இதெல்லாம் மரியாதை நிமித்தமாகவே நடைபெறுகிறது. எவ்வளவு போட்டி மனப்பான்மையோ அந்த அளவுக்கு எதிரணியினரை ஒருவருக்கொருவர் மதிப்பதாக அர்த்தம். மொத்தமாக இரு அணிகளுக்குமான பிணைப்பு வலுவாக உள்ளது இதற்கு நாம் ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும் - என்றார். (ம)

## முதல் இரு வாரங்களில் யுவராஜ் களமிறங்க மாட்டார்

ஐ.பி.எல். தொடரில் முதல் இரு வாரங்கள் யுவராஜ் களமிறங்க மாட்டார் என்று அவரது அணியான ஹைதரபாத் நிர்வாகம் அறிவித்துள்ளது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் பொழுது யுவராஜ்சிங் கணுக்காலில் காயம் அடைந்தார். இதனால் அவர் அரையிறுதியில் ஆடவில்லை. ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் யுவராஜ்சிங்கை ரூ.7 கோடிக்கு ஹைதரபாத் சன் ரைசர்ஸ் அணி வாங்கியது. ஆனால் காயத்தில் இருந்து இன்னும் குணமடையாததால் அவர் முதல் இரண்டு வாரங்கள் விளையாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஹைதரபாத் அணியின் பயிற்சியாளர் மூடி தெரிவித்துள்ளார்.

மூடி தெரிவிக்கையில் - யுவராஜ்சிங் போன்ற வீரர் எந்த அணிக்கும் முக்கியமான வீரர். அவர் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றி தேடித்தரக்கூடியவர் மட்டும் அல்ல. மத்திய பந்துப்பரிமாற்றங்களைச் சிறப்பாக வீசக்கூடியவர். மத்திய வரிசையில் வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தே அவரை ஏலத்தில் எடுத்தோம். ஆனால் வருத்தத்திற்குரிய விடயமாக, ஐ.பி.எல். தொடரில் அவர் இரண்டு வாரங்கள் விளையாட முடியாது. காயத்தில் இருந்து எத்தனை நாள்களுக்குள் மீள்வார் என்பது எங்களுக்கு தெரியாது - என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய சாரணர்களுக்கான கலந்துரையாடல்

இடம் : கல்லூரி விடுதி மண்டபம்

காலம்: 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை.

விடயம்: நூற்றாண்டு சாரணிய செயற்பாடு தொடர்பான ஆவணப்படுத்தலும் தகவல் திரட்டலும்
குழுவின் நூற்றாண்டையொட்டிய செயற்திட்டங்கள் குறித்து ஆராய்தல்

குறிப்பு:
4 ஆவது யாழ்ப்பாணம் சாரணர் குழுவில் ஒரு வருடங்களுக்கு மேல் சாரண சேவையில் ஈடுபட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஏற்பாடு:**
**யாழ் இந்து திரிசாரணர் குழு**

## Engineering technology
(பொறிமுறை தொழிநுட்பவியல்)

2016 A/L Day இற்கான வினாவிடை மீள்சுழற்சி வகுப்புக்கள் ஆரம்பம்.

2017/2018 A/L வகுப்புக்களும் செய்முறை வகுப்புக்களும் ஆரம்பம்.

N.S றஜீதரன்
(வாரத்தில் ஏழு நாள்கள்)

Science Corner
மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்

ஆரம்பம்: 11.04.2016 மாலை 4.30 மணி

தொடர்புகளுக்கு: 076 996 6252
077 611 6724




## கண்ணீர் அஞ்சலி



**சுப்பிரமணியம் ஜெயபாலன்**

எமது பாடசாலையின் கணிதபாட ஆசிரியை
திருமதி ஞானலட்சுமி ஜெயபாலன்
அவர்களின் அன்புக் கணவர்
**சுப்பிரமணியம் ஜெயபாலன்**
அவர்களது அகால மரணச்செய்தி கேட்டு வேதனை அடைவதோடு அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு

எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
**யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்,**

## நூல் வெளியீடு

சுஜீந்தன் & நீதுஜன்
அலை அழித்த தமிழ்



**10.04.2016 ஞாயிற்றுக்கிழமை**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**
**சபாலிங்கம் அரங்கு**
**மாலை 4.00 மணி**

உலக, ஈழ தமிழ் வரலாறின் மறைக்கைபட்ட மறுக்கப்பட்ட பக்கங்கள் சுஜீந்தன் & நீதுஜனின் இணைந்த கற்பனை கலந்த உண்மைச் சம்பவங்களின் எழுத்துருவாக்கமாக அலை அழித்தத் தமிழ் 300 பக்கங்களில் அந்திவானம் பதிப்பகத்தின் வெளியீட்டில் முற்றிலும் மாறுபட்ட நூல் வெளியிட்டின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஏற்பாட்டுக் குழு

விளம்பர அனுசரணை
நடராஜா கஜந்தன்
**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**
38,40,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 0212217878, 7877

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும் பொமேரியன் ஆண்.பெண் நாயும் பொக்கட்ஸ் பனியர் ஆண் நாயும், ஒரு வயது நிரம்பிய யமுனா பாறி கிடாயும்.45நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும் சில்க்கி, வெள்ளடியன் வான்கோழிக்குஞ்சு.

**மயூரன் பாம் சென்றர்**
**நீர்வேலி கந்தசாமி கோயிலடி.**

**தொடர்பு: 077 015 8690**

## விற்பனைக்கு

**Bajaj 4s Champion** மற்றும் **Boxer** மோட்டார் சைக்கிள்கள், மிக உன்னத நிலையில் உள்ள **SISIL** குளிர்சாதனப் பெட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 315 1500**

## SHAMROCK
**ஈச்சமோட்டை, யாழ்.**

**இரண்டாம் தவணைக்கான வகுப்புகள் யாவும் இன்று (09.04.2016) சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.**

**விடுமுறை நாள்களில் விசேட வகுப்புக்கள் நடைபெறும்.**

## நியத்த ஜய

வெற்றி வாரம் : 452
திகதி : 08.04.2016
வர்ணம் : நீலம்

வாசி தவாச

விஷேட வெற்றி இலக்கம்
**1906**

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 10,511,540/=

வெற்றி இலக்கங்கள்
**05 12 15 19**

ஆங்கில எழுத்து
**U**

12.04.2016 அடுத்த செவ்வாய்க்கிழமை

Tel: 011 4 824 824

## வடிவமைப்பாளர்கள் தேவை

வட மாகாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனத்துக்கு வேகமும், படைப்பாற்றலும் உடைய கணினி வடிவமைப்பாளர்கள் பகல், இரவு முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ வேலைசெய்யக் கூடிய இருபாலாரும் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- Adobe Photoshop
- Adobe InDesign
- Adobe PageMaker
- CorelDRAW


தெரிந்தவர்கள், பக்க வடிவமைப்பாளர்கள் தங்கள் சுயவிவரங்களுடன் **11.04.2016** *திங்கட்கிழமை* காரியாலய நேரத்தில் கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.



**ES Printers** 021 492 7471 / 021 492 7472
357, Kasthuriyar Road, Jaffna. esprintersjaffna@gmail.com

## வல்லிபுரம் செல்வராசா

(ஓய்வு பெற்ற பொறியியலாளர் கட்டடத் திணைக்களம் யாழ்ப்பாணம்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நாயன்மார் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு வல்லிபுரம் செல்வராசா நேற்று (08.04.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-லக்ஷ்மி தம்பதியரின் சிரேஷ்ட மகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும் Dr.அரிஞ்சிகை(அபி) (கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை), Dr.குகப்பிரிகை(சுபி) (யாழ் போதனா வைத்திசாலை), அரிசூதனன்(பகி) (ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜேந்தினியின் மாமனாரும் சறோஜா, மனோகரராஜா, கிரிஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவன்சனா, ஹரிடக்சயா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான விமலாதேவி, துரைசிங்கம், இராணி மற்றும் நவரத்தினம் (கொழு ம்பு) இந்திராதேவி (பெல்ஜியம்) தனபாலசிங்கம்(டுபாய்) ஆகியோரின் மைத்துன ருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04. 2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**021 222 6966**

**இல. 28, பாரதி வீதி,**
**நாயன்மார் கட்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.